கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

25 விளம்பரம்

416-282-8059 416-282-4978

E-mail: vlambaram@sympatico.ca

www.vlambaram.com
www.tamilvanakkam.com



RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
வேறு கிளைகள் எங்கும் இல்லை



நதி 25 | பாலம் 22 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 15, 2015


# லிபரல் கட்சியின் புதிய அமைச்சரவை

லிபரல் கட்சி 2015 ஒக்ரோபர் 19இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கனேடிய நாடாளுமன்றத்தில் மொத்தமாக உள்ள 338 ஆசனங்களில் 184ஐ பெற்றதன் மூலம் கனேடிய ஆளுநர் டேவிட் ஜோன்சன் லிபரல் கட்சியின் தலைவர் ஜஸ்ரின் ரூடோவை கனேடிய நாடாளுமன்றத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு கேட்டார்.

தெரிவு செய்யப்பட்டிருந்ததாலும், 50 பெண்கள், 21 இந்திய வம்சாவளியினர், 8 பூர்வீக குடிமக்கள் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்ததாலும் மற்றும் அனுபவம் உள்ளவர்கள், புதியவர்கள் என எல்லா விதமானவர்கள் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்ததாலும் இவர்களில் இருந்து எல்லாவித தகுதி

பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும், அநுபவம் மிக்கவர்களும், புதியவர்களும் இருக்க வேண்டும், கனடாவின் எல்லா சமூகங்களையும், பூர்வீக குடிகளையும் பிரதிநிதிப்படுத்த வேண்டும். வயதில் கூடியவர்களும், இளைஞரும் இருக்க வேண்டும் என்பவற்றை கருத்தில் கொண்டே தமது



ஜஸ்ரின் ரூடோ உட்பட 31 அமைச்சர்கள் 2015 நொவெம்பர் 04ஆம் திகதி Rideau Hall இல் கனேடிய ஆளுநர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றனர். இதற்கு பலநாட்களுக்கு முன்னரே லிபரல் கட்சியின் தலைவர் தனது அமைச்சரவையை பின்வரும் காரணங்களை மனதில் கொண்டு தெரிந்து எடுத்து விட்டார் என ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டன. லிபரல் கட்சியில் கனடாவின் எல்லா மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து உறுப்பினர்கள்

களுடனும் ஒரு அமைச்சரவையை தெரிவு செய்வது ஜஸ்ரின் ரூடோவிற்கு இலகுவான விடயமாக இருந்திருக்கும் எனவும் அவ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

லிபரல்கட்சித் தலைவர் அமைச்சரவை சிறிதாக இருக்க வேண்டும், (கடந்த அமைச்சரவையில் 39 அமைச்சர்கள் இருந்தார்கள்) ஆண்களும் பெண்களும் சமமாக இருக்க வேண்டும், கனடாவின் எல்லா மாகாணங்களையும்

அமைச்சரவையை தெரிவு செய்வார் என கூறப்பட்டது.

2015 நொவம்பர் 04இல் பதவியேற்ற 31 பேரைக் கொண்ட அமைச்சரவையில் 15 பேர் பெண்கள் ஆவர். ஒன்ராரியோ மாகாணத்தில் இருந்து 11 பேரும் (இதில் 7 பேர் GTA), குவிபெக் மாகாணத்தில் இருந்து பிரதமர் உட்பட 7 பேரும், பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் இருந்து 3 பேரும், மனிற்ரோபா


தொடர்ச்சி 03ஆம் பக்கம்



Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc


LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

DENTAL OFFICE
DENTAL IMPLANT • ROOT CANAL • WISDOM TOOTH EXTRACTION
Dr. Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS (Glasg) DENTAL SURGEON
2 LOCATIONS
3150 Eglinton Ave. East, Unit 5 Markham/Eglinton | Tel: 416.264.3232
3351 Markham Road, Unit 129, Markham/Steeles | Tel: 416.609.2022

Buying Selling Residential & Commercial
Sothees Means Service
SOTHEES Kathirgamathamby
Sales Representative
HOMELIFE / Miracle Realty LTD., Brokerage
*Independently Owned Operated
* Free visa
* Free lawyer fee
* Home Warranty
416.704.1179
Toll Free: 1855 SOTHEES


HOMES FOR SALE
*COMMERCIAL*INVESTMENTS
Markham & 14 th ave
1369k
4 car garage executive w/o luxury home approxi 4000 sqft
Ajax
429k
3 bm 3 wsrm
Finch and markham
549k
4 bm 3 wsrm w/fam rm sep entrance live &rent
Mccocowan/finch
2 plus 1 den 2 wsrm
scarborough
499k
3 bm 2wm fin basement sep entr
Markham
95k
1100/- rent all included
Cafetaria
14 years of service
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
COMMISSION NEGOTIABLE GUARANTEED SALE
PAT WILL BEAT ANY DEAL*!!
Century 21
Hall of Famer
80 Corporate Dr. Suite 208
Toronto M1H3G5
416-290 1200


Allstate
You're in good hands.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca


THINKING OF SELLING, BUYING OR INVESTING
Always committed to work in the client's best interest
Act with Market Conditions
Exposing Your Property to 1000's of Potential Buyers
Call me to find out how much your home worth.
Free Market Evaluation without any Oblications
TRUST
HONEST
GUARANTEE
We do sell Cottages & Recreational Properties
Muthiah Sivabalan
Sales Representative
Friendly and Confidential Service Just Call
Cell: 416.399.6640
msbalan78@gmail.com
HomeLife/GTA Realty Inc.
Higher Standards Agents... Higher Results!


Friends
MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257

# லிபரல்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மாகாணத்தில் இருந்து 2 பேரும், அல்பேட்டா மகாணத்தில் இருந்து 2 பேரும் மற்றும் சஸ்கச்சுவான், நோவாஸ்கோசியா, நியூபிரண்ஸ்விக், நியூபவுண்லாந்து, பிரின்ஸ்எட்வேட் தீவுகள், நுணவிற் பிரதேசம் ஆகியவற்றில் இருந்து தலா ஒருவருமாக 31 பேரும் அமைச்சரவைக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

லிபரல்கட்சிக்கு தெரிவு செய்யப்பட்ட 21 இந்தியா வம்சாவளியினரில் (ஒரு தமிழர் உட்பட), 17 பேர் சீக்கிய சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களில் இருந்து 4 பேர் அமைச்சரவைக்கு தெரிவு செய்யப்பட்டனர். இவர்களைவிட பூர்வீக குடிமக்கள், ஆப்கானிஸ்தானில் பிறந்த பெண்மணி, மாற்றுத்திறனாளிகள் என எல்லாவகையினரும் இந்த அமைச்சரவை யில் அடங்குகின்றனர். இந்த அமைச்ச ரவையில் 13 பேர் அனுபவசாலிகள் மற்றும் 18 பேர் புதியவர்கள் ஆவர்.

பிரதமர் உட்பட புதிய அமைச்சரவை பதவி ஏற்ற பின்னர் ஜஸ்ரின் ரூடோ மக்களோடு மக்களாக கலந்து படங்கள் (Selfie) எடுத்தார். அதைத் தொடர்ந்து கனடா முழுவதிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளில் உள்ள மாணவர்களுடன் வீடியோ கலந்துரை யாடலை நடத்தினார்.

புதிய நாடாளுமன்றம் எதிர்வரும் 2015



டிசம்பர் 03ஆம் திகதி கூட உள்ளது. அதற்கு அடுத்தநாள் டிசம்பர் 04ஆம் திகதி புதிய அரசின் திட்டங்களை ஆளுநர் தனது சிம்மாசனப் பிரசங்கத்துடன் ஆரம்பித்து வைப்பார்.

பல புதிய அமைச்சுக்களின் பெயர்களில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளன. தற்போது அகதிகள், காலநிலை மாற்றம் (Climate Change) மற்றும் விஞ்ஞானம் என்பவற்றிற்கு அமைச்சுகளின் பெயரில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

## புதிய அமைச்சரவை

### குவிபெக் மாகாணம்

1. பிரதமமந்திரி, அரசுகளுக்கிடையேயான விவகாரங்கள் மற்றும் இளையோரின் அமைச்சர் - Justin Trudeau
2. வெளிவிவகார அமைச்சர் - Stephane Dion
3. குடும்பம், குழந்தைகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் Jean-Yves Duclos
4. போக்குவரத்து அமைச்சர் - Marc Garneua
5. சர்வதேச அபிவிருத்தி மற்றும் பிரஞ் அலுவல்களுக்கான அமைச்சர் - Maire Claude Bibeau
6. கனேடிய பாரம்பரிய அமைச்சர் - Melanie Joly
7. தேசிய வருவாய் அமைச்சர் - Diane Lebouthillier

### ஒன்ராரியோ மாகாணம்

8. குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் - John McCallum
9. விஞ்ஞானம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான அமைச்சர் - Navdeep Singh Bains
10. நிதி அமைச்சர் - William Morneau
11. பூர்வீக குடிகள் மற்றும் வடபிரதேசத்துக்கான அலுவல்கள் அமைச்சர் - Carolyn Bennett
12. சர்வதேச வர்த்தக அமைச்சர் - Chrystia Freeland
13. சுகாதார அமைச்சர் - Jane Philpott
14. சுற்றுப்புறச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சர் - Catherine McKenna
15. ஜனநாயக நிறுவனங்கள் அமைச்சர் - Maryam Monset
16. விஞ்ஞானத்துறை அமைச்சர் - Kristy Duncan
17. பெண்கள் விவகார அமைச்சர் - Patricia A Hajdu
18. சிறுவணிக மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் - Bardish Chagger

தொடர்ச்சி 04ஆம் பக்கம்




# லிபரல்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம்

19. சட்டமா அதிபர் மற்றும் நிதி அமைச்சர் - Jody Wilson - Raybould
20. தேசிய பாதுகாப்பு அமைச்சர் - Harjit Singh Sajjan
21. விளையாட்டுத்துறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் விவகார அமைச்சர் - Carla Qualtrough

மனிறோபா மாகாணம்

22. இயற்கைவளத்துறை அமைச்சர் - James Carr
23. வேலை வாய்ப்பு, பணிப்பிரிவு வளர்ச்சி மற்றும் தொழில்த்துறை அமைச்சர் - MaryAnn Mihychuk

அல்பேட்டா மாகாணம்

24. படைவீரர்களின் அலுவலக்கள் அமைச்சரும் தேசிய பாதுகாப்பு இணை அமைச்சர் - Kent Hehr
25. உள்கட்டமைப்பு மற்றும் சமூகங்களுக்கான அமைச்சர் - Amarjeet Sohi

சஸ்கச்சுவான் மாகாணம்

26. பொதுப்பாதுகாப்பு மற்றும் அவசர தயார்நிலை அமைச்சர் - Ralph Goodale

நோவஸ்கோசியா மாகாணம்

27. நிதித்துறை கருவூல நிறுவன சபைத்தலைவர் - Scott Brison



நியூபிரண்ஸ்விக் மாகாணம்

28. நாடாளுமன்ற அரசவை தலைவர் - Dominic LeBlanc

29. பொதுச்சேவைகள் மற்றும் அரசகொள்வனவுக்கான அமைச்சர் - Judy Foote

பிரின்ஸ் எட்வேட் தீவுகள் மாகாணம்

30. விவசாயத்துறை மற்றும் விவசாய உற்பத்தி உணவுகளுக்கான அமைச்சர் - Lawrence MacAulay

நுணவிற் பிரதேசம்

31. மீன்பிடித்துறை சமுத்திரம் மற்றும் கனேடிய கரையோர காவல்துறை அமைச்சர் - Hunter Tootoo

கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ எதிர்வரும் 30 நாட்களில் உலகத் தலைவர்கள் பங்குபற்றும் நான்கு முக்கிய மாநாடுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

நொவம்பர் 15இல் Antalya, Turkey இல் ஆரம்பமாகும் G-20 மாநாட்டில் கனேடிய பிரதமர் முதன்முறையாக உலகத் தலைவர்களை சந்திக்க உள்ளார். இம்மாநாடு இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது.

இதைத்தொடர்ந்து மணிலா, பிலிப்பைன்ஸ் இல் நடைபெற இருக்கும் APEC மாநாட்டில் நொவம்பர் 18இல் பிரதமர் கலந்துகொள்ள இருக்கிறார்.

கனேடியப் பிரதமர் Valletta, Malta இல் நடைபெற இருக்கும் பொதுநலவாய தலைவர்களது மாநாட்டில் நொவம்பர் 27இல் கலந்து கொள்வார். இந்த 24ஆவது பொதுநலவாய தலைவர்களது மாநாடு நொவம்பர் 27இல் இருந்து 29வரை நடைபெற உள்ளது.

இத்தொடரில் இறுதியாக கனேடியப் பிரதமர் காலநிலை மாற்றம் பற்றி ஆராயப்படும் மாநாட்டில் Paris, France இல் நொவம்பர் 30இல் கலந்துகொள்ள உள்ளார். இம்மாநாடு டிசெம்பர் 11, 2015வரை நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் கலந்துகொள்ள முன்னர் ஜஸ்ரின் ரூடோ கனடா வந்து நொவம்பர் 23இல் கனேடிய மாகணங்களின் முதல்வர் களை சந்தித்து கலந்துரையாட உள்ளார்.




# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?

நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
அனைத்து கடன்களையும் ஒன்றாக்க



மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,
**"மோட்கேஜ் கிளினிக்"**
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011
திங்கள்—வெள்ளி (call for an appointment)
**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**




உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

எமது முகவரி
**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
Lic # 10530
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-356-3487

# கனடாவின் # 1 மோட்கேஜ் நிறுவனம்




ஆட்சி மாற்றத்தின் பின்னர், தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகளில் இரண்டு விடயங்களுக்கு தீர்வினை வழங்குவதில் மைத்திரி-ரணில் அரசாங்கம் முன்னுரிமை வழங்கியிருக்க வேண்டும். ஒன்று அரசியல் கைதிகளின் விடுதலை. மற்றது, காணாமல் போனவர்களின் பிரச்சினை. இவை இரண்டுமே மிக உணர்ச்சி சார்ந்ததும், உணர்வுபூர்வமானதுமான விடயங்கள் ஆகும்.

மஹிந்த அரசாங்கத்தை வீழ்த்தி, இந்த நாட்டிலே ஜனநாயகம் மலர வேண்டும் என்கிற எண்ணத்துடன் புதிய அரசாங்கம் ஒன்று உருவாக தமிழ் மக்களின் ஒட்டுமொத்த பங்களிப்பும் வழங்கப்பட்டது. அதனை ஜனாதிபதியும் பிரதமரும் கூட ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இனப்பிரச்சினை உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் நியாயமான தீர்வினை புதிய அரசாங்கம் வழங்கும் என்கிற நம்பிக்கையை தமிழ்மக்களின் மனங்களில் ஏற்படுத்தும் விதமாக முதலில் சில பிரச்சினைகளுக்காவது புதிய அரசாங்கம் தீர்வினை வழங்கியிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்தின் வாக்குறுதிகள் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கிலானதல்ல, நூற்றுக் கணக்கானவையே.

2012ம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி, மொத்தம் 810 பேர் சிறைகளில் உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் இரண்டு குழந்தைகளும் அடக்கம். இவர்கள் இலங்கையிலுள்ள பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஐந்து வருடங்கள் தொடக்கம், இருபது வருடங்கள் என இவர்கள் சிறைகளில் வாடுகின்றனர்.

அனுராதபுரம் 80, வவுனியா 65, யாழ்ப்பாணம் 20, திருகோணமலை 25, மட்டக்களப்பு 35, நீர்கொழும்பு 20, கொழும்பு விளக்கமறியல் 210, வெலிக்கடை பெண்கள் பிரிவு 35, வெலிக்கடை ஆண்கள் பிரிவு 3, களுத்துறை ஆண்கள் பிரிவு 262, களுத்துறை பெண்கள் பிரிவு 3, கண்டி போகம்பரை 36, கண்டி தலதிய போகம்பரை பெண்கள் 2, பதுளை 10, பொலநறுவை 4.

இவர்களில் கடந்த மூன்று ஆண்டுகளாக எத்தனை பேர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெரியாது. சிறைகளில் கடந்த காலங்களில் அந்த கைதிகள் பல்வேறு சித்திரவதைகளுக்கும் உள்ளாகியிருக்கின்றனர். பலர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, பொதுமன்னிப்பில் தங்களை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். இவர்களின் விடுதலை குறித்து நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி வழங்கியதையடுத்து அவர்கள் தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டனர்.

நவம்பர் 07ம் திகதிக்கு முன்னதாக அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தீர்வு எட்டப்படும் என்று ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியதாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் 17.10.2015 அன்று வெலிக்கடை சிறைக்குச் சென்று கைதிகளிடம் நேரில் தெரிவித்தார். இதனையடுத்தே கைதிகள் போராட்டத்தை கைவிட்டனர்.

ஆனால், வாக்குறுதி வழங்கியபடி எதுவும் நடக்கவில்லை. இது தமிழ் அரசியல் கைதிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் மட்டுமல்லாது தமிழ்மக்கள் அனைவருக்குமே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளிலும் மாற்றம் ஏற்படலாம் என நல்லாட்சி அரசாங்கத்திடம் நம்பிக்கை வைத்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் இப்போது செய்வறியாது சோர்ந்து விட்டதாகவே தோன்றுகின்றது.

இலங்கை அரசாங்கம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தங்களை ஏமாற்றி விட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். இதுவே இப்படியெனில், இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசாங்கத்தை எவ்வாறு நம்புவது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அவரது சந்தேகம் நியாயமானதே.

- ஆதித்தன் -




தற்போது, சில கைதிகளை முதற்கட்டமாக பிணையில் விடுதலை செய்வது குறித்து தீர்மானிக்கப்பட்டு அதுவும் குழப்பநிலையில் உள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளை பிணையில் விடுதலை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், முதல் கட்டமாக 31 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் சிறைச்சாலை தலைமையகம் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் ஏனைய கைதிகள் தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகளை ஆய்வு செய்து அவர்களை விடுதலைசெய்வதற்கு முடியுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்படி, 31 கைதிகள் பிணையில் விடுதலையாவதற்கு தயாராக இருந்த வேளையில், மீண்டும் அவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டனர். பிணை வழங்கும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதனால் மீண்டும் சிறையில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. பிணையில் விடுதலை செய்வதாக கூறப்படும் கைதிகளுக்கான நிபந்தனைகளும் கடுமையானதாகவே உள்ளன. 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் இவர்களை விடுதலை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ள தடை விதிப்பதுடன் அவர்களின் வதிவிட உறுதி சான்றிதழை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் மாதம் இருமுறை அவர்கள் சென்று கையெழுத்திட வேண்டும். இவ்வாறாக பல நிபந்தனைகள்.

இந்த நிலையில், கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் மீண்டும் தொடர்கிறது. கைதிகளின் உறவினர்களும் போராடத் தொடங்கியுள்ளனர். எதிர்வரும் நாட்களில் வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் முழுவதும் இதற்கான போராட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பிரச்சினைக்கு ஒரேயொரு தீர்வு அரசியல் கைதிகள் அனைவரையும் பொதுமன்னிப்பில் விடுதலை செய்வதேயாகும். ஜனாதிபதி நினைத்தால், இந்த கைதிகளை இவ்வாறு விடுதலை செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவே தெரிவித்திருக்கின்றார். இதற்கு ஜனாதிபதி சரியான முடிவை அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு அரசியல் கைதிகள் அனைவரையும் பொதுமன்னிப்பில் விடுதலை செய்வது தொடர்பாக மட்டுமே நகர்வுகளை முன்னெடுக்க வேண்டியது தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் மற்றும், மனிதாபிமான வெகுஜன அமைப்புக்களினதும் கடமையாகும் ●




விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
நடைமுறைப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ்' இனால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளிவரும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்யலாகாது.

# நல்லாட்சி அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள விரிசல்!





மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் எனக் கூறப்படும் அவன்ட் கார்ட் கப்பல் தொடர்பான சர்ச்சை அரசாங்கத்திற்குள் ஒரு விரிசலை ஏற்படுத்தியுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் இது தொடர்பில் தங்கள் எதிர்ப்பை வெளிப்படையாக முன் வைத்துள்ளனர்.

இவ்வாறு, இந்த விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், சட்டம் - ஒழுங்கு மற்றும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன தனது அமைச்சுப் பதவியை துறந்திருக்கின்றார். இந்த விவகாரத்தில், குற்றவாளிகளைக் காப்பாற்ற முயல்வதாக அமைச்சர் திலக் மாரப்பன மீதும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ மீதும், குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது.

இந்த விவகாரத்தை தாமதப்படுத்தாது, விசாரணை செய்து குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர்களும் சிவில் சமூகத்தினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

காலி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த, சட்டவிரோதமான ஆயுதங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மிதக்கும் ஆயுதக் கப்பல் என வர்ணிக்கப்படும் இதில் உள்ள 12 கொள்கலன்களில் ஆயுதங்கள் இருப்பதாகக் கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அந்தக் கப்பல், அவன்ட் கார்ட் என்ற தனியார் பாதுகாப்பு நிறுவனத்தினால் குத்தகைக்கு பெறப்பட்டதாகும். அந்தக் கப்பலில் ஆயுதங்கள் இருந்தன. டி-56 ரக துப்பாக்கிகள், இயந்திர துப்பாக்கிகள், தன்னியக்க ஆயுதங்கள், உள்ளிட்ட 3,000 ஆயுதங்கள் இருந்ததாக அந்தக் கப்பலுக்கு பொறுப்பாக இருந்தவர் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார். இதற்குப் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அதற்குள் மிதக்கும் ஆயுத களஞ்சியசாலையும் இருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, கடந்த ஒக்டோபர் மாதம், காலி நீதவான் நீதிமன்றத்தின் உத்தர விற்கு அமைவாக மூன்று நாட்கள் மேற் கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கை களின் பின்னர், காலி துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவன்ட் கார்ட் கப்பலின் ஆயுதங்கள் மற்றும் தோட்டாக் கள் களஞ்சியப்படுத்தப்பட்ட 04 கொள்கலன் களுக்கு ஒக்டோபர் 19ஆம் திகதி, சீல் வைக்கப்பட்டதுடன் கடற்படையினர் மற்றும் காலி துறைமுக பொலிஸார் இணைந்து குறித்த கப்பலுக்கு பாதுகாப்பளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நவம்பர் மாதம் 4ஆம் திகதி இந்த விடயம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றில் எழுந்த போது சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பன, கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, நல்ல பெயரைப் பெறுவதற்காக பொலிஸார், குறித்த ஆயுத கப்பலைச் சோதனை செய்ததாகவும் இது 2002ஆம் ஆண்டு மிலேனியம் சிற்றி விவகாரம் போன்றது எனவும் கூறினார்.

அத்துடன், இந்த விவகாரம் மக்கள் மனதில் தவறான ஒரு விளக்கத்தை ஏற்படுத்திவிடும் என்றும் அவர் கூறினார். இழந்த ஆயுதங்களின் ஒரு பகுதியை மீட்டுக் கொடுத்து அவன்ட் கார்ட் நிறுவனத் தின் தலைவர் நிசங்க சேனாதிபதி, அரசாங்கத் துக்கு உதவி செய்துள்ளதாகவும் கூறினார். நடுக்கடலில் உள்ள குறித்த ஆயுதங்களைக் கடற்படையினரால் மீட்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

சட்டத் திணைக்களத்தின் அதிகாரிகளை பாதுகாக்க வேண்டும் எனவும், அவர்களை தன்னால் காட்டிக்கொடுக்க முடியாது என்றும், போரை வழிநடத்தி பயங்கர வாதத்தை இல்லாதொழித்த கோட்டாபய ராஜபக்ஸ மற்றும், முன்னாள் கடற்படைத் தளபதி ஆகியோர் கைது செய்யப்படுவ தனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்திருக்கின்றார்.

குறித்த ஆயுதக் கப்பல் விவகாரம் சட்டரீதியானது எனவும், இதில் எந்த வொரு தவறும் இடம் பெறவில்லை எனவும், இவ்விரு அமைச்சர்களும் தெரிவித்தனர்.

அமைச்சர் திலக் மாரப்பன அவன்ட் கார்ட் நிறுவனத்திற்காக நீதிமன்றத்தில் ஆஜராகி யிருந்த சட்டத்தரணியாவார். அவருக்காக அந்நிறுவனம் பெருந்தொகையான பணத்தை வழங்கியிருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது. அவர் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் இந்நிறுவனம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள முடியாது என சுட்டிக்காட்டப்பட்டது.

பதவி விலகுவதற்கு முன்னதாக திலக் மாரப்பன பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அதன் பின்னரே, அமைச்சர் பதவியிலிருந்து விலகும் முடிவிற்கு வந்தார். அவன்ட் கார்ட் நிறுவனம் தொடர்பில் ஆஜரான சட்டத்தரணியாக இருந்தவர் அமைச்சராக இப்பிரச்சினையை கையாள்வதில் உள்ள சிக்கல்கள் காரணமாக பிரதமர் அவரது பதவி விலகலை வரவேற்றிருக்கலாம் என தெரியவருகின்றது. ஜனாதிபதி மைத்திரி -பால சிறிசேனவும் அந்த பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஆனால், இப்பிரச்சினையை கையாள்வதில் தவறிழைத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ, தான் எந்நிலையிலும் பதவி விலகப்போவ தில்லை என தெரிவித்துள்ளார்.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், ஒருவர் சட்டம் - ஒழுங்கிற்கு பொறுப்பான அமைச்சர், மற்றவர் நீதி அமைச்சர். இவர்கள் இருவர் மீதே குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் 'நல்லாட்சி' என்பதன் பொருள் அர்த்தமற்றதாகவே மாறிவிடும் நிலையே ஏற்பட்டுள்ளது.

அவன்ட் கார்ட் விவகாரம் தொடர்பில் சரியான நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் அரசாங்கத்தை விட்டு விலகப் போவதாக அமைச்சர்களான ராஜித சேனாரத்னவும், சம்பிக்க ரணவக்கவும் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, அவன்ட் கார்ட் நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக் கப்பல் தொடர்பாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பனவும், நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஸவும் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக் கள், அமைச்சரவைக்குள் பெரும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

காலித் துறைமுகத்தில் கைப்பற்றப்பட்ட அவன்ட் கார்ட் நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்த ஆயுதங்கள் சட்டபூர்வமானவையே என்றும், அதில் எந்த தவறும் இடம்பெறவில்லை என்றும், அமைச்சர் திலக் மாரப்பன நாடாளு மன்றத்தில் தெரிவித்திருந்தார். அதுபோல, நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஸ வும், இந்த விவகாரத்தில் எந்தத் தவறும் இல்லை என்றும், இதனை அடிப்படையாக வைத்து கோட்டாபய ராஜபக்ஸவை கைது செய்ய முயன்றபோது தாமே அதனைத் தடுத்ததாகவும் கூறியிருந்தார்.

இது அமைச்சரவைக் கூட்டத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அமைச்சர வைக்கூட்டத்தில் திலக் மாரப்பனவின் அறிக்கையை கடுமையாகச் சாடிய, அமைச்சர்களான சம்பிக்க ரணவக்கவும், ராஜித சேனாரத்னவும், இது தொடர்பாக சரியான விசாரணைகள் நடத்தப்படாவிடின் தாம் அரசை விட்டு வெளியேறப் போவதாக வும் எச்சரித்தனர்.

**- விகிர்தன் -**

அவன்ட் கார்ட் நிறுவனத்துக்கு சட்ட ஆலோசனையை வழங்கிய திலக் மாரப்பன, அந்த நிறுவனத்துக்கு சார்பாகச் செயற்படுவதாக, அமைச்சர்கள் ராஜித சேனாரத்னவும், சம்பிக்க ரணவக்கவும் கடுமையாகக் குற்றம்சாட்டினர்.

"தமது தவறை மறைக்க பல்வேறு தரப்பினருக்கு இந்த நிறுவனம் இலஞ்சம் வழங்க முயற்சித்திருக்கின்றது. நாம் எல்லோரும் இணைந்து அரசை அமைத்திருக்கிறோம். உயிரைப் பணயம் வைத்துத்தான் இதனைச் செய்தோம். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றிருந்தால் நாம் அனைவரும் தற்கொலை செய்துகொள்ள நேர்ந்திருக்கும். இந்த விசாரணைகள் தோல்வியில் முடிந்தால் நாம் சமூகத்தின் முன் முகம் கொடுக்க முடியாது" என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

இந்த நிலையில், ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னர், புதிய 'நல்லாட்சி' அரசாங்கத்திற் குள் ஏற்பட்டுள்ள முதலாவது பாரிய விரிசலா கவே இவ்விவகாரம் கருதப்படுகின்றது.

இப்போது, அவன்ட் கார்ட் விவகாரத்தை ஜனாதிபதியே கையாள்வதாக தீர்மானிக்கப் பட்டுள்ளது. விசாரணைகள் சரியான விதத்திலும், துரிதமாகவும் நிறைவு பெற்று குற்றவாளிகள் மீது நடவடிக்கை மேற் கொள்ளப்படுமா? அல்லது இந்த விவகாரம் அரசாங்கத்திற்குள் மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்துமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கலாம் ●


## APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road, Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# முதல் படை தயார்!


## தமிழக அரசியல் களம்

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்ற புதிய சிந்தனையுடனும் புதிய கோஷத்துடனும் மக்கள் நலக் கூட்டியக்கத்தை தேர்தல் கூட்டணியாக அறிவித்துள்ளனர், நால்வர் அணியினர். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ் மாநிலச் செயலாளர் ஜி. ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் முத்தரசன் நால்வரும் இணைந்த இப்படை, முதல் படையாக 2016 தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் களத்தில் நம்பிக்கையுடன் முன்னேறத் தொடங்கியுள்ளது. இந்த நால்வர் மட்டுமல்லாமல், இன்னும் சிலரையும் சேர்த்து, அதிமுக, திமுகவுக்கு மாற்றாக ஒரு பலமான மூன்றாவது அணி'யை உருவாக்கும் முயற்சியில் இருக்கிறது, இப்படை. இவர்கள் முயற்சி வெற்றிபெறுமா? யார் யார் இவர்களுடன் இணைவார்கள் - ஓர் அலசல்!

கிங் மேக்கர் ஜி. ராமகிருஷ்ணன்!

கடந்த ஜுன் 9ஆம் தேதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், 'தமிழகத்தில் கூட்டணி ஆட்சி' என்கிற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்தினார். இதில் மதிமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 'ஆட்சியில் பங்கு' என்பதுதான் இக்கருத்தரங்கின் கோரிக்கையாக இருந்தது. கருத்தரங்கில் பேசிய ஜி. ராம கிருஷ்ணன், 'ஆட்சியில் பங்கு என்னும் கோரிக்கையில், அதிமுக அல்லது திமுக இந்த இரண்டு கட்சிகளில் ஏதேனும் ஒன்றை வெற்றி பெறச் செய்து, அவர்களுடன் ஆட்சியில் பங்கெடுப்பது என்பதும் மறைந்திருக்கிறது. ஆட்சியில் பங்கு என்பதற்கு மாறாக, சிறிய கட்சிகளான நாம் ஒன்றிணைந்து, நாமே ஆட்சி செய்பவர்களாக உருவெடுக்க வேண்டிய நேரம் இது' என்றார். கருத்தரங்கம் முடிந்து கலைந்து சென்றாலும், ஜி. ராமகிருஷ்ணனின் 'நமக்கு நாமே ஆட்சி' விதை, அதன்பிறகு மற்ற தலைவர்களின் மனதிலும் வேர்விட ஆரம்பித்தது. கருத்தரங்கம் நடந்த சில நாட்களிலேயே, அதில் கலந்துகொண்ட ஐந்து கட்சித் தலைவர்களும் மீண்டும் சந்தித்தனர். மக்கள் நல கூட்டியக்கம் உருவானது.

ஐந்து கட்சிகள் என்றாலும், ஐந்தும் பெரிய வாக்கு வங்கி இல்லாத சிறிய கட்சிகள். இவர்களால் பெரிய கட்சிகள் அளவுக்கு செலவழிக்க முடியாது என்பதுடன் எத்தனை தொகுதிகளில் வெற்றிபெற முடியும் என்பதும் கேள்விக்குறிதான். எனவே, தேர்தல் வரை இந்தக் கூட்டணி நீடிக்குமா என்பதுதான் அப்போது அரசியல் பார்வையாளர்கள் அனைவரின் ஒரே கேள்வியாக இருந்தது. இந்தச் சந்தேகத்துக்கு வலு சேர்ப்பது போல், கூட்டியக்கத்தை கூட்டணியாக அறிவித்து, தேர்தல் பணிகளைத் தொடங்கலாம் எனப் பேசத் தொடங்கியதும், மனித நேய மக்கள் கட்சி ஜிவாஹிருல்லா கூட்டியக்கத்தில் இருந்து விலகினார். மற்றவர்களும் குழப்பத்தில் இருந்தனர். இந்நிலையில், 'பெரிய கட்சிகளோடு தொடர்ந்து கூட்டணியில் இருந்தால் கரைந்து போய்விடுவீர்கள். தனித்த அடையாளத்தோடு வெற்றி


சிவதாணு

பெறுவதே முக்கியம். பாமக தைரியமாக அந்த முடிவை எடுக்கும்போது நீங்கள் ஏன் எடுக்கக்கூடாது,' என்று ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து பேசினார், ஜி. ராமகிருஷ்ணன். விடுதலைச் சிறுத்தைகள் குழப்பம் நீங்கித் தெளிவடைந்தது. ஆனால், கூட்டணி வலுவடைந்த பிறகு பாமக வந்து சேர்ந்தால்... 'அவர்களை அழைப்பதில்லை அவர்களாகவே வந்தாலும் சேர்த்துக் கொள்வது இல்லை' என்கிற உறுதி மொழியைக் கொடுத்தார், ஜி. ராம கிருஷ்ணன். திருமாவளவன், கூட்டணி அறிவிப்புக்கு சம்மதம் தெரிவித்தார்.

தேசிய கட்சிக்கான அங்கீகாரத்தைத் தேர்தல் வெற்றியின் மூலம் தக்கவைக்க வேண்டிய கட்டாயம் ஒருபுறம், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் சேர்ந்தே தேர்தலைச் சந்திப்பது என்கிற அகில இந்திய முடிவால் தனித்து முடிவெடுக்க முடியாத அழுத்தம் இன்னொரு புறம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முத்தரசனும் அரை மனதோடு, ஜி. ராமகிருஷ்ணன் கோரிக்கைக்கு சம்மதம் தெரிவித்தார். ஆனால், அக்கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன், அம்மா ஆதரவுக்கு ஏங்குபவராச்சே இதற்கு சம்மதிப்பாரா? ஓரிரு நாட்களில், 'கூட்டணியில் நாங்கள் இல்லை' என்று பேட்டி கொடுத்து குட்டையைக் குழப்பினார், பாண்டியன். அதிமுக எப்படியும் தங்களைக் கூட்டணியில் சேர்த்துக்கொள்ளும் என்பது அவரது நம்பிக்கை. ஆனாலும், அவரது துணையோடு மாநிலச் செயலாளரான முத்தரசன், 'மக்கள் நலக் கூட்டணியே சரி' என்று முடிவெடுத்தார். கடந்த 27ஆம் தேதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் எஸ். சுதாகர ரெட்டி தமிழகத்திற்கு வந்தார். முக்கிய நிர்வாகிகள் கூடி மக்கள் நலக் கூட்டணியிலேயே இருப்பது என்று முடிவெடுத்து அறிவித்தும் விட்டார்கள்.

மீதியிருந்தவர் வைகோ மட்டும்தான். 'நீங்கள்தான் மக்கள் நல கூட்டணியின் முகமாக இருப்பீர்கள்' என்று சொல்லி வைகோவையும் கூட்டிணி அறிவிப்புக்குச் சம்மதிக்க வைத்தார் ஜி. ராமகிருஷ்ணன். பத்திரிகையாளர் சந்திப்புகளில் பதில் சொல்வதில் இருந்து மக்கள் நல கூட்டணியின் அறிக்கைகளை வெளியிடுவது வரை அனைத்தையும் வைகோவே செய்ய மற்ற தலைவர்கள் அவர் பின்னாலேயே நிற்பது என்று முடிவானது.

### ஜி. ராமகிருஷ்ணன் அஸ்திரம்!

வைகோ, திருமாவளவன், முத்தரசன் மூவரும் கூட்டணிக்குச் சம்மதித்தாலும், தேர்தலுக்கு இன்னும் ஆறு மாதங்கள் இருக்கிறது. தேர்தல் அரசியல் களத்தில் ஆறு மாதங்கள் என்பது மிகப் பெரிய கால கட்டம். அதற்குள் பல்வேறு மாற்றங்கள் நிகழலாம். அந்த மாற்றங்களிலும் இவர்கள் இதே உறுதியுடன் நிற்பார்களா? அதற்கும் ஜி. ராமகிருஷ்ணன் ஓர் அஸ்திரம் வைத்திருக்கிறார். அது, கேப்டன் விஜயகாந்த்!

திமுக, பாஜக எனப் பலர் வலைவிரித்துக் காத்திருக்கிறார்கள். யாருக்கும் பிடி கொடுக்காமல், தன் முடிவையும் அறிவிக்காமல், தமிழ்நாடு முழுக்க தனியாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார் தேமுதிக தலைவர் விஜயகாந்த். ஆனால், 'அதிமுக, திமுக வுடன் ஒருபோதும் தேர்தல் கூட்டணி வைக்கமாட்டேன்' என்று மேடைக்கு மேடை தவறாமல் முழங்கி வருகிறார். எனவே, 'நமக்கு இவர் சரிப்பட்டு வருவார்' எனக் கருதுகிறார்கள், மக்கள் நலக் கூட்டணியினர்.

மக்கள் நலக் கூட்டணியில் இணைந்திருக்கும் நால்வருக்குமே, மூன்றாவது அணியால் அரசுக்கு எதிரான வாக்குகள் சிதறி, அது அதிமுக வெற்றிக்குத்தான் வழிவகுக்கும் என்பது தெரியும். அதிமுகவா திமுகவா யார் ஆட்சியமைக்கிறார்கள் என்பதல்ல இவர்களது முதன்மையான நோக்கம், தங்கள் கட்சியை வலுப்படுத்தி, திமுக, அதிமுகவுக்கு மாற்றாகத் தங்களை நிலை நிறுத்துவதுதான். அதற்கு, ஆளுங்கட்சி ஆகாவிட்டாலும் எதிர்கட்சியாகவாவது அமர வேண்டும் என்பதே இந்த அணியின் இலக்கு. அதை தங்கள் நால்வரால் மட்டும் சாதிக்க முடியாது ஆனால், விஜயகாந்தால் அந்த இடத்திற்குத் தங்களை அழைத்துச் செல்ல முடியும் என்று இவர்கள் நம்புகிறார்கள். ஆகவேதான், மக்கள் நல கூட்டியக்கம் தொடங்கியதில் இருந்தே விஜயகாந்தை இழுப்பதற்கான முயற்சிகளையும் முடக்கி விட்டார்கள். திருமாவளவன், கம்யூனிஸ்ட் தலைவர்கள் என மாறிமாறி, தேமுதிக அலுவலகத்திற்கு நேரில் சென்று விஜயகாந்தை சந்தித்தது இதற்கான அச்சாணிதான்.

'நழுவுகிற மீனில் நழுவுகிற மீனாக' தொடர்ந்து கேப்டன் பிடிகொடுக்காமல் இருக்கிறார். ஆனாலும், தேமுதிகவிற்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இருக்கும் நல்ல உறவைப் பயன்படுத்தி, விஜயகாந்தை அழைத்து வருவது தன் பொறுப்பு என்று கூறியிருக்கிறாராம் ஜி. ராமகிருஷ்ணன்.

திமுக, அதிமுக இருவருடனும் கூட்டணி இல்லை என்று சொல்லி வந்தாலும், இப்போது விஜயகாந்தின் ஒரே நோக்கம், மீண்டும் ஜெயலலிதா வெற்றிபெறக் கூடாது என்பதுதான் இதற்காகக் கடைசி நேரத்தில் திமுக பக்கம் கேப்டன் சாயக்கூடும் என்பது

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


BUY, SELL or LEASE

Dinesh Jeganathan
Sales Representative



Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# மின்சார கட்டணங்களை குறைப்பதற்கு விண்ணப்பித்து விட்டீர்களா?

## கனடிய தகவல் தொடர் 240

### *OESP - Ontario Electricity Support Program*

இப்படியொரு புதிய செய்தியினை அனேக மாக பலரும் அறிந்திருக்கமாட்டீர்கள். வழமையான உங்களின் மின்சார கட்டண பில்லுடன் சேர்ந்து (Electricity Bill) ஒரு சிறு செய்தினையும் ஒன்ராரியோ 'மின்சக்தி மையம்' (Ontario Energy Board) தபாலில் அனுப்பி அதற்கு விண்ணப்பிக்குமாறு கோரியிருந்தனர்.

அதாவது எதிர்வரும் புதிய வருடத்தில் இருந்து ஒரு வீட்டில் வசிக்கும் குடும்பத்த வர்களின் எண்ணிக்கை, அவர்கள் யாவரினதும் வருமானங்களை அடிப்படை யாக வைத்து 'ஒன்ராரியோ மின்சக்தி மையம்' அவர்களின் வழமையான மின்சார கட்டணத்தில் ஒரு தொகை கட்டண குறைப்பினை (Pre Determined Credit) வழங்க தயாராக உள்ளனர் என்பதே இந்த செய்தியாகும்.

இந்த சலுகை என்பது $20-$50 டொலர் வரை ஒவ்வொரு மாதமும் குறைக்கப்பட




லாம் என அனுமானிக்கப்படுகின்றது. எப்படி விண்ணப்பம் அனுப்புவது? என்பதே அடுத்த கேள்வி. அது மிகவும் சுலப-மானது. வீட்டில் இருந்தபடியே இணையதளத்தினூடாக (ontarioelectricitysupport.ca) இதற்கு இலகுவாக விண்ணப்பிக்கலாம்.

- உங்களின் மின்சார கணக்கு இலக்கம் (electricity bill account numer)
- முகவரி
- வருமானவரி நிறுவனத்திற்கு மனு செய்யும் நிலையில் வீட்டில் வசிப்போர், அவர்களின் 'சமூக காப்புறுதி இலக்கம்' (Social Insurance Number) வயது, வருமானம் போன்ற விபரங்கள் என சில குறிப்பிட்ட விடயங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பம் சமர்ப்பித்து அதனை பரிசீலனை செய்து, நடைமுறைப்படுத்தும் அங்கீகாரம் கிடைக்க 6 தொடக்கம் 8 கிழமைகள் எடுக்கலாம். இவை தொடர்பான ஏதாவது கேள்வி இருந்தால் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

***Ontario Electricity Support Program***
***P.O. Box 1540, STN-B***
***Ottawa Ontario, K1P 0C7***
**தொலைபேசி - *1.855.831.8151***
**மின் அஞ்சல் - *helpontarioelectricity-support.ca***

211 என்னும் விசேட மாகாண அரசின் சேவை வழங்கும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்தாலும், மின்சார கட்டணத்தில் சலுகைகளை பெற நீங்கள் ஏதாவது வழியில் தகுதியானவரா? என்ற தகவல்களை பெற்று கொள்ளலாம். குறிப்பாக கனடாவின் புராதன குடிமக்கள்

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்**

Ontario Energy Board

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உதவி கிடைக்கின்றது

மின்சக்திக்கான ஒன்ராறியோவின் புதிய ஆதரவுத் திட்டம்.

உங்களுடைய மின்சக்திக் கட்டணத்தில் கழிவொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் தகுதியுடையவராக இருக்கலாம். ஒவ்வொரு மாதமும் $30 முதல் $50 ஆல் அது குறைக்கப்படலாம்.

அது குறைக்கப்படும் விதம் இப்படித் தான் இருக்கும்: மின்சாரக் கட்டணங்கள் ஒவ்வொன்றிலும், வருமானம் குறைந்த குடும்பத்தவர்கள் கழிவொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். உங்களுடைய வீட்டில் வாழ்பவர்களின் எண்ணிக்கையிலும் உங்களுடைய ஒன்றிணைந்த வருமானத்திலும் அதன் அளவு தங்கியிருக்கும்.



இன்றே விண்ணப்பியுங்கள். OntarioElectricitySupport.ca 1-855-831-8151 (ஒன்ராறியோவுக்குள் கட்டணம் இல்லை)

# முதல்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசியல் நோக்கர்கள் கருத்து. இதனால், 'திமுக, அதிமுகவிற்கு மாற்றாகத் தேமுதிகவை மக்கள் பார்க்கிறார்கள். ஏற்கனவே, அதிமுகவிடம் சேர்ந்ததால்தான் உங்களது வாக்குச் சதவீதம் குறைந்தது. இப்போது திமுகவிடம் சேர்ந்து உங்கள் வாக்கு வங்கியை மேலும் குறைத்துக் கொள்ளாதீர்கள். நாங்கள் செய்த அதே தவற்றை நீங்களும் செய்யாதீர்கள்' என்று சாதகமாகவே உள்ளது. நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு திமுகவை எதிர்த்துப் பேசாதவர் கடந்த சில மேடைகளில் அவரது மனைவி பிரேமலதா மூலம் திமுகவை அதிகம் விமர்சிக்கிறார். எனவே, திமுக - தேமுதிக கூட்டணிக்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. நாடாளுமன்றத் தேர்தலில் தேமுதிக நின்ற தொகுதிகளில் பா.ஜ.க ஒழுங்காக வேலை செய்யவில்லை என்கிற ஆதங்கம் விஜயகாந்துக்கு இருந்தது. மேலும், தற்போது பிகாரில் அக்கட்சி பெற்றுள்ள தோல்வியும் அவரது மனதை கரைக்க ஆரம்பித்துள்ளது. எனவே, நிச்சயம் அங்கேயும் செல்லமாட்டார். காங்கிரஸ் கணக்கிலேயே இல்லை. ஆகவே, கேப்டன்



விஜயகாந்த் மனதைக் கரைக்கும் வேலையைத் தொடங்கிவிட்டார் ஜி. ராமகிருஷ்ணன். கேப்டனும் யோசிக்க ஆரம்பித்துவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

இன்னொரு பக்கம் வைகோவும் விஜயகாந்தை மக்கள் நலக் கூட்டணிக்குள் இழுக்கத் தன் பக்கத்தில் இருந்து பேசி வருகிறார். எதிர்பாராத விமான நிலைய சந்திப்பிலும் கூட்டணி பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.

### கேப்டன் வருவாரா?

திமுக, மக்கள் நலக் கூட்டியக்கம், பாஜக எனப் பல்வேறு பக்கமிருந்தும் பலரும் நெருங்க, விஜயகாந்தோ இதுவரை எந்த முடிவும் எடுக்காமல் காத்திருக்கிறார். கூட்டணி தொடர்பாக யார் பேசினாலும், 'நாட்கள் இருக்கிறது, மெல்ல பார்த்துச் செய்வோம்' என்று சொல்கிறார். ஆனாலும், நம்பிக்கையைக் கைவிடவில்லை மக்கள் நல கூட்டணியினர். விஜயகாந்தின் நடவடிக்கைகளும் இவர்கள் நம்பிக்கைக்கு ஏறுவதற்குத் தோதான கப்பல் மக்கள் நல கூட்டணிதான் என்பது நால்வர் அணியின் அசைக்க முடியாத நம்பிக்கை.

விஜயகாந்த், மக்கள் நலக் கூட்டணிக்குள் வந்தால், இலவச இணைப்பாக தமிழ் மாநில காங்கிரஸும் வர வாய்ப்புள்ளது. 'மக்கள் நோக்கி மக்கள் தளபதி' சுற்றுப் பயணங்களில், 'இரண்டு திராவிடக் கட்சிகளும்தான் எல்லாப் பிரச்சனை களுக்கும் காரணம்' என்று பேச ஆரம்பித்திருக்கும் ஜிகே வாசன், பாஜகவோ மக்கள் நலக் கூட்டணியோ, மூன்றாவது பெரிய கட்சியான தேமுதிக எதில் சேர்கிறதோ அதில் சேர்ந்துகொள்ளலாம் என்று கணக்குப் போடுகிறார்.

எனவே, கேப்டன் வந்தால், ஜிகே வாசனோடு சேர்ந்து, மக்கள் நலக் கூட்டணி ஒரு பலமான மூன்றாவது அணியாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை. யார் கண்டது, யானையை வீழ்த்திய எறும்புகள் கூட்டமாக, இவர்கள் ஆட்சியைக்கூட பிடிக்கலாம். சரி, அவர் வருவாரா?

# மின்சார...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

(First Nations) மற்றும் மருத்துவ உபகரணங்களுடன் வாழ்பவர்கள் (Oxyen Concentrator and Mechanical Ventilators) என்ற நிலைமையில் உள்ளவர்கள் தாங்கள் வசிக்கும் இல்லங்களில் மின்சார கட்டண குறைப்புக்கு விண்ணப்பிக்கலாம் என ஒன்ராரியோ மின்சக்தி மையத்தின் தகவல் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலரின் வருமானம் வீழ்ச்சியடைந்த நிலையில் மின்சார கட்டணங்கள் எதுவும் செலுத்த முடியாத நிலையில், மின் தொடர்பினை துண்டிக்கும் நிலைமை ஏற்படுமாக இருந்தால் அதிலிருந்து மீள்வதற்கு இங்கு சிறு உதவி வழங்கப்படுகின்றது. இதனை ஆங்கிலத்தில் 'Low Income Energy Assistance Program' LEAP' என குறிப்பிடப்படும்.


அதாவது இங்கு மின்கட்டணம் செலுத்த முடியாத நிலைமை என்பது வருமானம் இழந்த காரணத்தினால் உருவாகும் போது அதனை நிரூபிக்க இந்த திட்டத்திலிருந்து $500-$600 டொலர் வரை சலுகை பெற்று மின்சார சேவையினை மீண்டும் தொடரலாம்.

**மின்சார கட்டணத்தினை குறைப்பதற்கு இன்னுமோர் ஆலோசனை** (Shift & Save with time of use rates)

உங்களுக்கு அனுப்பும் மின்சார பில்லில் குறிப்பிடப்பட்டிருக்கும் மின்சார கட்டணத்தினை குறைப்பதற்கு இன்னுமோர் ஆலோசனை. உங்களுக்கு அனுப்பும் மின்சார பில்லில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதாவது இந்தக் குளிர் காலத்தில் (நவம்பர் 01 - ஏப்ரல் 30) எந்த நேரம் மின்சாரத்தினை உபயோகித்து குறைந்த கட்டணத்தைப் பெறலாம் என இதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரவு 7 மணியிலிருந்து காலை 7 மணிவரை மிகக் குறைந்த கட்டணம் (Off Peak Time) அறவிடும் நேரம்.

காலை 7 மணியிலிருந்து காலை 11 மணிவரை அதி உச்ச கட்டணம் (On Peak Time) அறவிடும் நேரம்.




காலை 11 மணியிலிருந்து இரவு 7 மணிவரை மத்திம கட்டணம் (Mid Peak Time) அறவிடும் நேரம் என குறிப்பிடப்பட்டிருக்கும்.

சனி, ஞாயிறு தினங்களில் முழு நேரமும் கட்டணம் மிகக் குறைவாக அறவிடும் நேரமாகும். அவசர மின்சார தேவைகளை தவிர, ஏனைய தேவைகளுக்கு இந்த நேரங்களை பார்த்து உபயோகிக்கும் போது கட்டணத்தினை குறைத்து கொள்ளலாம்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# நாமும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

புதிதாக, முதல் தடவையாக அல்லது இரண்டாம் தடவையாக அல்லது பல வீடுகள் வாங்கிய அனுபவமானவராக இருந்தாலும், வீடு, மனை வாங்கும் பத்திரம் நிரப்பப்பட்டு, (Agreement of Sale) மற்றைய முகவரிடம் கொடுக்கும் போது அடமானக்கடன் பெறுவதற்கான Condition (financial condition) நிச்சயமாக வைத்திருப்பது சிறந்ததாகலாம். அல்லது இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் எழுதிய மாதிரியான நிலைமை உங்களிற்கும் ஏற்படலாம். அத்துடன் நீங்கள் அடமானக்கடன் பெறும் முகவருடனும், ஆதனம் வாங்கித்தருபவருடனும் தொடர்பை தொடர்ந்து வைத்திருந்து உங்கள் அடமானக்கடனிற்கு நிகழும் நிகழ்வுகளை மிகவும் கவனமாக அவதானித்து வந்தால், மேலே குறிப்பிட்ட நிலைமையை ஓரளவு தவிர்க்கலாம் என நம்புகின்றேன். இந்நிலைமை மேலும் இறுக்கமாகலாம் என்பதனையே இன்றைய ஆதனச்சந்தை எடுத்துக்காட்டுகின்றது.

2015ஆம் ஆண்டு கனடாவிற்கு வரலாம் என எதிர்பார்க்கப்படும் புதிய வரவாளர்களின் எண்ணிக்கை 260,000 இலிருந்து 280,000 வரை

• உலகின் முக்கியமான பகுதிகளில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை

31% சீனா / தாய்வான்
21% தெற்கு ஆசியா
12% மேற்கு ஐரோப்பா
36% ஏனைய நாடுகள்

பொதுவாக கனடாவில் ஆதனம் வாங்குபவர்களில் 45% ஆனவர் முதல் தடவை வாங்குபவர்கள் (2013 ஆண்டிருந்த கணக்கின்படி)

இவர்களில் 20% ஆனவர் புதிதாக நாட்டிற்கு குடியேறியவர்கள் ஆதனம் வாங்குவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று குறைந்த வட்டிவீதம். மற்றையது 73% ஆனவர்களின் எண்ணப்படி ஆதனம் பெரியதொரு சிறந்த முதலீடு.



# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 452

ஏற்கனவே வாடகைக்கு வீட்டை விட்டு வெளியேறி, மறுதினம் தாம் வாங்கிய வீட்டிற்கு செல்வதற்காக காத்திருந்த குறிப்பிட்ட கணவன், மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளிற்கு, அன்றைய மாலை ஒரு நல்ல நேரமாக இருக்காமல் போயிற்று. அவர்களது சட்டத்தரணியின் அந்த தகவலை அவர்களால் நம்ப முடியவில்லை. அதாவது நீங்கள் அடமானக்கடன் பெறுவதற்காக கொடுத்திருந்த தொழில்புரிவதற்கான கடிதம் (பத்திரம்) உண்மையற்றது என அடமானக்கடன் வழங்கப்படுவதற்கு சம்மதம் தெரிவித்திருந்த நிதி நிறுவனம் சந்தேகப்பட்டு, உங்களது அடமானக் கடனை இடைநிறுத்தியதாக அவர் தெரிவித்திருந்தார்.

அவர்களிற்கு இது ஓர் இடிவிழுந்தது போலவே இருந்தது. நீண்டகால ஆசை நிறைவேறாமல் போய் விடுமோ என அவர்களின் மனம், அச்சத்தில் அங்கலாய்த்தது. இன்றைய காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் மிகவும் சாதாரணமாகவே காணப்படுவதனை காணக்கூடியதாக உள்ளது. அண்மையில் கனடாவின் மேற்கு மாகாணத்திலும் ஒன்ராரியோவிலும் இவ்வாறான நிலைமைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

தொழில்புரிவதனை உறுதிப்படுத்துவதற்காக கொடுக்கப் படும் கடிதம், வருட இறுதியில் தொழிலகத்தால் கொடுக்கப்படும் வருடாந்த வருமானம் கொண்ட பத்திரம் (T4) மற்றைய முக்கிய தகவல்கள் வசதிக்கேற்ப மாற்றப்படுவதால், அனேகமான நிதி நிறுவனங்கள் சந்தேகிக்கின்றன. இதனால் ஆதனம் கைமாறும் கடைசி தருணத்திலும் இத்தகவல்கள் மிகவும் இறுக்கமாகவும், கவனமாகவும் திரும்பத் திரும்ப பரிசீலிக்கப்படுகின்றன. இவ்வாறான நிலைமைகளினால் பல Closing கள் குறிப்பிட்ட காலத்தை தாண்டியே கைமாறுகின்றதனைக் காணலாம். இதனால் வாங்குபவர்கள் மேலதிகமாக அதிக பணத்தை தண்டமாக செலுத்த வேண்டிவருகின்றது. இப்படியான நிகழ்வுகளால் ஆதனம் விற்பவர்கள் வாங்குபவர்கள் மனஉளைச்சல் அடைகின்றனர். இந்நிலைமை எம் சமுதாயத்தில் மட்டுமல்ல, சில குறிப்பிட்ட சமூகங்களில் கூடுதலாக நடைபெறுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் கனடாவின் Home Capital Group Inc. என்ற அடமானக் கடன் கொடுக்கும் நிதி நிறுவனம் மேலே எழுதப்பட்ட மோசடிகளால் 45 அடமானக் கடன் பெற்றுத்தரும் Mortgage Broker நிறுவனங்களுடன் தொடர்பை முற்றாக துண்டித்துள்ளது. மேலும் பல நிறுவனங்கள் மிகவும் துல்லியமாக அவதானிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக அடமானக் கடன் பெற்றுக் கொடுக்கும் சிலரின் நடவடிக்கையால் சகலரிற்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் உண்மையாகவும், நீதியாகவும், நேர்மையாகவும் தொழில்புரிபவர்களது கடிதங்களும், மற்றைய முக்கிய பத்திரங்களும் மிகவும் நுணுக்கமாக ஆராயப்படுகிறது. இதுபோன்ற நேர்மையற்ற நிகழ்வுகள், சாதாரண மக்களிற்கு தெரியாமலே நடைபெற்று வருகின்றது என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். 2012இல் Mortgage Insurance Canada இன் தகவலின்படி பத்து அடமானக்கடன் பத்திரங்களில் ஒன்று உண்மையற்றதாகவே காணப்படுவதாக தெரிய வருகின்றது.

பலர் தமது வருமானத்திற்கு மேலதிகமான பெறுமதியில் ஆதனம் வாங்குவதால் குறிப்பிட்ட வருமானத்திற்குரிய கடிதத்தின் மூலம் அடமானக்கடன் பெறமுடியாமல் உள்ளது. இதனால் கடிதம் உருமாற்றம் பெறுவதாக இருக்கலாம். அல்லது போதியளவு ஆரம்ப முதலீடு இல்லாததும் ஒரு காரணமாகலாம்? இரண்டும் சேர்ந்தும் இருக்கலாம்.



இவ்வாறாக தமது வருமானத்தை மாற்றி பதிவு செய்வதனை Equifax Canada என்ற நிறுவனமும் அவதானித்து வருகின்றது. கனடாவின் சகல பகுதி களையும் சேர்த்து ஏறக்குறைய $1.3 Trillion ($1,000,000,000,000) பெறுமதியான அடமானக்கடன் நிலுவையில் உள்ளது. இத்தொகையில் ஒரு பகுதி அடமானக் கடன் நேர்மையற்ற முறையில் பெறப்பட்ட தாகவே கருதப்படுகின்றது. மாதாந்த கொடுப்பனவில் தாமதம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் இவர்களின் அடமானக்கடன் பெற்ற முறை ஆராயப்படலாம்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


HomeLife/GTA Realty Inc. Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.
Broker / Owner
* INDEPENDENTLY OWNED AND OPERATED



5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

BAKERY FOR SALE

Well Established Bakery in East Scarborough

- 10 Highrise Condos. / Apartment
- 2 Schools
- TTC, Community Centre, Professional Offices, library Church.....
- Bakery Equipments Cooler & Other Accessories (Fixtures are included)
- Reasonable Rent - For Quick sale

Asking Only $139,000

HOUSE FOR SALE



MORNINGSIDE & MCLEVIN

3 Bedroom Semi Detached, 2 New Kitchen, 3 Washroom. Recently Renovated

Asking price $439,900

PROFESSIONAL OFFICE SPACE AVAILABLE


MCCOWAN & FINCH

Upto 1800sq.ft 2 Exclusive Parking, 2 Lockers. Available Only For Professional Office .
Location : GTA Square ( 2nd Floor)
Separate Washroom Available.

FREE STANDING BUILDING FOR SALE

Location: Scarborough East
Land Area: 0.75 Acre
Building Size:16,500 sq.ft
Recently Renovated medical Building With Parking.
TTC at the Door.

# எங்கிருந்தாலும் தரிசனம்



## சத்குரு வாசுதேவ்

தரிசனம் காண்போருக்கும் உண்டு, காணாதவருக்கும் உண்டு. இதோ இந்த வலைப்பக்கத்தின் மூலம் உங்கள் இல்லங்களில் தரிசனம் தரவிருக்கிறார் சத்குரு.

சத்குரு உரையிலிருந்து சில துளிகளை, பொதுமக்களின் கேள்விகளுக்கு அவர் அளித்த சுவாரஸ்ய பதில்களை, இங்கே உங்களுக்காக பதிவேற்றவுள்ளோம்.

'சத்குருவ நான் இன்னிக்கு பார்த்தேனே, அங்க மாட்டு வண்டில போயிட்டு இருந்தாரு,' 'நான் கூட மாட்டு மனைல பார்த்தேன்,' என்று அவர் ஆசிரமத்தில் இருக்கும் நேரங்களில் அவரைத் தேடும் கண்கள், அவர் தரிசன நேரத்திற்கு வருவாரா?' என்று ஏங்கித்தான் கிடக்கும்.

இன்று முத்தாய்ப்பாக காலையிலேயே வந்தது அறிவிப்பு, 'மாலை தர்ஷன்' என்று.

மாலை 3 மணியிலிருந்தே தீர்த்த குண்டத்தின் முன்னே மக்கள் கூடத் துவங்கிவிட்டனர். 5 மணியிலிருந்தே ஒரு சிலர் தங்கள் மாலை பயிற்சிகளை புல் வெளியில் அமர்ந்து செய்து கொண்டிருந் தது காண்பதற்கு சற்று சிலிர்ப்பூட்டுவதாய் இருந்தது.

புரிதலைப் பற்றி பேசத் துவங்கிய சத்குரு, பிரம்மா, பிரம்மை என்று இரு வேறு பரிமாணங்களைப் பற்றி விரிவாகப் பேசினார். பிரம்மம் என்றால் உட்சபட்ச உண்மை என்றும், அதைப் புரிந்து கொள்ளாமல் நாம் நம் புரிதலில் இருந்து சற்றே சரிந்தால், பேருண்மையான பிரம்மம் கூட பிரம்மையாகி விடும் என்பதைத் தன் பாணியில் விவரித்தார்.

ஒரு சரிவு, ஒரு வழுக்கல், ஒரு கால் தவறல், ஒரு தடுமாற்றம் எப்படி நம்மை மாயைக்கு இட்டுச் செல்லும் என்பது சற்றும் சருக்காமல் தெள்ளத் தெளிவாக பிடிபட்டது நமக்கு.

'உங்கள் முட்டாள்தனத்திற்கு கடவுளின் பெயரில் அங்கீகாரம் பெற்றிருந்தால், அதற்கு மருந்தில்லை, கடவுளில்லாமல் உங்கள் மண்டை முழுவதும் நீங்கள் நிரம்பி இருந்தால் அதற்கு மருந்திருக்கிறது,' என்று ஒரு மனிதன் வளர்வதற்கு உண்டான தடைகளைப் பற்றியும் பேசினார்.

'சம்ஸ்கிருதி என்பதே இதுதான். இந்த பிரபஞ்சத்தின் அடிப்படை உண்மை மீது பேரார்வத்துடன் வாழ்வது, அனைத்து உயிர்கள் மீதும் கருணையுடன் வாழ்வது. ஆனால் தன் மீது பற்றில்லாமல் இருப்பது. எனவே சம்ஸ்கிருதி இங்குள்ள சிறு பிள்ளைகளுக்கு மட்டுமல்ல உங்கள் ஒவ்வொருவருக்கும் தான்,' என்றவர், 'இப்பிள்ளைகள் செய்த பாக்கியம் அவர்கள் சிறு வயதிலேயே இந்த வாழ்க்கை சூழ்நிலையில் இருப்பது,' என்றார்.

சிவாங்கி, சாதனா முடித்து ஆசிரமத்தில் தங்கியிருக்கும் தியான அன்பர் ஒருவர், இந்த சாதனாவை தொடர்ந்து செய்வது குறித்து கேட்க'

'சிவாங்கி, சாதனா உங்கள் உணர்வு சார்ந்த புத்திசாலித்தனத்தை பயன்படுத்து வது. IQ என்றால் 'I Queque', அதாவது நான் க்யூவில் இருக்கிறேன் என்று அர்த்தம். இந்த வரிசையில் எப்போதுமே நீங்கள் யாரோ ஒருவரின் பின்னால்தான் நிற்கப் போகிறீர்கள். அடிப்படையாக IQ என்பது இன்னொருவரைப் பார்த்து அவரைப் போலவே, ஆனால் அவரைவிட சற்று சிறப்பாகச் செயல்படுவது.

உணர்வு நிலையிலான புத்திசாலித்தனத்தில் இந்த பிணக்கு இல்லை. நீங்கள் எல்லாவற்றுடனும் முழுமையாக ஈடுபட்டால் அவை தன் தன்மைகளை முழுமையாக உணர்த்தும். IQ எனும் காரண அறிவு எல்லாவற்றையும் பிரித்துப் பார்த்து, கிழித்துப் பார்த்து பொருள் தேடும். உணர்வு எல்லாவற்றையும் அரவணைத்துக் கொள்ளும், தழுவிக் கொள்ளும்.

தெய்வீகத்தை கூறு போட்டு பார்க்கலாமா? அதை தழுவிக் கொள்ளலாம். அதனை ஆர அணைத்துக் கொள்ளலாம். உணர்வு நிலையிலான புத்திசாலித்தனம் தெய்வீகத்து டன் நாட்டியம் செய்வதைப் போன்றது,' என்றார்.

'இதனால் இந்த சிவாங்கி சாதனாவை தொடர்ந்து செய்யலாமா, எப்படி வேலை செய்யும் என்று கூறு போட்டு பார்ப்பதை விட அதில் வெறுமனே ஈடுபடுங்கள். அனைத்தையும் அரவணைத்துக் கொள்ளுங்கள். இந்த சாதனா உங்களுக்கு அற்புதங்களை நிகழ்த்தும்,' என்றார்.

'உங்கள் உணர்வு நிலையிலான புத்திசாலித்தனத்தின்படி செயல்பட்டால், ஒரு பறவையின் ஒலியும் உங்களுக்கு கவிதை பாடும், ஒரு புல்லின் நுனியும் கவிதையாகும்,' என்றவரின் உதாரணத்தில் தான் எத்தனை ஆழம்? எத்தனை உண்மை?

உங்களுடன் எப்படி இருப்பது என்று ஒருவர் கேட்க, 'என்னுடன் சும்மா இருங்கள், நான் உங்கள் கவனத்தை முழுமையாக திசைத் திருப்பவே முயற்சி செய்வேன். ஆனால், 'நீங்கள் என்னுடன் முழுமையாக இருங்கள்' என்று சொல்லி முடித்தார்.

இன்றைய குருவாசகம், 'என்னுடன் முழுமையாக இருங்கள்,' என்பது எல்லோர் மனதிலும் உரக்க ஒலிக்க, 'ஸ்ரீ மஹாதேவோ நமஹ' என்னும் இனிய பாடலுடன் நிறைவு பெற்றது இன்றைய தரிசன நேரம்.

மாலை வேளையும், மனதை மயக்கும் இசையும், தியானலிங்கத்தின் சக்தி சூழ்நிலையும் இவ்விடத்திற்கு மேலும் மெருகு கூட்டின. மற்றொரு மாலைப் பொழுதில், மற்றொரு தரிசன நேரத்தில் உங்களுடன் மீண்டும் இணைவோம்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org


**_4 day Inner Engineering program_**
**_led by an Isha teacher trained by "Sadhguru"_**
**_Coming to Toronto_**

TIMINGS: Thursday November 26: 6:30pm – 9:30pm
Friday November 27: 6:30pm – 9:30pm
Saturday November 28: 8:30am – 7:00pm
Sunday November 29: 7:30am – 7:00pm

VENUE: Princess Banquet Hall
3330 Pharmacy Ave,Scarborough, ON M1W 3V8 Canada

Vegetarian lunch provided on Saturday; Vegetarian breakfast & lunch on Sunday.
Attendance for all sessions is required.

**_CONTACT: Email: toronto@ishafoundation.org_**
**_Phone: 416-300-3010_**
**_Online registrations: www.innerengineering.com/live/toronto_**






# தலைச்சுற்று மயக்கம் 'GIDDINESS' தானாக ஏற்படுமா?

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இந்நிலையானது சிறியோர் தொடக்கம் முதியோர்வரை நிகழ இடம் உண்டு. தலைச்சுற்று மயக்கம் ஒரு நோயின் தன்மையாகவும், முன் அறிகுறியாகவும் இருக்கலாம்.

உதாரணமாக நீரிழிவு நோயாளியை எடுத்துக் கொண்டால் தேவைக்குரிய குளுக்கோஸ் இரத்தத்தில் இல்லாதிருந்தால் தலைச்சுற்று மயக்கம் ஏற்பட இடம் உண்டு. இப்படி நமது உடம்பில் உள்ள சில வியாதிகளின் முன் அறிகுறிகள் புலனாவதைக் காணலாம். தலைப்பகுதியில் அடிகாயம் ஏற்பட்டாலும் நரம்புகள் தாக்கப்பட்டு தலைச்சுற்று மயக்கம் வரலாம். இந்நிலையுள்ளோர் தாமதியாமல் வைத்தியசாலைக்கோ அன்றி தங்கள் வைத்தியரிடமோ சென்று பரீட்சித்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

மற்றும் விஷம் சம்பந்தமான பொருட்கள் நமது உடலில் சென்றால் அல்லது விஷப்பூச்சிகள் தீண்டினாலும் தலைச்சுற்று மயக்கநிலை ஏற்படக் காரணமாக அமையலாம். மற்றும் உடம்புக்கு ஏற்ற தகுந்த அன்ன ஆகாரம் இல்லாதிருந்தாலும் இந்நிலை ஏற்பட இடமுண்டு.

மேலும் 'பலயீனமான ஒருவர் தூர இடத்திற்கு நடந்து அல்லது ஓடி இளைத்தாலும் தலைச்சுற்று மயக்க நிலை ஏற்படலாம். அடுத்து ஒருவருக்கு கொழும்பு அதிகரித்து உடம்பு நன்கு பருத்து எடை கூடி திண்டாடுவதைக் காணுகின்றோம். அவர்களுக்கு எடையைக் குறைக்க தகுந்த உணவு வகைகளையும், பயிற்சி முறைகளையும் கவனித்து வருதல் வேண்டும். கிழமைக்கு கிழமை எடை அளவை கவனித்து வைத்தியர்களின் அறிவுரைகளுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும். நமது காதின் உட்பகுதியில் நீர்தேங்கி இருந்தாலும் தலைச்சுற்று மயக்கநிலை ஏற்பட ஏதுவாக அமையலாம். இந்நிலையை இலகுவாக அறிந்து கொள்ளும்போது உரியவருக்கு அடிக்கடி தலைச்சுற்று ஏற்படுவதுடன் சிலருக்கு வாந்தி வருவதுபோல் இருப்பதுடன் ஓங்காளிப்பர். ஆனால் வாந்தி வெளியில் வராது. இந்நிலையில் உள்ளோர் இருந்து எழும்பும்போது உடன் மயக்கநிலை ஏற்பட்டு சில வினாடி வரையிருப்பர்.

தலைப்பகுதியை, வலதுபக்கம் முன்பக்கம் சரித்தால் தலைச்சுற்று, மயக்கம் ஏற்படும். இந்நிலை சிலருக்கு பல நிமிடம், சிலமணிநேரம், ஓரிரண்டு நாட்கள் வரை இருக்கலாம். இந்நோயால் பீடிக்கப்பட்டவர்கள் விழிநடுக்கம் நெரிசல் மிகுந்த (ENC - Electrico Nystagmus Crammed) பரிசோதனை செய்து கொள்வது நன்று என அறிய முடிகின்றது.



அத்துடன் கலோரி பரிசோதனையும் செய்து கொள்ள வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. இந்தப்பரீட்சை மூலம் குளிர்ந்த நீரை காதினுள் செலுத்த மயக்கநிலை எவ்வளவு நேரம் இருக்கும் என்பதை அறிந்து கொள்ள முடியும் எனவும் கூறப்படுகின்றது.

மயக்கநிலையில் உள்ள நோயாளியின் கண்களைப் பார்வையிடும் போது ஒருவித அசைவுநிலை தென்படும். இந்நிலை தென்பட்டால் தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் பரீட்சித்து தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிலை காணப்பட்டோர் தங்களின் எடையைக் குறைப்பதற்கு வழிசெய்து கொள்ள வேண்டும். எடையைக் குறைக்க உண்ணும் உணவில் கட்டுப்பாடு வேண்டும். அத்துடன் உடற்பயிற்சி செய்து வருதல் வேண்டும்.

உணவை எடுத்துக் கொண்டால் எண்ணெய் கலந்த உணவுப்பொருட்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கரியல், பொரியல், பலகாரவர்க்கம் போன்றவற்றைத் தவிர்த்துக்கொள்வது மிக நன்று. மாமிச வர்க்கம், கொழுப்புப் பொருட்கள், பாலாடை இனிப்பு வகை ஊறுகாய் போன்றவற்றைத் தவிர்ப்பது மிக நன்மை பயக்கும். அத்துடன் கோப்பி, தேனீர் தவிர்த்து சூப்பு வகைகள் பாவிப்பது நன்மை பயக்கும். உப்பை குறைத்துக் கொள்வது உத்தமமாகும்.

காலைநேரம் சூப்பைப் பாவிப்பது நன்று. அல்லது தேசிப்புளிச்சாறு ஓரளவு பாவித்து வரலாம். சலரோகம் (நீரிழிவு) உள்ளவர்களின் சீனியை தவிர்ப்பது உத்தமமாகும். உணவு வகையில் காலையில் இட்டலி, மதியம் குறைவான சாதம், மரக்கறி கூட்டு சாம்பாற்றுடன் பாவித்து வருதல் நன்மை


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*


தொடர்ச்சி 13ஆம் பக்கம்


**Custom Build Home Engineering Drawing Package to Obtain Site Plan Approval and Building Permits - $11,995**

Our Custom Build Home Engineering Drawing Package includes the all the applicable drawings, plans and reports of the following: Legal Land Survey, Topographical Survey, Arborist Report, Tree protection Plan, Geotechnical Report, Soil Test for Soil Bearing Capacity, Soil Percolation Test for Stormwater Management, Site Plan, Site Grading & Erosion Control Plan, Stormwater Management Report, Site Servicing Plan, Functional Servicing Report, Architectural Drawings, Floor Plans, Elevations, Cross Sections, Structural Drawings, HVAC Drawings, Heat Loss/Heat Gain Calculations, Duct Design, Ventilation Design/Calculations, Plumbing Drawings, and Landscape Architect Plan

சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபட தேவைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்

M. பாஸ்கரசிங்கம், P.Eng. (416) 332 1743

Periyathamby Kuruparan M Sc (Eng) Meghal Raval M Sc (Eng)

www.buildingexpertscanada.com

# பக்கவாதம் நீங்க வர்ம மருத்துவம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## STROKE

ஒவ்வொரு வருடமும் சராசரியாக ஒன்றரை கோடி பேர் ஸ்ட்ரோக் (stroke) எனப்படும் பக்கவாத நோய்க்கு பலியாகின்றனர். இது உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பு. ஸ்ட்ரோக் என்னும் பக்கவாதம் மூளைக் குள் ரத்தம் உறைவது அல்லது ரத்தம் செல்வது தடைப்படுதல் என்பனவற்றால் ஏற்படும் நோய் ஆகும். இது முன் அறிகுறிகள் ஏதுமின்றி திடீரென்று வருவதால் இதற்கு Stroke என்று பெயரிட் டுள்ளனர். முதியவர்களுக்குத்தான் இந்த நோய் வரும் என்ற நிலைமாறி இளம் வயதினரையும் இந்த நோய் தாக்குகிறது.

காரணம்


1. இரத்த ஓட்டம் தடைப்படுதல்
2. இரத்தக்கசிவு

இரத்த நாளங்களின் உட்புறச் சுவர்களில் கொழுப்பு படியும்போது அந்த நாளங்கள் கடினத்தன்மை அடைகின்றது. இதனால் அதன் உட்புறச் சுற்றளவு குறைகிறது. இதனால் இரத்த ஓட்டத்தில் சீரற்ற தன்மை ஏற்படுகிறது. சில நேரங்களில் இது இரத்த நாள அடைப்பாகவும் மாறுகிறது. இதுவே பக்கவாதம் உண்டாகும் விதமாகும்.

இரண்டாவது வகையில் உருவாகும் பக்க வாதத்திற்கு இரத்த அழுத்தமே (Blood Preasure) முக்கிய காரணம். இரத்த நாளங்களில் உண்டாகும் ரத்தம் கசிந்து வெளியேறி மூளையின் திசுக்களுக்குள் பரவும் போது மூளையின் செயல்திறன் பாதிப்படைந்து பக்க வாதம் உண்டாகின்றது.

**அறிகுறிகள்**

கடும் தலைவலி, பார்வை மங்குதல், காரணமின்றி படபடப்பு, நிலையில்லாமல் தள்ளாடுவது, திடீரென உடலின் ஒரு பகுதி, முகம், கை கால்களில் தளர்வு, தொடு உணர்வு குறைதல், குரலில் தளர்வு போன்ற அறிகுறிகள் தோன்றலாம். இவற்றில் ஏதாவது ஒன்றிரண்டு அறிகுறி கள் இருந்தால் உடனே மருத்துவரை அணுகுதல் அவசியம். பக்கவாதம் ஏற்பட்ட



உடன் சிலர் சுயநினைவை இழந்து விடுவர். உயிர் பிழைத்தாலும் பேச்சு, பார்வை, சிந்திக்கும் திறன் ஆகியவை பாதிப்படையலாம். முகம் அல்லது உடலின் ஒரு பகுதி செயலிழந்து போகலாம்.

குடும்பத்தில் யாராவது இந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் கவனத்துடன் இருக்க வேண்டும். குடும்ப பாரம்பரியம் காரணமாகவோ அல்லது மரபு ரீதியாகவோ இந்த நோய் ஏற்படுகிறது.

உடனடி சிகிச்சை

பக்கவாதம் ஏற்படும்போது உடனடியாக சிகிச்சை செய்து கொள்வது அவசியம். இதன் மூலம் மூளை திசுக்கள் பாதிப்படைவது குறைகிறது. இதனால் இந்த நோயாளிகள் திரும்பவும் தமது அன்றாட வேலைகளைத் தாமே செய்து கொள்ள முடிகிறது. ஆனால் தகுந்த சிகிச்சை நேரத்திற்கு அளிக்காவிட்டால் நிரந்தரமாக நடக்க முடியாது. படுத்த படுக்கையாகி விடுகின்றனர்.

**யாருக்கு பக்கவாதம் வரும்** (Stroke)

பக்கவாதம் குடும்ப மரபியல் காரணங்களால் வரும்போது அதை மாற்றுவது கடினம். ஆனால் வாழ்க்கை முறையை மாற்றி பொருத்தமான யோகா மற்றும் உடல் பயிற்சிகளைச் செய்வதன் மூலம் ஓரளவு இந்த நோய் வராமல் தடுக்க முடியும். உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மற்றவர்களை விட நான்கு மடங்கு இந்நோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. மற்றும் புகை பிடிப்பதால் இரத்த கசிவு ஏற்பட்டு இந்த நோய் வரலாம். நீரிழிவு நோய் அடிக்கடி கட்டுப்பாட்டை மீறும்போது இந்த நோய் வர வாய்ப்பு அதிகம் உண்டு. புரதச் சத்து அதிகமாகவுள்ள மிருகங்களின் கொழுப்பு வகைகளை அதிகம் உண்பவர்களுக்கு இரத்த நாளங்கள் கடினமாகும் வாய்ப்பு



உள்ளது. இந்த நிலையில் பக்கவாதம் எந்த நேரத்திலும் வரலாம். மற்றும் உடலிலுள்ள அபான வாயு, மலச்சிக்கல் உருவாகும் போது கீழ் நோக்கிச் செல்லாது மேலெழுந்து இதயம், தலைப் பகுதி போன்றவற்றைச் சென்றடைவதால் மாரடைப்பு மற்றும் தலையில் கிறுகிறுப்பு ஏற்பட்டு பின் அது பக்க வாதமாக மாறலாம்.

**பக்கவாதத்திற்கு யோகாசன சிகிச்சை**

பக்கவாதம் ஏற்பட்ட பின் எந்த வகையான மருந்துகளும் மூளையின் பாதிப்பை நீக்கி விடுவதில்லை. அத்துடன் உடலில் குறிப்பிட்ட உறுப்புகள் செயலிழக்கும் தன்மை ஒவ்வொருவருக்கும் வேறுபடு கின்றது. செயலிழந்த பகுதிகளைச் சீராக்க பல மருத்துவமுறைகள் குறிப்பாக அக்கு பஞ்சர், அக்கு பிரஷர், பிசியோதெரபி போன்றவை உதவுகின்றன. ஆனால் உடலில் செயலிழந்த உறுப்புகள் விரைவில் இயங்கச் செய்ய அதற்குத் தகுந்த குறிப்பிட்ட யோகாசனங்களைத் தேர்ந்தெடுத்து ஒரு பயிற்சியாளரின் உதவியுடன் தினமும் பழகிவரும் போது ஒரு சில நாட்களிலேயே சிறப்பான பலனைக் காணலாம்.

**வர்ம சிகிச்சை**

உடலில் எந்தெந்த உறுப்புகள் செயல் இழந்ததோ அந்த உறுப்புகளின் வர்மப் புள்ளிகளை (Pressure Points) வர்மத் தைலங்களைக் கொண்டு அழுத்துவதன் மூலமாக அவற்றைத் திறம்பட மறுபடியும் இயங்க வைக்க முடியும். அத்துடன் சரியான உணவுத் திட்டத்தையும் கடைப் பிடிக்க வேண்டும். அதிக கொழுப்பு நிறைந்த உணவுகள், வாயுவை உருவாக் கும் உணவு வகைகள் போன்றவற்றை தவிர்த்து நரம்புகள் பலம் பெறும் கீரைகள், கஞ்சி வகைகள் போன்றவற்றை அன்றாடம் உணவாக உட்கொள்ள வேண்டும்.

மேற்கூறப்பட்டதை சரிவர நடைமுறைப் படுத்துவதனால் பக்கவாத நோயிலிருந்து மீளலாம்.



ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721


# தலைச்சுற்று...

பயக்கும். கீரை வகைகள் தாராளமாகப் பாவித்துவருதல் வேண்டும். தரமுள்ள மரக்கறி வகைகளைத் தேர்ந்து எடுத்துப் பாவிப்பது மிக நன்மை பயக்கும். மாலை நேரம் தகுந்த மரக்கறிச் சூப்பு மிக நன்று இரவு வேளை சப்பாத்தி காய்கறி பாகம் செய்து பாவித்து வருதல் வேண்டும்.

மேலும் ஒருவர் தனது எடையைக் குறைத்துக் கொள்ள உடற்பயிற்சி மிகச் சிறந்ததாகும். அவற்றில் சிலமுறைகளைப் பார்ப்போம்.

உரியவர் இருந்து கொண்டு தனது தலையை மட்டும் வலது இடது பக்கம் திருப்பித் திருப்பி அசைத்தல். இதனை குறைந்தது 5-10 நிமிடங்கள் செய்யலாம்.

உட்கார்ந்து கொண்டு இரு கண்களையும் மூடிக்கொண்டு தலையையும், கையையும் மேலும் கீழுமாக அசைத்தல். குறைந்தது 5-10 நிமிடங்கள் நிகழ்த்தலாம்.

உட்கார்ந்த நிலையில் தங்கள் கண்களினால் ஒருபொருளை நிலையான பார்வையாகப் பார்த்துக் கொண்டு தலையை மட்டும் வலது, இடது பக்கம் திருப்பித் திருப்பிப் பார்த்தல் வேண்டும். கண்களை அசைக்க கூடாது. உரியவர் சுழரும் ஆசனத்தில் இருந்து கொண்டு நன்றாகச் சுழர வேண்டும். இதனை ஓரளவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் ஒரு பந்தினை எடுத்து தங்கள் வீட்டின் சுவரில் எறிந்து நேரடியாக பிடித்தல் முறையை கையாள வேண்டும். இவ்வேளை தங்களின் உடம்பையோ அன்றி தலையையோ அசைக்கக் கூடாது.

சாதாரண நிலைப்பகுதியில் 20 அடி நீளமான இடத்தில் நேர்கோடு ஒன்று அமைத்து அதன்மேல் நடந்து செல்ல வேண்டும். ஓரளவு பாரமுள்ள பொருளை தலையில் வைத்து நடப்பது உத்தமமாகும். இப்படி பல பயிற்சிகள் உண்டு.

இம்முறையான பயிற்சிகளை தொடர்ந்து ஓரளவு குறிக்கப்பட்ட காலங்களுக்குச் செய்து வருவதினால் எமக்கு ஏற்படும் தலைச்சுற்று மயக்கநிலை தீர்ந்து சுகதேகியான பிரஜையாக நீண்டகாலம் வாழலாம்.


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# பிரச்சினைகளை தனியாகத் தீர்த்திட முயல வேண்டியதில்லை

எனது பிரச்சனைகள் யாவற்றையும் எப்படித் தீர்ப்பது என்பதைப்பற்றி நான் கவலைப்பட வேண்டியதில்லை என்பது கடைசியில் இப்போது தான் எனக்குப் புரிகின்றது.

உன் வாழ்வில் என்ன நடக்கிறது என்பது உனக்குத் தெரியாது என்பதை நீ ஒப்புக் கொண்டால் என்ன? என்ன மாதிரி உன் வாழ்வு மலர்கின்றது என்பது உனக்குத் தெரியவேண்டிய விடயம் இல்லை என்பதை நீ உணர்ந்ததும் இறைவனின் ஆசீர் வாதங்கள் உன்னைச் சூழ உனக்கு ஞானம் பிறக்கும். இதெல்லாம் சரிவர நடப்பதற்கு நம்பிக்கை வைப்பது ஒன்றை மட்டும்தான் நீ செய்ய வேண்டும். மற்றவை சகலதும் உன் மனதில் செய்யவும், செய்யாமலிருக்கவும் நீ சிருஷ்டித்துக் கொள்ளும் விடயங்கள்தான்.



உன் மனதிற்குச் சிந்தனை செய்ய விடயங்கள் கொடுக்கவேண்டுமானால், உன்னைச் சூழ்ந்திருக்கும் இயற்கையின் அழகைப்பார். ஒருவிதமான எதிர்பார்ப்புக் களோ, அட்டவணைகளோ, கனவுகளோ இல்லாதிருந்தும் நிறைவாக நன்கு வாழும் மரஞ்செடி, கொடிகள், மலர்கள், சிறு ஜந்துக்கள், மிருகங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார். வாழ்வெனும் உனது யாத்திரையில் நீ எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறாய் என்பதை எண்ணிப்பார். ஜீவியத்தில் எவ்வளவு கற்றிருக்கிறாய்? எங்கு போகிறாய்? அங்கு எப்படிப் போகிறாய் என்பதெல்லாம் தெரியாதிருந் தும் எவ்வளவு தூரம் வந்து முன்னேறி விட்டாய் என்பதைச் சிந்தித்துப் பார்.

இதுவரை நீ செய்த தவறுகளையெல்லாம் எண்ணிப்பார். உனக்கு கிடைத்திருக்கும் சிறந்த தொடர்புகளைப் பார். முதல் தோல்விக்குப்பின் இரண்டாவதாக உனக்குக் கிடைத்த வாய்ப்புகளை நினைத்துப் பார். பின்பு நீ உபயோகிக் காமல் தவறவிட்ட வாய்ப்புக்களை எண்ணிப்பார். வேறு ஏதாவதைப் பற்றி நினைக்க வேண்டுமென்றால் எவ்வளவு அழகுடனும் இன்பத்துடனும் உனது வாழ்க்கை நீரோட்டம் இதுவரை மலர்ந்து முன்னேறியிருக்கிறது. இனிமேலும் முன்னேறப் போகின்றது என்பதை நன்றியுடன் பார். இதற்குப்பின் வாழ்வில் என்ன நடக்கிறது, எப்படி நடக்கிறது என்பது உனக்குத் தெரியவேண்டும் என நீ ஏன் நினைக்கிறாய் என்ற கேள்வியை உன்னிடம் நீயே கேட்டுக்கொள். இப்படி நடக்கும் என நீ சற்றும் எதிர்பாராத வேளைகளில் உனக்கு இந்த மகோன்னத மான வாழ்வு தந்த நன்மைகள் இன்பங்கள் அனைத்தையும் எண்ணிப்பார். உனது நம்பிக்கை இத்தனை நன்மைகளை உனக்குக் கொடுத்திருக்கும்போது ஏன் உனக்கு எல்லாவற்றையும் பற்றி சகலதும் தெரிந்திருக்க வேண்டுமென நீ நினைக்கிறாய்?

உனக்குத் தெரியாத விடயங்களைப் பற்றியெல்லாம் அறிந்து கொள்ள வேண்டு மென இன்றுவரை நீ ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்திருக்கலாம். உன் வாழ்வில் ஏற்கெனவே நடந்து முடிந்தவற்றைவிட, இனி நடைபெறப்போவது சிறப்பானதாகவே இருக்கும் என்ற முழுநம்பிக்கையுடன் மகிழ்ச்சியுடன் உன வாழ்க்கையை நடத்து.

**நான் முழுநம்பிக்கை வைத்து என் வாழ்வுப் பயணத்தைச் சீரும் சிறப்புமாக நடத்துவதில் இன்றுமுதல் ஈடுபடப்போகிறேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

237

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214
416.907.6897



லலிதா புரூடி


# CUSTOM BUILD HOME

BUILDER QUALITY $139 / SQ FT
STANDARD QUALITY $159 / SQ FT
LUXURY $179 / SQ FT

Cost of Site Plan Approvals & Building Permit Drawings and
Municipal Fees including Holdback & Development Charges are additional

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு
அனுபவம் நிறைந்த, நாணயமான,
தரமான கட்டிட நிபுணர்கள்

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

# நூல்களை பகுத்தலும் பதிதலும்

## பாடசாலை நூலகங்கள் - 4

டுயியின் தசமப் பகுப்புமுறை - தொடர்ச்சி

அ. உப பிரிவுகளை மேலும் பிரிக்கும் முறையின் சிறு பிரிவுகள்


டுயியின் தசமப் பகுப்புமுறையில் ஓர் உப பிரிவை மேலும் உட்பிரிவுகளாக்கி நூல்களைப் பகுத்துப் பதிவுசெய்ய முடியும். ஓர் உதாரணம்:
530 பௌதிகவியல் - 531 விசையியல், 532 நீரியல், 533 வாயுக்கள், 534 ஒலி, 535 ஒளி, 536 வெப்பம், 537 மின்சாரம், 538 காந்தவியல், 539 அணுசார் பௌதிகம்.

ஆ. மேலும் சிறு பிரிவுகள்

முறையே மேலே காட்டப்பட்டது.

இ. பொதுவான உப பிரிவுகள்

இப்பிரிவுகள் ஒரு பாடத்தை வகைப்படுத்தப் பின்பற்றப்படும் எண்களையும் தலைப்புகளையும் கொண்டுள்ளன. அவை பின்வருமாறு:
01 தத்துவம் / பொதுக்கோட்பாடுகள், 02 கைந்நூல்கள் / பாடநூல்கள், 03 அகராதிகள், 04 கட்டுரைகள் / விரிவுரைகள், 05 பருவ வெளியீடுகள் / ஆண்டு மலர்கள், 06 மன்றங்கள் மற்றும் சங்கங்கள், 07 படிப்பும் படிப்பித்தலும், 08 சேகரிக்கப்பட்ட பொருள்கள், 09 வரலாறு.




உபபிரிவுகளின் உட்பகுதிகளை மேலும் சிறுபிரிவுகளாக்கும் முறைக்கு ஓர் உதாரணம்:

630 விவசாயம் - 631 கமம், 631.1 கமப்பொருளியல், 631.2 கமக் கட்டிடங்கள், 631.3 கமத்து எந்திரங்கள், 631.4 நிலம், மண், 631.5 கமச்செய்கை, 631.6 வடிகால், 631.7 நீர்ப்பாசனம், 631.8 வளமாக்கிகள், 631.9 காலநிலை.

விவசாயத்துக்குரிய பிரதான வகுப்பு 600. அதன் பெயர் பிரயோக அறிவியல். அதன்கீழ் வரும் 9 பிரிவுகளுள் ஒன்று 630: விவசாயம். இதன்கீழ் வரும் பிரிவுகளகுள் (631-639) ஒன்று 631: கமம். இப்பகுதியை மேலும் சிறுபிரிவுகளாக்க வேண்டிய நிலைஏற்படின், பின்பற்ற வேண்டிய

ஈ. உப பிரிவுகளைப் பிரயோகிக்கும் முறை

உப பிரிவுகளைக்கொண்டு பிரதான பகுப்பில் அடங்கும் பாடங்களையோ பகுப்பின் பிரிவுகளில் அடங்கும் பாடங்களையோ பிரிவுகளின் பகுதிகளில் வரக்கூடிய பாடங்களையோ வகைப்படுத்தலாம். உதாரணமாக,

பிரதான பகுப்பு: 200 சமயம்

201 சமய தத்துவம், 202 சமயக் கைந்நூல்கள், 203 சமய அகராதிகள், 204 சமயக் கட்டுரைகள், 205 சமய சஞ்சிகைகள், 206 சமய சங்கங்கள், 207 சமயம் கற்பித்தல், 208 சேகரிக்கப்பட்ட சமயம் சம்பந்தமான பொருள்கள், விடயங்கள், 209 சமய வரலாறு.

பிரதான பிரிவு: 510 கணிதவியல்

510.1 கணிதவியற் கோட்பாடுகள், 510.2 கணிதவியற் கைந்நூல்கள், 510.3 கணிதவ-ியல் அகராதிகள், 510.4 கணிதவியற் கட்டுரைகள், 510.5 கணிதவியற் சஞ்சிகைகள், 510.6 கணிதவியற் சங்கங்கள், 510.7 கணிதம் கற்பித்தல், 510.8 கணிதம் பற்றிச் சேகரிக்கப்பெற்ற விடயங்கள், 510.9 கணிதவியல் வரலாறு.

உ. மொழி எண்கள்

பிரதான பகுப்பு 400க்கும் 800க்கும் பொதுவாகப் பிரயோகிக்கப்படும் மொழி எண்கள் பின்வருமாறு:

2 ஆங்கிலம், 3 யேமன், 4 பிரெஞ்சு, 5 இத்தாலியமொழி, 6 இஸ்பானிய மொழி, 7 இலத்தீன், 8 கிரேக்கமொழி, 9 பிற மொழிகள்.
இவை பின்வருமாறு பிரயோகிக்கப்படுகின்றன:

420 ஆங்கிலமொழி, 820 ஆங்கில இலக்கியம், 822 ஆங்கில நாடகங்கள்
430 யேமன்மொழி, 433 யேமன் அகராதி, 830 யேமன் இலக்கியம்
470 இலத்தீன்மொழி, 475 இலத்தீன் இலக்கணம், 870 இலத்தீன் இலக்கியம்.

ஊ. புவியியல் எண்கள்
பிரதான வகுப்பு 900ல் பயன்படுத்தப்படும் கண்டங்களுக்குரிய எண்கள்

புவியியல் எண்கள் எனப்படும். ஆவை பின்வருமாறு:
4. ஐரோப்பா, 5 ஆசியா, 6 ஆபிரிக்கா, 7 வட அமெரிக்கா, 8 தென் அமெரிக்கா, 9 ஓசியானா மற்றும் முனைவுப் பிரதேசங்கள். இவை பின்வரும் முறையிற் பிரயோகிக்கப்படும்:

940 ஐரோப்பாவின் வரலாறு, 942 இங்கிலாந்தின் வரலாறு, 973 ஐக்கிய அமெரிக்காவின் வரலாறு.
910 பொதுவான பிரயாணம், 914 ஐரோப்பாவிற் பிரயாணம், 914.2 இங்கிலாந்திற் பிரயாணம், 917.3 ஐக்கிய அமெரிக்காவிற் பிரயாணம்.
-
நன்றி: ஈழநாடு வாரமலர், 06.11.77

- தொடரும்



**கவிஞர் வி. கந்தவனம்**


**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.
இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796
**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)



# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



*Dr. J. Mohan*
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*





*ONE OF THE BEST LOCATION*

New Project by Concord In Toronto

Bathurst & Lakeshore



Completion Summer 2019




Special Price & Deposit Structure

For More Details :

HomeLife/GTA Realty Inc. Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

Contact: 416.321.6969

5215 Finch Ave., E., #203, Toronto, ON

*Independently Owned & Operated

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

## சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

# UFO's & Aliens

சென்ற தடவையில் கூப்பரின் இரண்டாவது அனுபவம் பற்றிக் கூற ஆரம்பித்திருந்தேன். தொடர்ந்து பார்ப்போம். அந்நியர்களும் அபூர்வ விமானங்களும் என்ற பகுதியின் மறைக்கப்பட்ட விடயங்களில் இதுவும் ஒன்றாகும்.

அப்பொழுது உயர்ரக விமானங்களின் நுட்பமான தரை இறங்குதல் முறையைப் படம் பிடிக்கும் குழுவொன்றுடன் கூப்பர் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் ஒருநாள், அவரது குழுவினர் வானிலே அபூர்வமான விமானம் ஒன்றினைக் காட்டினார்கள். மிகவும் திறமைசாலிகளான அக்குழுவினர் அந்த விமானத்தினை படம் பிடித்தனர். அவர்களது தலைக்கு மேலாகப் பறந்த அந்த விநோதமான விமானம், சற்று நேரம் வானத்தில் வட்டமிட்ட பின்னர், மூன்று கால்களை வெளியே நீட்டி மெதுவாக அருகில் இருந்த வரண்ட ஏரியின் தளத்தில் இறங்கியது. எல்லாவற்றையும் அக்குழுவினர் துல்லியமாகப் படம் பிடித்துக் கொண்டனர். படம் பிடித்தவர்கள் திறமையான படப்பிடிப்பாளர்கள். மிகவும் அனுபவசாலிகள். ஆகையால் அவர்கள்

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எடுத்த படங்களின் தரத்தில் எந்தவொரு குறையும் இராதென்பது உண்மையான ஒன்று, என்பது காப்பரின் கூற்று.


கூப்பர் அந்த அபூர்வமான விமானத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். சுமாராக முப்பதடி குறுக்களவாக இருந்த அப்பறக்கும் தட்டானது நல்ல அழுத்தமாகவும் பளபளப்பான வெள்ளியின் நிறத்திலும் காணப்பட்டது. அது வேற்றுக் கிரக மனிதர்களினது விமானம்தான் என்பதில் அவர்களுக்கு எந்தவொரு ஐயமுமிருக்கவில்லை. கூப்பரின் குழுவினர் ஏறக்குறைய இருபது அல்லது முப்பது அடி தூரம் வரை கிட்டவாகச் சென்று அதனைப் படம் பிடித்தார்கள். மேலும் நெருங்கிச் செல்ல முயற்சிக்க அந்தப் பறக்கும் தட்டு மேலெழுந்து பறந்து சென்றுவிட்டது. கூப்பரும் அவர்களினது ஒழுக்கமைப்பின் படியே வோசிங்ரனுடன் தொடர்பு கொண்டு இனம் தெரியாத பறக்கும் பொருள் பற்றித் தனது அறிக்கையையும் சமர்ப்பித்தார். அவ்வளவுதான்! எல்லாமே அத்துடன் முடிந்து விட்டது என்கின்றார் கூப்பர்.

அவர்கள் எடுத்த பறக்கும் தட்டின் படங்கள் சில நாட்களில் கூப்பரின் கைகளுக்கு வந்தது. படங்களைக் கழுவிய பின்னர் ஓர் உயர் அதிகாரி, அவற்றை வோசிங்ரனுக்கு அனுப்பிவிடும்படி கூப்பரிடம் அவற்றை ஒரு தோல் பையில் இட்டுக் கொடுத்துள்ளார். அவற்றைப் பார்க்கக் கூடாது என அந்த உயர் அதிகாரி அவரிடம் குறிப்பிடவில்லை. கூப்பரும் இயல்பாகவே அப்படங்களைப் பார்த்திருந்தார். படங்கள், அவரது குழுவினர் கொடுத்திருந்த அறிக்கையின் படியே மிகத் தெளிவாக இருந்தன. எல்லாவற்றையும் அப்படியே வோசிங்ரனுக்கு அனுப்பிவிட்டார் கூப்பர்.

இக்கால கட்டத்தில்தான் இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றிப் பரபரப்பாக மக்களிடையே பேசப்படத் தொடங்கியது. உடனே அமெரிக்க அரசாங்கம் அப்பொழுது தான் விழித்துக்கொண்டதுபோல் அவ்விடயத்தில் அக்கறை கொண்டு அது பற்றிப் பெரியதொரு ஆய்வினை மேற்கொண்டது. அதன் பயனாக அமெரிக்காவின் விமானப் படையினரும் இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றிய ஆய்விற்காக புளூ புக் என்ற 'நீலப் புத்தக நடவடிக்கை' என்ற ஆய்வினைத் தொடங்கினார்கள். இதற்கு அரச அனுசரணையும் இருந்ததாக கூறிக் கொள்கின்றார்கள். இதற்காக ஒரு பிரத்தியேகமான குழுவினரைத் தெரிவு செய்து, அவர்களை இப்பகுதியிற்குப் பொறுப்பாக விட்டுவிட்டார்கள். இக்குழுவினர் அதற்காக நாடளாவிய, இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் தொடர்பான சான்றுகளையும் பதிவுகளையும் சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

இவற்றை அறிந்து கொண்ட் கூப்பர் மேற்குறிப்பிட்ட நிகழ்வினையும் படங்களையும் பற்றிய தகவல்களை நீலப் புத்தக நடவடிக்கை தொடர்பானவர்களுக்குக் கூறினார். நீங்கள் அவற்றினைப் பெற்றுக் கொண்டீர்களா என அவர்களை அவர் வினாவியபோது, "அப்படிப் படங்கள் எதுவும் தங்களிடம் இல்லை, அங்கு காணப்படவில்லை" என அவர்கள் கை விரித்து விட்டார்கள். 'நீலப்புத்தகம்' அவற்றினையெல்லாம் மறைத்துவிட்டதை அதிர்ச்சியுடன் தெரிந்து கொண்டார் கூப்பர்.

இச்சம்பவத்தினை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தி ஏழில் றொஸ்வெல்லில் நிகழ்ந்த வேற்றுக் கிரக மனிதர்களின் விண்கல விபத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தார் கூப்பர். அவ்விபத்தின்போது விண்கலத்தின் இடிபாடுகளிடையே வேற்றுக்கிரக மனிதர்களையும் மீட்டிருந்தார்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள். ஆனாலும் அவ்விடயங்களை மறைத்துவிட்ட அரச அதிகாரிகள் அவ்விபத்தில் சம்பந்தப்பட்டது வெறும் காலநிலை அறியும் பலூன் என்று அறிக்கை வெளிவிட்டிருந்தார்கள். கூப்பரின் நண்பர் ஒருவரும் றொஸ்வெல் விவகாரத்தில் உடனிருந்த அதிகாரியாவார். கூப்பரின் நல்ல நண்பரான அவர் றொஸ்வெல் விவகாரம் பற்றிச் சொல்வதில் வெகு கவனமாக இருந்தார். இருப்பினும், விபத்துக்கு உள்ளானது காலநிலையறியும் பலூன் அல்ல, அது வேற்றுக் கிரக மனிதர்களின் விண்கலம் என்றும் அந்த வேற்றுக் கிரக மனிதர்களின் வாகனத்தில் இருந்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள் அல்லது கண்டு பிடிக்கப்பட்டார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார் என்பதைக் கூப்பர் நினைவு படுத்திக் கொண்டார். (இந்த றொஸ்வெல் விவகாரம் பற்றி எனது 'வேற்றுக் கிரக மனிதர்கள்' என்ற புத்தகத்தில் எழுதியிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அமெரிக்காவின் ரெக்சாஸ் பகுதியை அடுத்துக் காணப்படும் நியூ மெக்சிக்கோ பகுதியில் உள்ள றொஸ்வெல்லில் நடந்த அச்சம்பவம் இல்லாது எந்தவொரு இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றிய புத்தகமும் இல்லை என்றே சொல்லலாம்.)



அமெரிக்க அரசாங்கம் இந்த விவகாரத்தை அதாவது இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் என்ற விடயத்தை ஏன் இரகசியமாக வைத்திருக்கவேண்டும் என வினவுகின்றார் கூப்பர். ஏறத்தாள ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இந்த இரகசியம் அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றிய திடமான அறிக்கைகளையும் நம்பிக்கையான பதிவுகளையும் மூடி மறைத்து விட்டது. ஒரு வேளை இதுபற்றிச் சாதாரண குடிமக்கள் அறிந்தால், எங்கே எம்மைவிட உயர் அறிவுடைய உயிரினங்கள் எம்மையெல்லாம் நோட்டம் விடுகின்றனவோ எனப் பயந்துவிடுவார்களோ என்ற அச்சம் காரணமாக இருக்கலாமோ எனக் கூப்பர் கருதுகின்றார். ஆனாலும் இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றிய உண்மை நிலையை அரசாங்கம் தனது குடிமக்களுக்கு மறைக்காமல் தெரிவிக்க வேண்டும் என்பது கூப்பரின் அபிப்பிராயம்.

பொதுவாகவே கூப்பர் போன்றவர்கள் பதவியில் இருக்கும்போது இவைபற்றி மூச்சுக் கூட விடுவதில்லை. ஓய்வு பெற்றபின்னர் தான் விசயங்களை மெல்ல மெல்ல வெளியே சொல்வார்கள். அதுவும் ஒருசிலர் தான். சில இராணுவ உயரதிகாரிகள் கூடக் கூப்பரினைப்போல் வேற்றுக் கிரக மனிதர்கள் பற்றியும் இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றியும் ஓய்வு பெற்றபின் கூறியிருக்கின்றார்கள். இவர்கள் எல்லோருமே கூறுவதின் சாராம்சம் என்னவெனில், அரச அதிகாரிகளிடம் செல்லும் எந்தவொரு உருப்படியான இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றிய பதிவும், யானை வாயில் போன கரும்பு போலதத்தான். வெறும் சக்கை மாத்திரமே வெளிவரும். தேவையான உருப்படியான விடயங்கள் எல்லாம் உள்ளேயே மறைக்கப்பட்டுவிடும். உயிருக்குப் பயந்தோ அல்லது வெறும் ஏதேனும் காரணங்களினாலேயோ தெரியாது, வேற்றுக் கிரக மனிதர்கள் பற்றியோ அல்லது இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றியோ வெளியே சொல்பவர்களிலும் பலர் தம்மை இனம் காட்டாமலேயே விடயங்களைச் சொல்லுகின்றார்கள். அது மாத்திரமல்லாது இவர்கள் ஓய்வு பெற்றபின்னரே விடயங்களை பொது மக்கள் மத்தியில் சொல்வதால் உண்மை யில் சம்பவம் நடந்து நீண்ட காலத்தின் பின்னரே அவை வெளிவருகின்றன. இதனால் உடனே சொல்லப்படுவது போன்ற தான விளைவுகளை அச்செய்திகள் கொடுப்பதில்லை. இந்த விடயத்தில் அக்கறை அல்லது ஆர்வமுள்ள சிலருக்கே இதன் மகத்துவம் அல்லது முக்கியத்துவம் விளங்கும். இதனால்தானோ தெரியவில்லை, அரசாங்கங்களும் தமது ஓய்வு பெற்ற அதிகாரிகளின் அறிக்கைகளையிட்டு அதிகம் அலட்டிக் கொள்வதில்லைப் போலும்.

ஆனாலும் கூப்பர் போன்ற விவகாரமான ஆட்களின் பேட்டிகளை நாம் உதாசீனம் செய்யலாமா என்ன?


- கனி -

416.261.1348

leptons@hotmail.ca





LAW OFFICE

STEFANO FORTINI

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# வாழ்நாள் பேராசிரியர் செ. மகாலிங்கம்

மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையான் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்ற இடமெல்லாஞ் சிறப்பு

- மூதுரை

ஓர் அரசனுக்கு தனது நாட்டில் மட்டும்தான் சிறப்பும் மதிப்பும் இருக்கும். ஆனால் ஐயம்திரிபற கல்வி கற்றவனுக்கு செல்லும் இடம் எல்லாம் சிறப்பு என மூதுரையில் ஔவையார் கூறுகிறார். இவ்வாறே அதிர்வு கோட்பாட்டில் (Vibration) தனது பங்களிற்பிற்காக உலகப் பிரசித்தி பெற்றவர் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் (Emeritus Professor) செல்வதுரை மகாலிங்கம் D.Sc. Eng. அவர்கள்.

பேராசிரியர் செல்வதுரை மகாலிங்கம் அவர்கள் தனது 89ஆவது வயதில் திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தில் உள்ள 'வடக்கு மத்திய மருத்துவமனை'யான தனியார் மருத்துவமனையில் 2015 நொவம்பர் 03ஆம் திகதி காலமானார். இவர் அளவெட்டியில் செல்வதுரை நாகம்மா செல்வசரஸ்வதி தம்பதிகளுக்கு மூத்தமகனாக 1926 ஜனவரி 16இல் பிறந்தார். இவர் இளம்வயதிலேயே மலேயா (Malaya) நாட்டிற்கு தந்தை யாரின் தொழில் நிமித்தம் குடும்பத்துடன் புலம் பெயர்ந்தார். அங்கு Maxwell பாடசாலையிலும் பின்னர் விக்ரோறியா கல்லூரியிலும் தனது கல்வியை பயின்றார். அக்காலத்தில் மலேயாவில் பல்கலைக் கழக கல்வி வசதிகள் இல்லாமையால் மகாலிங்கம் தனது 20 வயதில் இலங்கைக்கு வந்து கொழும்பில் உள்ள Ceylon Technical College இல் 1946ஆம் ஆண்டில் தனது மேற்படிப்பை தொடர்ந்தார். அங்கு மகாலிங்கம் அவர்கள் வெளிவாரி மாணவனாக இலண்டன் பல்கலைக்கழகத்தில் பயின்று பொறியியல்துறையில் முதல்தர மாணவனாக சித்தியடைந்து இளமானிப் பட்டத்தை பெற்றார் (B.Sc.Eng., First class).



Professor Selvadurai Mahalingam (1926-2015)

1950இல் இலங்கைப்பல்கலைக்கழகம் (University of Ceylon) கண்டியில் ஆரம்பிக்கப்படும்போது அங்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொறியியற் பீடத்தின் ஆரம்ப விரிவுரையாளர்களில் ஒருவராக மகாலிங்கம் தன்னை இணைத்துக் கொண்டார். 1956ஆம் ஆண்டில் மகாலிங்கம் அவர்கள் University of Sheffield பல்கலைக்கழகத்தில் தனது முனைவர் பட்டதை (Ph.D) பெற்றார். அக்காலத்தில் இவர் அதிர்வு கோட்பாட்டில் செய்த ஆய்வு அத்துறையை சேர்ந்த வல்லுனர்களால் மிகவும் பாராட்டப்பட்டது. 1958இல் Vibration of Branched System: a displacement excitation approachஇல் செய்த இவரது ஆய்வு பிரசித்தி பெற்ற ஆய்வுகளை வெளியிடும் சஞ்சிகையான Journal of Applied Mechanicsஇல் வெளியானது. இதைத் தொடர்ந்து இலண்டன் பல்கலைக்கழகம் இவருக்கு D.Sc.Eng. என்ற பொறியியல் துறையில் மிக உயரிய பட்டத்தை வழங்கியது. இவ்விருதை பொறியியல் துறையின் வரலாற்றிலேயே வழங்கப்பட்ட முதலாவது உயர் விருது என பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் தனது சரித்திரத்தில் ஆவணப்படுத்தியுள்ளது. இவ்விருதை தொடர்ந்து மகாலிங்கம் அவர்கள் பேராசிரியர் தகைமையைப் பெற்றார்.

பேராசிரியர் செல்வதுரை மகாலிங்கம் அவர்கள் Avro Vulcan Royal Air Force (RAF) விமானத்தினுடைய Rolls Royce நிறுவனத்தின் Mk 11 Turbo-Jet Engine இன் தயாரிப்பில் முறுக்கத்தால் வரும் அதிர்வால் (Torsional Vibration) ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுக்கு தனது ஆய்வின் மூலம் தீர்வு வழங்கியதை முன்னிட்டு இந்நிறுவனம் தனது Rolls Royce உயர்ரக Car ஒன்றை அன்பளிப் பாக வழங்கியது. அதை அவர் ஏற்க மறுத்து பொறியியற் பீட மாணவர்களின் கற்கைக்கு உதவக்கூடிய Rolls Royce


தொடர்ச்சி 20ஆம் பக்கம்



Math tutorial 311

Answers to tutorial 310

1)If the three numbers are in the ratio 2:5:3 they are of the forms 2k,5k, 3k.Since 5k =60 , k=12.The other two numbers are 24 &36

2)  Diagram shows $\triangle$ PQR is a right angled triangle.The bisector of angle Q is a line that passes thro Q with a slope of 1



$\frac{y-1}{x-3}$=1,So eqn is x-y-2=0

3)$V_t$ =1(1 -.083)$^t$

$V_5$=1(0.917)$^5$ =.65 ,five years late the value will be$0.65

4)Since the two vectors are perpendicular $(2\bar{a}+\bar{b}).(\bar{a}-3\bar{b})$

=0,therefore2$|\bar{a}|^2$-5$\bar{a}.\bar{b}$ − 3$|\bar{b}|^2$=0,2$|\bar{a}|^2$-5$|\bar{a}||\bar{b}|$cosØ $-3|\bar{b}|^2$=0But $|\bar{a}| = 2|\bar{b}|$ *substituting this*

10cosØ=5,$Ø = 60^0$So angle between them is 60°

5)Since 10=2X5,in20!there are 5 10 ,15 & 20 that cotain a factor of 5. That is four 5 combine with four 2 to give the largest power $10^4$

TUTORIAL 311(QUESTIONS)

1)Solve the inequality

30≤3(2x+4) -2(x+1) ≤46

2)From a deck of 52 cards,how many different four –card hands could be dealt which include one card from each suit

3)What is the probability of rolling a dice and its value is less than 4, knowing that the value is an odd number?

4)Detemine the eqn.of tangent to y=$lnx^2$/3x at the point x=1?

5)Determine the vector eqn.of the plane containg the x-axis and the point A(-1,-4,-7)?

BY MR S.F XAVIER(TEACHER)

TEL6473409490/4167322228

# தேவர்களால் விண்ணுறையும் மாவீரர் பதம் தொழுவோம்




மாவீரர் நாளின்று நாமெல்லாம்
மாசற்ற புனிதர்களின் நாமம் வாழ்த்தி
தமிழீழம் படைத்துலகை அதிரவைத்த தலைவனுடன்
கரமிணைத்து மண்மீட்கப் போராடி உயிர்நீத்த
தியாகிகளின் இல்லத்தில் ஒளியேற்றி பதம் தொழுவோம்

வீதிகளில் வலம் வந்து வேதனைகள் அளித்தவர்கள்
வீடுகளில் இளைஞர்களை இழுத்தெடுத்துக் கொன்ற வந்தப்
படையினரை நடுநிசியில் வீதியிலே வீழ்த்திவிட்டு
தேவரான செல்லக்கிளி அம்மாவின் பதம் தொழுவோம்

வல்வெட்டித் துறையினிலே படுகொலைகள் புரிந்துவிட்டு
நெல்லியடி முகாமினிலே படையினர் கூத்தாடுகையில்
சல்லடையாய் வாகனத்துக்கு குண்டுகளால் முகாம் தகர்த்து
தேவராக விண்ணுறையும் மில்லர்பதம் தொழுவோம்

அருமையுடன் பெற்றவரை அணைத்தெடுத்து வளர்த்தவரை
ஒரு நொடியில் எறிகணையால் இழந்தலறிப் புலம்பெயர்வார்க்கு
பெருமனமாய் வாழ்வளிக்க, தலைவணணி யுடணிணைந்து
விஷக்கணையாய் கரும்புபுலியாய் படைமுகாம் தகர்த்தழித்து
தேவர்களாய் விண்ணுறையும், மாவீரர் பதம் தொழுவோம்

செந்தணலிற் கால்பதித்து களம்புகுந்து சமராடி
வந்தபகை எதிர்த்தவரின் படைவீழ்த்தி உடல் எடுத்தோர்
சந்ததியின் வாழ்வுக்காய் தயங்காது உயிர்நீந்து
தேவர்களாய் விண்ணுறையும் மாவீரர் பதம் தொழுவோம்

கஞ்சிக்கு வழிதேடி, படகோட்டும் மீனவரை
வஞ்சித்த கடற்படையின் நெஞ்சத்துத் திமிரடக்க
துஞ்சாதோர் இராவினிலே சாகரத்தை ஊடறுத்து
அஞ்சாது குண்டுடைத்து படைக்கப்பல் மூழ்கடித்து
விண்ணுறையும் அங்கயம் கண்ணிபதம் தொழுவோம்

ஏந்தி நிற்கும் தீபத்தின் சுடரினிலே துலங்குகின்ற
தியாகிகளின் வதனங்கண்டு சாந்தி கொள்ளும் உறவுகளின்
ஏக்கத்தில் சஞ்சலங்கள் சமராடும் மனநிலையில்
பாசத்தால் விழியுதிர்க்கும் கண்ணீரால், வேந்தனொடு
குடும்பத்தார் குழந்தைகளின் பதம் கழுவி வணங்கிடுவோம் - மாரீசன்

# வாழ்நாள்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

நிறுவனத்தின் சில பகுதிகள் வெட்டப்பட்டு உள்பகுதிகள் விரிவாகக் காட்டப்பட்ட Mk 11 Turbo-Jet Engine ஒன்றினை கேட்டுப் பெற்றுக் கொண்டார். அந்த Jet Engine தற்போதும் போரதனைப் பல்கலைக்கழக பொறியில் பீடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மறைவிற்கு பின்னர் தனது பிறந்த ஊரான அளவெட்டியில் வாழ்ந்து வந்தார். இவ்வாறு உலகப் புகழ்பெற்ற அறிஞரான (Renowned Scholar) பேராசிரியர் மகாலிங்கத்தை மேற்குலக நாடுகளில் உள்ள பல நிறுவனங்களும் மற்றும் விஞ்ஞானிகளும் தங்களது தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு தொடர்பு கொண்டு



1991இல் தனது விரிவுரையாளர் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரை தொடர்ந்தும் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் தனது ஆவணங்களில் வாழ்நாள் பேராசிரியர் (Emeritus Professor) என மதிப்பளித்து வந்தது. இதன்மூலம் வேண்டும் பொழுதெல்லாம் வாகனம் அனுப்பி அவரை பல்கலைக்கழகம் வருவித்து அவரிடமிருந்து ஆலோசனை பெற்றுவந்தது. இலங்கை அரசாங்கம் மகாலிங்கம் அவர்களுக்கு 2005 நொவம்பர் 07ஆம் திகதி ‘வித்தியா ஜோதி’ (Vidya Jyothi) என கௌரவபட்டம் அளித்து சிறப்பித்தது. வித்தியா ஜோதி எனப்படுவது இலங்கை அரசால் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் அதிஉயர் சாதனை நிகழ்தியவர்களுக்கு வழங்கும் விருதாகும்.

இவரது மனைவி தேவகியும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரை யாளராக இருந்தவர். பேராசிரியர் மகாலிங்கம் 2014 இல் தனது மனைவியின்

தீர்வுகளை பெற்றிருந்தன. பேராசிரியர் மகாலிங்கம் அவர்கள் தனது ஆய்வுகளில் பெரும்பாலானவற்றை இலங்கையிலேயே மேற்கொண்டவர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் அவர்கள் தனது விரிவுரை களை திட்டமிட்டு முன்கூட்டியே தயாரித்து கொண்டு வருபவர். தனது விரிவுரைகளின் போது மிகவும் அழகான விளக்கப் படங்களை கரும்பலகையில் வரைந்து எளிதாக விளக்குபவர். அவர் மிகவும் எளிமையும், நேரந்தவறாமையும், தன்னடக்கமும், மாணவர்கள்பால் மிகுந்த பரிவும் கொண்டவர். பேராசிரியர் மகாலிங்கம் அவர்கள் பேராதனைப்பல் கலைக்கழக பொறியியல் பீட சகல இன மாணவர்களின் மத்தியிலும் பெரும் அபிமானமும் மரியாதையும் பெற்றவராகத் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது.

**மாணவன்**
**சிவ. ஞானநாயகன்**

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில்**
**வாசிப்பதற்கு *www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***


**ARISTO PEST CONTROL**
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# பாகிஸ்தானின் 'தந்தை தெரேசா' அப்துல் சத்தார் ஈதி

இந்தியாவைச் சேர்ந்த கீதா 8 வயதாக இருக்கையில் வழிதவறி பாகிஸ்தானுக்கு சென்றார். லாகூர் சென்ற அவர் ஈதி பவுன்டேஷனைச் (Edhi Foundation) சேர்ந்த பில்கிஸ் எதியால் இத்தனை ஆண்டுகளாக பராமரிக்கப்பட்டு வந்தார். இந்நிலையில் அவர் 15 ஆண்டுகள் கழித்து நாடு திரும்பியுள்ளார்.




வாய் பேச முடியாத, காது கேட்காத அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிந்த அப்துல் சத்தார் ஈதி அவருக்கு கீதா என்று பெயர் வைத்தார். கீதா பாகிஸ் தானில் தான் தங்கியிருந்த அறையில் இந்து கடவுள்களின் புகைப்படங்கள், சிறிய மேஜையில் காத்மாண்டுவில் இருந்து வரவழைக்கப்பட்ட விநாயகர் சிலை ஆகியவற்றை வைத்து வணங்கியுள்ளார்.

கீதா நமாஸ் செய்ததுடன், புனித ரமலான் மாதத்தில் நோன்பும் இருந்துள்ளார். அவரை யாரும் இஸ்லாத்திற்கு மாற்ற முயற்சிக்க வில்லை என்று எதி தெரிவித்துள்ளார். கீதா சைவப் பிரியை. வாய் பேச முடியா விட்டாலும் அவர் தான் கூற விரும்புவதை இந்தியில் எழுதி காண்பித்து வந்துள்ளார். கீதாவின் இந்தியா முகவரியை கேட்டபோது அவர் திரும்பத்திரும்ப 193 என்ற எண்ணை எழுதியுள்ளார். இந்திய வரை படத்தில் தெலுங்கானா மற்றும் ஜார்க்கண்டை காண்பித்து தனது பெற்றோர் அங்கிருப்பதாக கூறியுள்ளார். பின்னர்தான் பீகாரை காண்பித்துள்ளார். இந்தியாவில் தனக்கு 7 சகோதரர்கள் மற்றும் 4 சகோதரிகள் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து அழைத்து வரப்பட்ட வாய் பேச முடியாத, காது கேளாத இந்த இளம் இந்தியப் பெண் இப்போது இந்தூரில் ஒரு காப்பகத்தில் வைக்கப்பட்டிருக்கிறார். அவரது உண்மையான குடும்பம் எது என்பதை டிஎன்ஏ பரிசோதனை மூலம் கண்டுபிடித்து அவர்களிடம் கீதாவை ஒப்படைக்கும் வேலையில் வெளியுறவு அமைச்சகம் உள்ளது. 15 ஆண்டுகளுக்கு முன் ரயில் ஏறி லாகூரில் போய் இறங்கிய இந்த சிறுமியை ஆவணங்கள் ஏதும் இல்லாததால் கராச்சியில் உள்ள ஈதி பவுண்டேசன் அமைப்பிடம் ஒப்படைத்தனர் பாகிஸ்தான் எல்லைப் பாதுகாப்புப் படையினர். அதுமுதல் அந்தக் குழந்தையை பத்திரமாக வைத்திருந்து பராமரித்தவர்கள் ஈதி பவுண்டசேனின் தலைவர் அப்துல் சத்தார் ஈதியும் (Abdul Sattar Edhi) அவரது மனைவி பில்கிஸ் ஈதியும் (Bilquis Edhi) தான்.

சிறுமி தனது பெயரைக் கூட சொல்லத் தெரியாத, சொல்ல முடியாத நிலையில், இந்தியாவில் இருந்து வந்த சிறுமி என்பதால் கீதா என பெயர் சூட்டியதும் அப்துல் சத்தார் ஈதி தான். இந்த ஈதி மிக வித்தியாசமான மனிதர். இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின்போது குஜராத்திலிருந்து பாகிஸ்தானுக்கு குடி பெயர்ந்தவர் தான் இந்த ஈதி. சிறுவனாக இருந்தபோது கைவண்டி இழுத்து குடும்பத்தை காத்தவர். இவரது தாயார் கான்சர் மற்றும் பக்கவாதத்தால் பாதிக்கப் பட்டு பெரும் வலியோடு போராடி உயிர் விட்டபோது அவரை காப்பாற்ற முடியாமல் தவித்து, இந்த நிலையில் இருப்போரை காக்க அவர் உருவாக்கியதுதான் ஈதி பவுண்டேசன்.

கூலி வேலை பார்த்து கிடைத்த பணத்தில் ஒரு சிறிய டிஸ்பென்சரியை ஆரம்பித்து அதில் ஏழைகளுக்கு இலவச

தொடர்ச்சி 35ஆம் பக்கம்




Parkway Mall Mobilicity Special Limited Time
$50 OFF COUPON
Life Time Deal
$20/mo
UNLIMITED Talk, Text & DATA (+$10)
UNLIMITED Local Calling
UNLIMITED Ontario Long Distance
UNLIMITED Text messaging
UNLIMITED DATA, Internet, Mobile-Hotspot (+$10)
FREE Caller ID, Voice Mail, Call Waiting and more
Samsung Galaxy Prime $399.99 $229.99
LG Optimus L90 $249.99 $149.99
Motorola Moto E $199.99 $119.99
Blu Studio G 5.0 $199.99 $99.99
BLU Dash L $149.99 $79.99
ZTE Zinger 4G $149.99 $59.99
Samsung T199 $99.99 $19.99
No Contract !! No Credit Check !!
All phones working to Mobilicity now !!! Bring in your own phone !!!
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS**
**7 DAYS A WEEK**

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS


VISA

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS



NEW TIRES FROM
$75
USED TIRES FROM
$35

## FREE OIL CHANGE WITH RUST PROOFING

$99 Car
$120 SUV

## BRAKE JOB

STARTING FROM
$159

## WATER PUMP TIMING BELT & LABOR

STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol

REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95

## TRANSMISSION FLUSH

*Starting From...*
*Imports*
*$74.95*
*Radiator Flush*
*$79.95*
*Domestic*
*$149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS

CHECK

LEXUS

FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5

(Midland & Lawrence, rear of the building)

## CALL SUBAS DIRECT → 416-206-9489

## Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchalidesigns.com 647.294.2963

# "எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றது சர்வதேச நாடுகளுடன் பேசுவதற்காக" கனடா வரவேற்புக் கூட்டத்தில் ஸ்ரீதரன் எம்.பி. உரை



"எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்றீர்கள் என நம்மவர்கள் கேள்வி எழுப்பினார்கள். வடக்கு, கிழக்கு எமது தாயகம். இதனை பெறும் வரை நாம் அரசுடன் இணைந்து செயற்பட மாட்டோம். தமிழ் தேசிய இனம் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதனால் அரசியல் தலைமைப் பொறுப்பினை ஏற்க முடியாது. அதனால் எதிர்க்கட்சித் தலைமையை ஏற்றோம். சர்வதேச ரீதியில் பேச இது வொரு அரிய வாய்ப்பாகும். சர்வதேசங் களின் ஆலோசனைப்படி இன்று நாம் என்ன செய்யலாம்? சர்வதேசத்தின் பார்வை யினால் தான் எமது பிரச்சினையை யூ.என்.ஓ.வுக்கு கொண்டு செல்ல முடிந்தது. அரசியல் என்பது ஓர் ஆயுதம் தாங்கிய போர். எதிர் தாக்குதலை நடத்திய வண்ணம் அரசியலிலும் ஈடுபட்டோம். யாழ். வலிகாமம் வடக்கில் ஏழாயிரம் ஏக்கர் நிலத்தில் மூவாயிரம் ஏக்கர் நிலத்தை மட்டும் அரசு விடுவித்துள்ளது. கிளிநொச்சி நகரில் 40 வீதம் இன்னும் இராணுவத்தின் வசம் உள்ளது. தீவகத்தில் மண்டை தீவு, சரவணை, நெடுந்தீவு ஆகியன இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட் டிலேயே இருந்து வருகின்றது. இராணுவம் குறைக்கப் படவில்லை. காணிகளும் விடுவிக்கப்பட வில்லை. அவர்கள் ஏமாற்றுவார்கள் என்பது எமக்குத் தெரியும்."

கனடாவுக்கு வருகை தந்துள்ள திரு.ஸ்ரீதரன் எம்.பிக்கு நாடு கடந்த அரசாங்கத்தின் சார்பில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு ஸ்காபுறோ "ஜே.சி.பாங்க்குவெற் ஹோல்" மண்டபத்தில் வரவேற்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் உரையாற்றிய திரு.ஸ்ரீதரன் எம்.பி. இவ்வாறு கூறினார். திரு. ஸ்ரீதரன் எம்.பி தொடர்ந்து பேசுகையில் பின்வருமாறு கூறினார்:

"சமஷ்டி அரசாங்கத்தினை கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் வரவேற்கின்றன. எனவே நாமும் எமது நாட்டிலும் சமஷ்டி அரசாங்கத்தை அமைக்க இந்நாடுகளின் மூலம் வலியுறுத்த வேண்டும். புத்திசாலித் தனமாக இதனை நாம் முன்னெடுக்க வேண்டும். நமக்கு பொறுமை, சகிப்பு, ஒன்றிணைதல் ஆகியன அவசியமாகும். எங்களை சிதறடிக்க அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது. நிரந்தர அரசியல் தீர்வினைப் பெற நாமெல்லோரும் இணைந்து செயற்படுவோம்".

இந்நிகழ்ச்சியை முதலில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பேராசிரியர் வண சந்திரகாந்தன் "நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எமக்கும், எமது மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மை பயக்க வேண்டும். ஆனால் நாம் நியாயத்தையும், நிதானத்தையும் இழந்து விடுகின்றோம். எங்களுக்காகக் குரல் கொடுப்பதில் அரசியலை எம்மிடம் இருந்து பிரித்து விட முடியாது. அரசியலினால் ஏற்பட்ட கொலைகளுக்கு அஞ்சி நாம் புலம் பெயர்ந்தோம். அரசியல் மாற்றத்துக்கு ஒத்துப் போவோராக உள்ளோம். ஐரோப்பிய ஒன்றியம் உருவாகியுள்ளது. ஆனால் எங்களைப் பொறுத்த வரை அழுத்தத்தினை ஏற்படுத்தி வருகின்றது. அரசியல் கருத்துக்களை தெரிவிப்போர் மீது நாம் காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொள்வது தவறு." என்றார்.

அதனை அடுத்து திரு. ஸ்ரீதரன் எம்.பி. உரையாற்றிய போது பின்வருமாறு கூறினார்: "எமது நாட்டில் 2015 ஜனவரிக்குப் பின்னர் வித்தியாசமான அரசு ஏற்பட்டுள்ளது. அது மாற்றலான எண்ண அலைகளை தந்து கொண்டிருக்கின்றது. அதற்கு முன்னர் நெருக்கடியான அரசு நிலை கொண்டிருந்தது. அதனால் மாற்றத்துக்காக வாக்களியுங்கள் என கூட்டணி வேண்டுகோள் விடுத்தது. அதனால் அரசியல் தலைமைத்துவத்தில் தேசிய அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதிகளவு வாக்குகளைப் பெற்ற மூன்றாவது கட்சியாக கூட்டணி வந்தது. அதனால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இணையாமலோ, அரசியல் கட்சியில் இணையாமலோ விடுவது தவறாகும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள அமைப்புக்களை அவர்கள் உடைக்க முயற்சி செய்கின்றார்கள். அதனால் புலம் பெயர்ந்த மக்களை இலங்கைக்கு அழைத்து விழா நடத்தவும் தயாராக உள்ளார்கள். எங்களது கவனத்தை திருப்பவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்கள். பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. நாம் பேச்சுவார்த்தை நடத்த செல்லும்போது சிலரை விடுவிக்கின்றோம். உங்களது காணிகளை திரும்பத் தருவோம் எனக் கூறுவார்கள்.

ஜெனீவா தீர்மானம் மூலம் நாம் சில நடவடிக்கைகளை மேற்கொள்வோம். ஐ.நா. சபைக்கு பொறுப்புக் கூறுவோம். 1983ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றது திட்டமிடப்பட்ட இன அழிப்பு என 1984ஆம் ஆண்டு ஆவணி மாதம் இந்திரா காந்தி கூறினார். 2010ஆம் ஆண்டு தமிழ் நாடு முதல்வரினால் குரல் எழுப்பப்பட்டது. இவை யாவும் வரலாற்றுப் பதிவுகள். நாம் எத்தகைய வேலைத் திட்டத்தை முன்னெடுக்கப் போகின்றோம் என்பது முக்கியம். அவற்றை நாமும் புலம்பெயர்ந்த மக்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டும். எமது இலக்கில் இருந்து நாம் தவற வில்லை. அரசியல் ஜனநாயகம் என்பது ஒரு அரசியல் சதுரங்கம். எமது தந்திரோபாயத்தை, அறிவுச் செயலை கூர்மைப் படுத்த வேண்டும். இலங்கை தமிழ் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் பற்றிய வீடியோ ஜெனீவாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அறுபதாயிரத்துக்கு உட்பட்ட மக்களை காணவில்லை என அங்கு தெரிவிக்கப்பட்டது.

நாடு கடந்த தமிழீழ முதல் அமைச்சர் திரு.வீ.ருத்திரகுமாரன் ஸ்கைப் மூலம் உரையாற்றிய போது பின்வருமாறு கூறினார்: "இலங்கையில் தமிழினத்துக்கு ஏற்பட்ட அரசியல் கொடுமைகள் சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக் கோரி நான்கு மில்லியன் மக்கள் கையெழுத்து இட்டுள்ளார்கள். யூ.என்.ஓ. மூலம் அதனை செயற்படுத்துவதற்கு ஒரு குழுவினை அமைத்துள்ளோம். இங்கிலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளைச் சேர்ந்த சட்ட வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றினை ஏற்படுத்தி உள்ளோம். இவர்கள் அனைவரும் ஐ.நா. சபையில் பங்கு பற்றிய அனுபவம் உடையோராவர். இக்குழுவின் மூலம் எவ்வாறு விசாரணையை மேற்கொள்ளலாம் என்பது பற்றி நாம் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். அதற்கு சர்வதேச தரத்தில் மனித உரிமை சாசன உண்மைகள், சாட்சியங்கள் அவசியம். மனித உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் சர்வதேச உறவை வலுப்படுத்தவே சர்வதேச சட்டம் உருவாக்கப்பட்டது. தற்போது மனித உரிமைகளுக்கு



ஆதரவளிக்க ஒரு நாட்டை நாம் தெரிவு செய்தால் அந்நாடு இதனை யூ.என்.ஓ.வில் வலியுறுத்த முடியும். இலங்கையில் நடந்தது இனப் படுகொலை தான் என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். இதற்கு நாம் சர்வ தேச நாடுகளின் உதவியுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

"தமிழ்" என்ற சொல்லையே ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்துவதில்லை. "தமிழீழ விடுதலைப் புலிகள்" என்ற சொல்லை மாத்திரம் பயன்படுத்தி வருகின்றது. இதுபற்றி எதிர்வரும் டிசம்பர் மாதம் சர்வதேச சட்டத்தரணிகள் சிலர் சேர்ந்து கலந்து ஆலோசிக்க உள்ளோம்". இச்சந்திப்பின் போது பார்வையாளர்களுக்கு கேள்வி கேட்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

வீரகேசரி மூர்த்தி






# வாழ்க்கைப் பயணங்கள் - 4

அமலா கடந்த இரண்டு வருடங்களாக 'சொவ்ற்சொலுசன்புரோ' என்ற இந்த கொம்பனியில் வேலை செய்கின்றாள். மனிதருக்கு ஒரு கெடுதல் கிடைக்கும்போது இன்னொரு வழியில் நன்மை கிடைப்பது நியதி என்பது போல் அமலாவுக்கு இந்த வேலை மகிழ்ச்சியைக் கொடுத்தது. இந்த வேலை மிகவும் எளிதாகக் கிடைத்தது என்று சொல்ல முடியாது. ஒருவரின் படிப்பிற் கேற்ற தொழிலைக் கனடாவில் பெறுவ தென்பது 'கல்லில் இருந்து நார் உரித்தல்' போலாக அறவே முடியாத காரி யம் என்று கூட பலர் நினைப்பதுண்டு. அவ்வாறான எண்ணத்துடன் எந்தவித முயற்சியும் எடுக்காமல் கிடைக்கும் வேலையுடன் வாழ்நாளைக் கழித்தவர்கள் பலர். 'நரியும் திராட்சைப்பழமும்' கதையைப் போல் பலமுறை தமது கல்விக்கேற்ற தொழிலைத் தேடி விட்டு 'சீ சீ இந்தப் பழம் புளிக்கும்' என்று வேறு வழிகளைத் தேடியவர்களும் உண்டு. படிப்பிற்கும் தொழிலிற்கும் இடையில் எந்த முடிச்சையும் போட முடியாமல் வெவ்வேறு துறைகளில் காலடி வைத்துப் பயணிப்பவர்களும் நிறையவே இருக்கின்றார்கள்.

அமலா இலங்கையில் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை மயிரிழையால் தப்ப விட்டுக் கணினித் துறையில் காலடி வைத்தவள். இவளைப் போன்று பல்கலைக் கழகம் செல்ல முடியாது திறமை வாய்ந்த பலர் ஆறாத் துயரத்தில் ஆழ்வதுண்டு. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் அதிகமா னவர்கள் தமிழர்கள் ஆக இருப்பதுண்டு. தமிழர்கள் முகம் கொடுத்த பல்வேறு விதமான ஒதுக்கல்களில் கல்விக்கான வாய்ப்புக் குறைவும் முக்கியமானதாக இருந்தது. இது இளைஞர்களிடையே அதிக விரக்தியை ஏற்படுத்தியது. அமலாவும் அதற்கு விதி விலக்கின்றி துயரப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த ஓர் அறிவித்தல் இவளின் கவனத்தை ஈர்த்தது. அந்த அறிவித்தலைப் பார்த்து விட்டு அதைப்பற்றி ஒரு சிலரிடம் விசாரித்துப் பார்த்திருந்தாள். பின்னர் அதற்கு விண்ணப்பித்து, அனுமதிப் பரீட்சையிலும் தோற்றித் திறமையாகச் செய்து கணினித் துறையில் டிப்புளோமா செய்திருந்தாள். அந்தப் படிப்பை முடித்ததும் கொழும்பில் ஒரு பிரசித்திபெற்ற கம்பனியில் புரோகிராமராக வேலைபார்த்து வந்தாள். அங்கேதான் சுகந்தியின் சிநேகிதம் இவளுக்குக் கிடைத்தது.

ரொறொன்ரோ நகர்ப்பகுதியில் அமைந் துள்ள பல வியாபார நிறுவனங்கள் அமைந்துள்ள உயர்ந்த கட்டிடங்களில் ஒன்றாக அமலா தொழில் புரியும் நிறுவனம் அமைந்துள்ள கட்டிடம் விளங்கியது. சப்வே மெட்ரோ ஸ்ரேசனில் ரெயிலில் இருந்து இறங்கினால் அவளின் வேலையிடத்திற்கு வெளியில் வராது கட்டிடத்திற்குள்ளாலேயே செல்ல முடியும். குளிர் காலத்தில் வெளி யில் செல்லாது ரெயிலில் இருந்து நேரடியாகச் செல்லக்கூடிய வசதி அமலா விற்கு நன்கு பிடித்திருந்தது. ஆனால் அவளின் அபார்ட்மன்ற் சப்வே ஸ்ரேசனில் இருந்து 10 நிமிடம் நடக்கும் தூரத்தில் இருந்ததால் எப்படியோ கொட்டும் பனியில் நடக்கும் துர்ப்பாக்கியத்தையும் பெற்ற வளாகத்தான் காணப்பட்டாள். ஆனால் நாள் முழுவதும் கணினியுடன் கட்டுண்டு கிடக்கும் அவளின் வேலைக்கு அந்த நடைப்பயணம் அவசியமானதாகத்தான் இருந்தது.

ஜனவரி மாதம் என்பதால் கடும் குளிர் ரொ-றொன்ரோ நகரை வாட்டிக் கொண்டிருந்தது. கடந்த இரண்டு நாட்களாகப் பொழிந்த பனி கும்பல் கும்பலாக நகரமெங்கும் காணப்பட்டது. வீதிகள் சற்றுச் சறுக்கலாக இருந்ததால் மிகவும் எச்சரிக்கையுடன் மெதுவாக நடக்க வேண்டியிருந்தது. எல்லோரும் மூடி மொட்டாக்கு போட்டபடி வருவதால் யாரையும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. சில நேரங்களில் ஆணா பெண்ணா என்று கூட அடையாளம் காண முடியாமல் இருக்கும். அமலா வீதியோரமாக மெல்ல மெல்ல நடந்து சப்வே ஸ்ரேசனில் ரெயிலைப் பிடித்துச் சனமோடு சனமாக நெரிசலில் பிரயாணம் செய்து தனது வேலைக்கு போய்ச் சேரும்பொழுது காலை ஒன்பது மணி பதினைந்து நிமிடமாகி விட்டது. அந்தக் கால நிலையில் ஒரு பதினைந்து நிமிடம் தாமதித்து வேலைக்கு செல்வதை யாரும் பெரிதுபடுத்த மாட்டார் கள் என்பது அமலாவுக்குத் தெரியும். ஆனாலும் வழமையாக நேரத்திற்குப் போய்விடும் அவளுக்கு இன்று நேரம் பிந்தி விட்டதே என்ற உணர்வு இருந்தது.

கோழி பயத்தில் 'பக்' என்றது. நாளைக் காலை விற்கப்பட்டால் நாளை இரவு நான் உணவு ஆகிவிடுவேன் எனப் பயந்தது. என்ன செய்யலாம் என புலம்பியது கோழி. 'எனக்கு பசிக்கும் போது, விவசாயி தன் பசிக்கு, வேறு ஒருவரின் பசி ஆற, நான் விற்கப்படப் போகிறேன்!' என்று சத்தமாக கூறியது கோழி. இதெல்லாம் கேட்ட ஒரு வயதான ஆடு, 'கோழி! கொஞ்சம் யோசியுங்கள்! மாலையில் ஒரு கல் மோதிரம் உனக்கு உதவியற்றது என எறிந்து விட்டாயே, அதை எடுத்து விவசாயிடம் கொடுத்தால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வரும்!' என்று கோழியிடம் கூறியது.


இதைப் புரிந்து கொண்ட கோழியும் ஓடிப்போய் இரவு நேரத்தில் தட்டுத் தடுமாறி எப்படியோ நிலவு வெளிச்சத்தில் மினுங்கிய அந்தக் கல் மோதிரத்தை கண்டுபிடித்தது. 'இது உதவியற்ற பொருள் என சொன்னது பிழை. இப்போது எனது உயிரைக் காப்பாற்றப் போகிறது' என அதை வாயில் எடுத்துக் கொண்டு போய் விவசாயியின் காலடியில் போட்டது.

'இது என்ன?' என்ற விவசாயி, 'ஓ! வைரக்கல் மோதிரம் போல இருக்கிறதே! பிரச்சினைக்கு தீர்வு வந்து விட்டது!' கோழியைப் பார்த்து 'கோழியையும் விற்கத் தேவையில்லை,' என்றார். கோழியும் சந்தோசப்பட்டது.

அடுத்த நாள் வைரக்கல்லை விற்ற விவசாயி கோழிக்கு நல்ல தரமான சாப்பாடும், தனது குடும்பத்திற்கும் மற்றைய மிருகங்களுக்கும் சாப்பாடும், பொருட்களும் வாங்கிக் கொண்டு வந்தார்.

'இப்பொழுது அந்த கல்மோதிரம் உண்மை யில் சாப்பாடு ஆகிவிட்டது. எனக்கு மட்டுமல்லாமல் விவசாயிக்கும் மற்ற மிருகங்களுக்கும் சாப்பாடு ஆகிவிட்டது. அத்துடன் நான் சாப்பாடு ஆகாமல் காப்பாற்றப்பட்டு விட்டேன்' என்றது கோழி.

**நீதி : சிறு துரும்பும் பல் குத்த உதவும்.**



ஞா. ஆரணி
அகவை 17

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# வேலே விளங்கு...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

கந்தப்பெருமான். அரி முகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே என அவன் போற்றப்படுகின்றான். எனவே அழகிற்கு ஒப்பில்லாதவன் முருகன். இதனை காந்தக்கவர்ச்சி எனலாம்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமுண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும் இனித்த முடைய எடுத்த பொற்பாதமுடைய, நடராஜமூர்த்தியே கண்டு நயக்கும் பெருங்கவினுடையவன் முருகன். கனகசபை மேவு எனது குருநாதா கருணை முருகேசப் பெருமாள் கரண் என்று திருப்புகழ் இதனை செப்புகின்றது.

தேவர்கள் மூவர்கள் யாவர்க்கும் சிறந்தவன் முருகக்கடவுள். மூவர்க்கும் முதல்வன். தேவர்கள் சிறைமீட்ட தேவ சேனாதிபதி தேவ தேவ தேவாதி தேவப்பெருமாள் எனப்படுகின்றார். திருமேனி மாறவன் மெஞ்ஞான பண்டிதனாரும் ஞானகர சுரபாஸ்கரன், ஞானபூரணன், ஞானதாதா என அவன் அழைக்கப்படுகின்றான். ஞான பண்டிதசுவாமி நமோ நமோ என திருப்புகழ் முருகனை பெருமைப்படுத்துகின்றது.

முருகனின் அழகு அதியசமானது, அற்புதமானது அதனை வலிந்திழுக்கும் வனப்பு எனலாம். எனவேதான் அந்த அழகை அள்ளிப் பருகுதற்கு இரு கண்கள் போதாது என்று கழிவிரக்கம் கொள்கின்றார் அருணைப்பெருமான். இதுதான் அப்பாடல்.

மாலோன் மருகனை மன்றாட மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற் பொழிற் செங்கோடனை சென்று கண்டுதொழ
நாலாயிரம் கண்படைத்திலனே அந்நான் முகனே.

முருகனை நினைந்து உருகிவழிபடுவர் மருள் நீங்கப் பெற்று அருள்வளத்துள் திளைப்பர். கந்தப்பெருமானது கழலினை விழிக்கும், முருகா எனும் நாமம் மொழிக்கும் பன்னிரு புயங்கள் பழிபாவங்கட்கும், வேலும் மயிலும் தனிவழிக்கும் துணையாகநின்று அருள் புரிவனவாகும். அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருகன் என்றார் நக்கீரர். எனவே முருகா என்ற சொல்லுக்கு ஒரு மந்திர சக்தி உள்ளது. இறைவனது கழலினை கண்டு உவக்கும் போது களிபேருவகை ஏற்படுகின்றது. கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே என்றார் மணிவாசகர். நாம சங்கீர்த்தனம் செய்து தூய்மையுடன் மனம் ஒன்றி வழிபட்டால் கடவுளின் கழலினைகளின் கடாட்சத்தை பெறலாம். முன்புசெய்த பழிக்கு துணைவருவன முருகனின் பன்னிருபுயங்களு மாகும். தனிவழி தனித்து துணையின்றிச் செல்லும் வழிக்கு உதவுவன வேலும் மயிலுமேயாகும். தனிவழி என்பது உற்றார் உறவினர் அனைவரும் கைவிட மெய்விட்டு கூற்றுவன் பின் செல்லும் வழியெனக் கொள்வது மிகவும் பொருந்தும்.

விழிக்குத்துணை திருமென்மலர்பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத்துணையவன் பன்னிருதோளும் பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடனும் மயூரமுமே

முருகன் அவதாரத்தினால் கடல் அழுதது. குன்று அழுதது. சூரன் அழுதான். ஆனால் அமரர் ஆனந்தித்தனர். அடியவர் அகமகிழ்ந்தனர். முருகனது வேலின் வெம்மை யும் தாளின் செம்மையுமே இதற்கு காரணமாகும்.

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரம் தோன்றில் வேல் தோன்றும்
நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்

வேல் என்பது ஞானமாகும். வேலின் அடிப்பகுதி நீண்டும் நடுப்பகுதி அகன்றும் நுனிப்பகுதி கூர்ந்தும் காணப்படும். ஞானமும் ஆழந்தும் அகன்றும் நுணகியுமிருக்கும். அது வினையாகிய மலையை எளிதில் துகள்படுத்த வல்லது. வினையோடவிடுங்கதிர்வேல் மறவன் கந்தனாகும். அத்தகைய வேலை வேளைதோறும் வணங்குவதையே வேலையாகக் கொண்டால் சூழும் வினையகற்றி வாழும்வகை அருள்வான் வடிவேலன். வேற்படையை நினைப்பவர்க்கு அகந்தேவினைப்பதையும் புறத்தே முனைப்பகையும் வேருடன் அழியும்.

கனேடியச் செய்திகள் ... இலங்கைச் செய்திகள்...
சர்வதேசச் செய்திகள்.... விளையாட்டுச் செய்திகள்...
சினிமா செய்திகள்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# ஐந்து பிரதான மனநோய்களும் சில புரிதல்களும்

**"உடல் நோயை விட மனநோய்தான் மனிதனை அதிகம் அழிக்கும் தன்மை வாய்ந்தது." சிசரோ**

இன்றைய உலகம் புதுப்புது மன நோயாளிகளை சந்தித்துக் கொண்டிருக் கிறது. உடல் நோய்களைப் போலவே மனநோய்களும் மிக கடுமை வாய்ந்தவை. உலகம் முழுவதும் பில்லியன் கணக்கான மனநோயாளர்கள் வாழ்கின்றார்கள். ஐம்பது வயது வந்தவர்களுள் ஒருவருக்கு மனரீதியான பிரச்சினைகள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடும் என்பதே மருத்துவர்களது நம்பிக்கையாகும். 200க்கு மேற்பட்ட மனநோய்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் திகில் அல்லது பீதி ஒழுங்கீனம் (Panic disorder), இருமுனை ஒழுங்கீனம் (Bipolar disorder),உளச்சோர்வு (Depression), முரண் மூளை (Schizophrenia) போன்ற மன நோய்களை மாற்றக்கூடிய அல்லது குறைக்கக் கூடிய மருத்துவ முன்னேற்றங்கள் தற்போதுள்ளன.

பொதுவாக குடும்பங்களில் உள்ள மன நோயாளிகள் பற்றி வெளிப்படையாக கூறப்படுவதில்லை. இவ்வாறான மனநிலை ஒழுங்கீனம் உள்ள குடும்பங்களை 'மன நோயாளிக்குடும்பம் அல்லது பைத்தியக் காரக்குடும்பம்' என்று சமூகம் ஒதுக்கி விடுகின்றது. அந்த குடும்பத்தில் சம்பந் தமே வைத்துக் கொள்ள மாட்டார்கள். தாயகத்தில் மட்டுமன்றி இங்கு வாழும் எம்மவர்கள் கூட இப்போதும் மன நோய்களுக்கு சூனியம், பில்லி, பேய் போன்ற காரணத்தையே நம்புகின்றனர். எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் அவர்கள் நம்பத் தயாரில்லை. தமிழ் நாட்டிலிருந்து இங்கு வரும் மாந்திரீகம் செய்பவர்களும் இதற்கு மேலும் வலுவூட்டுகின்றனர். அறிவியில் ரீதியில் நோக்கினால் இவ் ஒழுங்கீனங்கள் அனைத்தும் மனத்துடன் சம்பந்தப் பட்டவையே ஆகும். இதனைப் புரிந்து கொள்ளாத பலர் இன்றும் உள்ளனர்.

உளவியலின் தந்தை என கருதப்பட்ட சிக்மன்ட் ஃபிராய்ட் (Sigmund Freud) என்ற உளநல ஆய்வாளர் செய்த உளப் பகுப்பாய்வு கோட்பாடு (Psychoanalytic) இன்றுவரை பலரது ஆய்வுக்கும் உதவி யுள்ளது. பொதுவாக சிந்தனைக்குழப்பம் (Thought Disturbance), பிரமைசார் ஒழுங்கீனம் (Delusions), மனநிலை மாற்றங்கள் (Mood Disturbances), மாயத் தோற்றங்கள் (Hallucinations), மருட்சிகள் (Illusions), சுயஉணர்வு மாற்றங்கள் (Disturbances in consciousness), நித்திரைக் குழப்பங்கள் (Sleep Disturbances), முதிர்மனநோய்கள் (Psychoses), முரண்மூளைநோய் (Schizophrenia), சந்தேக உணர்வு



(Paranoid), வலிப்பு நோய் (Epilepsy), மேனியா (Mania), இரட்டை ஆளுமை (Dual Personality) போன்ற நூற்றுக் கணக்கான நோய்கள் கண்டறியப்பட்டுள் ளன. புதுப்புது நோய்கள் தோன்றுவதனை தவிர்க்க முடியாதுள்ளது.

அமெரிக்காவிலுள்ள உளச்சிகிச்சை நிறுவனம் (American Psychiatric Association - APA) உலகில் உள்ள சகல மனநோய்களையும் கண்டறிந்து, வகைப்படுத்தி அதனை சில வரைமுறை களில் வெளியிட்டு வருகிறது. இதனை 'Diagnostic and Statistical Manual of Mental Disorder' என்ற பெயரில் வெளியிட்டு வருகிறது. இதனை DSM என அழைக்கலாம். 1952 இல் DSM முதலாம் பாகம் ஆரம்பித்து 2013இல் DSM ஐந்தாம் பாகம் வெளியிடப்பட்டுள்ளது.

உண்மையில் மனநோய் ஒரு தொற்று நோய் அல்ல. பலர் இதனை தவறாக புரிந்துள்ளனர். ஒவ்வொருவருடைய பரம்பரை அலகுகளும் சூழ்நிலைகளும் இதில் செல்வாக்கு செலுத்தக்கூடும். பிரதானமான மனநோய்கள் ஐந்து வகைப்படும். அவையாவன: பதற்றநிலை ஒழுங்கீனம் (Anxiety Disorder), மனநிலை ஒழுங்கீனம் (Mood Disorder), முரண் மூளை ஒழுங்கீனம் (Schizophrenia), முதுமை மறதி அல்லது அறளை பெயர்தல் (Dementias), உணவு உண்ணும் ஒழுங்கீனம் (Eating Disorder).

## பதற்றநிலை ஒழுங்கீனங்கள்

இதனை பதட்டம், பதகளிப்பு, தவிப்பு எனவும் அழைக்கலாம். எமது வாழ்நாளில் சிறிய அளவிலாவது பதற்றம் அடைந்திருப் போம். ஆனால் தொடர்ச்சியாக, பொருத்தமில்லாதவாறாக படுமோசமான உளவியல் சிக்கல்களை எதிர்கொள்வது தான் உண்மையான பதற்ற ஒழுங்கீன மாகும். சுற்றாடல் வேறுபாடுகள் இருந்தா லும் சிலருக்கு பதற்றம் ஏற்படலாம். சிறுவர், இளையோர், வயது வந்தவர்கள் கூட இப்பாதிப்புக்கு உட்பட்டுள்ளனர். இதில் திகில் (Panic attack), அதிர்ச்சிகர மான பழைய உணர்வுகள் (Flashback of traumatic events), பயங்கர கனவுகள் (Nightmares), ஒன்றல் - உந்தல் ஒழுங்கீனம் (மனதை அலைக்கழிக்கும் ஒழுங்கீனம்) (Obsessive compulsive disorder) என்பன உள்ளடங்கும்.

சில குறிப்பான பதற்றங்களில் பயம் அல்லது பீதி (Phobias) முக்கியமாகும். நூற்றுக்கணக்கான பய உணர்வுகள் உலகம் முழுவதிலும் உள. ஏதோ ஒரு பொருள், சம்பவம், இடம் போன்றவற்றிற் கெல்லாம் பயம் கொள்வார்கள். பிராணிகள். விலங்குகள் போன்றவை மட்டுமன்றி வெளியே செல்லவும் பயம், வீட்டுக்குள் தனித்திருக்கவும் பயம் என்றவாறாக கண்டதற்கெல்லாம் பயம் கொள்வதே இவர்களது பிரச்சினையாகும்.

திகில் (Panic) எனப்படும் ஒரு ஒழுங்கீனம் பலரின் பதற்ற உணர்வுக்கு ஆளாகின்றது. எதுவித முன்னெச்சரிக்கையும் இல்லாமல் திடீரென ஏற்படும் நிகழ்வு பெரும் பீதியை ஏற்படுத்தலாம். புவி நடுக்கம், எரிமலை, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங் களால் பலர் பீதியடைகின்றனர். இதே போன்று திடீரென ஏற்படும் யுத்த தாக்குதல்கள் கூட பலரை கிலிகொள்ள வைக்கலாம். இவர்களுக்கு இதயத்துடிப்பு, மார்புவலி, சுவாசக்குறைபாடு, வயிற்று கோளாறு, தலைச்சுற்று, சிறுநீர் வரும் உணர்வு, சாகப்போகிறோம் என்ற பய உணர்வு ஏற்பட்டு விடுகின்றது.

பதற்றக் கோளாறுகளில் திரும்பத்திரும்ப ஒரே வேலையை செய்யும் தூண்டலுக்கு உட்படுகின்ற ஒழுங்கீனம் உள்ளவர்கள் பலர். இதனை ஒன்றல் - உந்தல் ஒழுங்கீனம் (மனதை அலைக்கழிக்கும் ஒழுங்கீனம்) (OCD) எனபர். இந்த ஒழுங்கீ னம் உள்ளவர்கள் அவர்களை அறியா மலே மீள மீள ஒரு செயலைச் செய்வர். உதாரணமாக கைகளை அடிகடி கழுவிக் கொள்வர், திரும்பத்திரும்ப குளிப்பர், பூட்டிய கதவுகளை இழுத்து இழுத்துப் பார்பார்கள். காரணம் தங்களுக்கு பக்ரீரியா தொற்றி விடுமோ என்ற பயமதான். எமது வீடுகளில் பலர் இப்படி இருப்பார்கள். ஆனால் அதுவும் ஒருவகை மனநோய் என்று அவர்களுக்குத் தெரிவதில்லை.

பதற்றக் கோளாறுகளில் கடும் அதிர்ச்சிக்கு பின்னதான மனஅழுத்தக் கோளாறு (Post-Traumatic Disorder) ஒரு வகையாகும். இவர்கள் முன்பு ஏற்பட்ட யுத்த அனர்த்தங் களுக்கு உள்ளானவர்களாக இருப்பர். மற்றும் இயற்கை அழிவினை சந்தித்தவர் கள், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி இருப்பவர்கள் அடங்குவர். இவர்கள் அடிக்கடி பயங்கர கனவுக்கு உட்படுவார்கள். மீள்நினைவு (Flashback) இவர்களை வருத்தும். அமெரிக்காவில் ஏற்பட்ட இரட்டைக் கோபுரத்தாக்குதலால் பாதிக்கப்பட்ட பலருக்கு இவ் ஒழுங்கீனம் ஏற்பட்டுள்ளது.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 41ஆம் பக்கம்

**YOGA - MEDITATION CLASSESS**
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# பாகிஸ்தானின்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

முதலுதவி வழங்கியவர் ஈதி. பின்னர் தெருத்தெருவாக மக்களிடம் பிச்சை எடுத்து, அதில் கிடைத்த நிதியில் ஆதவற்றவர்களுக்கு உணவும் உறைவிடமும் தந்தவர்.

இப்போது பாகிஸ்தானின் மிகப் பெரிய பொதுநல அறக்கட்டளை ஈதி பவுண்டேசன் தான். 500க்கும் மேற்பட்ட அம்புலன்ஸ்கள், 2 ஹெலிகாப்டர் அம்புலன்ஸ்கள், நாடு முழுவதும் ஏராளமான ஆதவற்றோர் இல்லங்கள், 24 மணி நேரமும் இயங்கும் ஹெல்ப்லைன் பிபிஓ என பரந்து விரிந்து கிடக்கிறது ஈதியின் சமூகப் பணி.




வெள்ளைத்தாடி, இரு ஜோடி உடைகள் தான் ஈதியின் அடையாளம். பொதுச் சேவைக்காக வசூலிக்கப்படும் பணத்தில் ஒரு ரூபாயைக் கூட தானோ தனது குடும்பமோ எடுத்துவிடக் கூடாது என்பதில் கரார் பேர்வழி ஈதி. ஒரு சிறிய வீட்டில் தங்கியிருந்து மாபெரும் சமூக சேவை அமைப்பை ஒருங்கிணைத்து வருகிறார். 87 வயதைக் கடந்துவிட்ட ஈதிக்கு சமூக அக்கறையில்லாத பணக்காரர்கள் மீதும், வரி ஏய்ப்பாளர்கள் மீதும், மதவாதிகள் மீதும் பெரும் கோபம். "நான் பெரிய சமூக சேவைக்காரன் எல்லாம் இல்லை. ஏழை களிடம் இருந்து நிதி திரட்டி ஏழைகளை கவனித்துக் கொள்பவன். நான் தாடி வைத்திருக்கும் மதவாதி அல்ல, நான் ஒரு நல்ல முஸ்லீமாக இருக்க முயற்சிப்பவன்" என்கிறார். பெண் குழந்தைகள் கொலையைத் தடுக்க முதன்முதலில் தொட்டில் குழந்தை திட்டத்தை ஆரம்பித்தவர். இதுவரை 36,000 குழந்தைகள், அதில் பெரும்பாலானவை பெண் சிசுக்கள், உடல் ஊனம் உள்ளவர்கள், இவரது தொட்டிலில் வந்து சேர்ந்திருக்கின்றன.

சாலையோரங்களில் கிடக்கும் மனநலம் பாதிக்கப்பட்டோர், போதைக்கு அடிமை யானோர், முதியோர் ஆகியோரை இவரது அம்புலன்ஸ்கள் இரவு பகலாக தங்கள் இல்லங்களுக்குக் கொண்டு வந்து சேர்க்கின்றன. இயற்கை சீரழிவுகள், விபத்துகள், குண்டுவெடிப்புகள் நடந்தால் அந்த இடத்தில் இவரது குழு முதல் ஆளாய் வந்து நிற்கும். காயமடைந்தவர் களை அம்புலன்ஸ்களில் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும். சிதறிக் கிடக்கும் உடல்களை அள்ளி மருத்துவமனைகளில் சேர்க்கும். இந்த நிகழ்வுகளால் ஆதரவின்றி நிற்கும் குழந்தைகளை தனது இல்லம் கொண்டு செல்லும். பெரிய அளவில் சட்ட திட்டங்களைக் கூட ஈதி மதிப்பதில்லை. நான் சட்டத்தை மதித்துக் கொண்டிருந்தால் உயிர்களைக் காக்க முடியாது என்பது இவரது வாதம். அதேபோல இவர் தொழுகை புரிபவர் என்றாலும்கூட மதத்துக்கும் இவருக்கும் நெடுந்தூரம். மதம் அவரவர் தனிப்பட்ட விடயம். மதத்தை விட மனிதாபிமானம் முக்கியம் என்பவர் ஈதி. இவரது இல்லத்தில் இருப்போர் எந்த மதமோ அந்த மத பிரார்த்தனைகள் செய்யலாம்.

தங்கள் சமூக இல்லத்தில் இருந்த கீதாவுக்குக் கூட ஒரு பகுதியை ஒதுக்கித் தந்திருந்தனர் ஈதியும் அவரது மனைவியும். அந்தப் பகுதியில் லட்சுமி தேவி, பிள்ளையார் படங்களை வைத்து பூஜை செய்து வந்தார் கீதா. அதேபோல இவரது இல்லத்தில் உள்ள கிறிஸ்துவர்கள்




தங்கள் மத அடிப்படையில் பிரார்த்தனை செய்ய எந்தத் தடையும் இல்லை. இதனாலேயே ஈதி மீது பாகிஸ்தானிய மத அமைப்புகளுக்கும் அதன் தலைகளுக்கும் பெரும் கோபம். இவரது சமூக இல்லத்தை ஒருமுறை மதவாதிகள் சூறையாடிவிட்டுப் போனார்கள். இவரது அமைப்புக்கு உதவி செய்யாதீர்கள் என்ற பிரச்சாரம் கூட நடக்கிறது. ஆனால், இந்த சக்திகளால் சமூகத்துக்கு ஒரு பயனும் இல்லை என்கிறார் ஈதி. இவர்கள் பள்ளிவாசல் கட்ட பணம் தருவார்கள். ஒரு ஏழைக்கு ஒரு வேளை உணவு தர மாட்டார்கள். ஹஜ் பயணம் போவார்கள். ஆனால், ஒரு ஏழைப் பெண்ணின் திருமணத்துக்கு உதவ முன் வரமாட்டார்கள். நான் 5 வேளை தொழுகை புரிவதில்லை. எனக்கு நேரம் இல்லை. ஆனால், அல்லாஹ் என்னை அறிவான் என்கிறார்.

பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு இடையே ஒருமுறை துப்பாக்கிச் சண்டை. சாலையெல்லாம் உடல்கள். ராணுவம், போலீசாரால் கட்டுப்படுத்த முடியாத துப்பாக்கி சூடு. அங்கே விரைந்தது ஈதியின் அம்புலன்ஸ். துப்பாக்கிகள் ஓய்ந்தன. உடல்களை அம்புலன்ஸ்களில் ஏற்றிக் கொண்டு ஈதி கிளம்பிய பின் மீண்டும் வெடித்தது துப்பாக்கி சண்டை. இதுதான் ஈதி. ஒருபக்கம் மதவாதிக ளால் எதிர்க்கப்படும் ஈதியை துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகளே மதிக்கும் நிலை. காரணம், அவர் மக்களால் மதிக்கப்படுவதே.

ஒருமுறை அதிபர் ஜியா உல் ஹக் இவரை அழைத்து ரூ. 10 லட்சம் நன்கொடை தந்தார். அதை அப்படியே திருப்பித் தந்துவிட்டார் ஈதி. எந்த நாட்டு அரசாங்கத்திடமும் எப்பவுமே உதவி வாங்கக் கூடாது என்கிறார் ஈதி. முதலில் பணம் தருவார்கள், பின்னர் அவர்கள் சொல்வதை மட்டுமே கேட்டு ஆடச் சொல்வார்கள். இதனால் எந்த அரசிடமும் நான் உதவி வாங்குவதில்லை. அதேநேரம் தனிப்பட்ட நபர்கள், அவர்கள் போதைப் பொருள் விற்பவனாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. அவர்களிடம் நன்கொடை வாங்குவேன் என்கிறார். இதனால்தான் கீதாவை பராமரித்ததற்காக இந்திய அரசு தந்த ரூ. 1 கோடியையும் திருப்பித் தந்துவிட்டது ஈதி பவுண்டேசன். இது ஏதோ பாஜக அரசுக்கு எதிரான செயல்மாதிரி இந்தியாவில் சில மதவாதிகள் திசை திருப்ப முயன்றனர். ஆனால், ஈதி இதுவரை எந்த அரசிடமும் பணம் வாங்கியதில்லை என்பதே உண்மை. அதேநேரத்தில் அதிபராக இருந்த பர்வேஸ் முஷாரப் தனது சொந்தப் பணத்தில் இருந்து நன்கொடை தந்தபோது ஆட்சேபனையே இல்லாமல் வாங்கிக் கொண்டார் ஈதி. தனது சமூகப் பணிக்காக 1986இல் ராமோன் மகாசேசே விருது பெற்ற ஈதியை நோபல் பரிசுக்குக் கூட பாகிஸ்தான் பரிந்துரைத்தது. பாகிஸ்தானின் Father Teresa என அழைக்கப்படும் ஈதி பவுண்டேசனுக்கு அமெரிக்கா, கனடாவிலும் கிளைகள் உள்ளன.


பணி நிமித்தமாக இவர் அமெரிக்கா, கனடா செல்லும்போதல்லாம் இவரை விமான நிலையத்தில் தனியாக அழைத்துச் சென்று 18 மணி நேரம் கூட விசாரித்துள்ளன. எனது தாடியும், எனது உடையும், குல்லாவும்தான் இதற்குக் காரணம் என சிரிக்கிறார் ஈதி. இவர் நடத்தும் மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லத்தில் இவர் நுழைந்தால், அப்பா, அப்பா என இவரை கட்டி அணைக்கின்றனர் அந்த மனம் பிறழ்ந்த குழந்தைகள். பாலஸ்தீனம், போஸ்னியா, ஆபிரிக்கா என இவரது சமூகப் பணிகள் பரவிக் கிடக்கின்றன.

சிறுநீரகங்கள் பழுதாகி வாராவாரம் டயாலிஸிஸ் செய்து கொள்ளும் ஈதியிடம் ஆசி வாங்கிக் கொண்டுதான் இந்தியா கிளம்பினார் கீதா. "உலகத்துல எல்லோரும் அட்வைஸ் மட்டும்தான் சொல்றாங்க. கடவுள் கூட அட்வைஸ் மட்டும்தான் செய்றார். குரான், பைபிள், கீதை என அட்வைஸ் செய்யும் புத்தகங்கள்தான் வருது. ஆனால், கடவுள் மட்டும் சொர்க்கத்தில் சகல சுகத்துடன் வசிக்கிறார். பூமியில் நிராகரிக்கப்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கை எவ்வளவு கஷ்டம்". இது 1990களில் தன்னை சந்தித்த மூத்த பத்திரிக்கையாளர் சேகர் குப்தாவிடம் ஈதி சொன்னது. இப்படியெல்லாம் பேசுவதால் என்னை இந்த ஊர் மதவாதிகள் கம்யூனிஸ்ட் என்கிறார்கள். நான் கம்யூனிஸ்ட்டும் அல்ல, முல்லாவும் அல்ல. நான் ஒரு பிராக்டிகல் மேன் என்கிறார் ஈதி.

கீதாவை இந்தியா கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றியவர் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ். அமைச்சராக மட்டுமல்ல, ஒரு மனிதாபிமானியாக, ஒரு தாயாக இருந்து இந்தப் பணியை ஒருங்கிணைத்தார். ஆவணங்கள், சட்டங்கள் என ஏகப்பட்ட நடைமுறைகள் இருந்தாலும் செயல்முறையில் இந்த விடயத்தை கையாண்டார்.

- நன்றி: தற்ஸ்ரமில்

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# EDUCATION

## Review Questions15 -22

### ➢ MATH 11

Determine each $V_1$ and $V_2$ in terms of V using the following relationships.

$V_1 + V_2 = V$ ......1


$18\ V_1^{\,2} + 18V_2^{\,2} - 13\ V^2 = 0$ .....2

### ➢ PHYSICS 12

A 2.0 kg mass is dropped vertically on a spring from a height of 1.2m. If the spring constant is 150N/m, determine the compression of the spring.

### ➢ CHEMISTRY 12

Name the following compounds



### ➢ CHEMISTRY 11

(i) A 17.2 g of impure $NaHCO_3$ contains 3g of $KNO_3$. Solubility of $KNO_3$ and $NaHCO_3$ are 32g and 8g. What is the smallest volume of water at 20°C that could be used to remove the impurity and leave pure $NaHCO_3$

(ii) A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride.

How much $Cl_2$ is produced in grams?

$K_2Cr_2O_7\,(aq) + 14HCl(g) \rightarrow$

$7H_2O(l) + 2KCl\,(aq) + 2\ CrCl_3(aq) + 3\ Cl_2(g)$

### BIOLOGY 12 :

Describe the cyclic and non-cyclic photophosporilation and its importance in carbon fixation

## Answer Key : 15-21

### PHYSICS 12

| 100km/h | 60km/h | 0 km/h |
|---|---|---|
| $\omega_1$ rad/s | $\omega_2$ | $\omega_3 = 0$ |

radius r = 0.6m

$$\omega_1 = \frac{v}{r} = \frac{100 \times \frac{1000}{3600} m/s}{0.6\ m}$$

$$\omega_2 = \frac{v}{r} = \frac{60 \times \frac{1000}{3600} m/s}{0.6\ m}$$

Angular displacement, $\theta = 72 \times 2\pi$ rad.

$\omega^2_{(2)} = \omega^2_{(1)} + 2\alpha\,\theta$

$\alpha$ = angular acceleration,

$27.8^2 = 46.3^2 + 2\alpha\ 72 \times 2\pi$

$\alpha = -1.52$ rad/s$^2$

$\omega_{(3)} = \omega_{(2)} + \alpha\,\Delta t$

$\Delta t = 18$ s ( 2 sgd)

### ADV. FUNCTIONS

$\log_a x = 3$ and $\log_a y = -2$, determine $\log_a(\frac{x^2}{y^3})$

$log_a x - (log_a\ y^3) = log_a x - 3(log_a\ y) = 11$

### CACULUS 12

(i) Differentiate, $\cos^2\frac{1}{x}$

ans: $\frac{2}{x^2}\cos\left(\frac{1}{x}\right)\sin\left(\frac{1}{x}\right)$

(ii) Find the limits, $\lim_{x\to 0} \frac{\sin 2x + 3x}{2x + \sin 3x}$

ans : 1

(i) Differentiate, $\cos^2\frac{1}{x}$

(ii) Find the limits, $\lim_{x\to 0} \frac{\sin 2x + 3x}{2x + \sin 3x}$

Answer key
15-22 - next issue
☎ 647 341 3975
KEEN TUTORING CENTRE

# வன்முறை தவிர்ப்போம்

ரத்தம், ரத்தம், எங்கும் ரத்தம்
சடலம், சடலம், எங்கும் சடலம்
நன்முறையில் வாழவேண்டிய உயிர்களெல்லாம்

புனிதப்போர்கள் என்ற பெயரில்
மனித உயிர்களை எடுத்தல் என்ன ஞாயம்.
மதத் துவேஷத்தால் மனிதவெடிகுண்டுகள்



வன்முறையால் வாழ்விழக்கும் கொடுமை.

மதத்தின் பெயரால் உயிர்களை வதைத்தல்
மதம் படித்தவர்களா இவர்கள்

மதம் பிடித்தவர்கள் அன்றோ.

சத்ருக்களை வதைத்தல் ஞாயம்
சகோதரர்களையே வதைத்தல் என்ன நியாயம்.
குற்றம் புரிவோரைக் கொன்றால் கூட பரவாயில்லை
குழந்தைகளைக் கூட கொல்லுதல் என்ன ஞாயம்.
கருணையின் வடிவாய் இருக்க வேண்டிய பெண்டிரும்
கையில் துப்பாக்கியுடன் அலைவதென்ன ஞாயம்
இனம் மாறிக் காதலித்தால் கௌரவக் கொலை.
இறைச்சி சாப்பிட்டதாய்க் கூறி இன்னொரு படுகொலை.
எழுத்தாளர்கள் மீது மைவீசித் தாக்குதல்
இழந்து விட்டோம் நாம் மத சகிப்புத் தன்மையை
இழந்துவிட்டோம் நாம் தேசிய உணர்வை.

எந்த மதமும் ஆதரிக்காத தீவிரவாதத்தை
எந்த மதமும் ஆதரிக்காத மத துவேஷத்தை
எந்த மதமும் ஆதரிக்காத இனப்படுகொலைகளை
எந்த மதமும் போதிக்காத வன்முறைகளை
என்று கைவிடுகிறோமோ, என்று குறைகிறதோ
என்று அகிம்சையும், சமத்துவமும், அன்பும் நம்மை
ஆள்கிறதோ
அன்றுதான் உலகில் அமைதி நிலவும்
அன்றுதான் உலகம் வளர்ச்சி அடையும்.

இத்தரையில் ஜனித்த உயிரெலாம்
நித்திரை கலைந்தெழுதல் நிச்சயமில்லை -ஆகவே
நித்திலத்தில் உள்ளவரை
நித்திய கடமைகள் தவறாது செய்குவீர்.
புத்தர், ஏசு, நபிகள் நாயகம்,
சித்தர்கள், சீலர்கள், மகான்களெல்லாம்
புத்தியிலுரைக்கச் சொன்னது போல
சத்தியம், அஹிம்சை, அன்பு வழி நடப்போம்.

- சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்

# இலங்கையில் தேசிய அளவில் சாதனை படைத்த டென்சிகா

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவி தேவதாஸ் டென்சிகா இவ்வருடம் பியகமவில் இடம்பெற்ற 15 வயதுக்கு உட்பட்டோர் 800 மீற்றர் ஓட்ட பந்தயத்தில் முதலாம் இடம் வந்து தங்கப்பதக்கத்தினை வெற்றிகொண்டு, 25 ஆண்டுகளின் பின் தங்க பதக்கம் வென்ற தமிழ் பெண்மணி என்னும் பெருமையை தமிழர்களுக்கும் பெற்றுத் தந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாவாந்துறையை பிறப்பிட மாகக் கொண்ட டென்சிகாவின் தந்தையார் நாவாந்துறை சென். மேரிஸ் உதைபந்தாட்ட கழகத்தின் முன்னைநாள் சிறந்த வீரராவார். யுத்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து தற்போது அங்கேயே வாழ்ந்து வருகின்றனர். தந்தையின் கனவினை நனவாக்கியதாக ஒளி அரசி இதழுக்கு கொடுத்த பேட்டியில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. காரணம் டென்சிகாவின் தந்தைக்கு ஏற்பட்ட விபத்தினால் அவர் உதைபந்தாட்டத்தில் ஈடுபட முடியாமல் போனமையினால், தன்னால் சாதிக்க முடியாததை தன் பிள்ளைகள் மூலம் சாதிக்க வேண்டும் என்று விடா முயற்சியோடு கொடுத்த ஊக்கமே டென்சிகாவின் இந்த சாதனைக்கு முக்கிய காரணமாகும்.



டென்சிகாவின் இலட்சியம் சர்வதேச ரீதியாக சானைகள் படைக்க வேண்டுமென்பதாகும். டென்சிகாவின் இந்த வெற்றிக்கு பெற்றோர், பயிற்சியாளர் முகுந்தன், தவிர பாடசாலை யின் நிர்வாகமும் மிக முக்கியமானது. பழைய மாணவர்களின் உதவிகள் மற்றும் டென்சிகாவிற்கான உணவு, உடை போன்றவற்றையும் ஒழுங்கு செய்து அவரின் வெற்றிக்கு பெரும் பங்கு வகித்தது பாடசாலை நிர்வாகம்.

800 மீற்றர் போட்டியில் கலந்து கொள்ளும் அத்தனை வீராங்கனைகளும் சிங்கள மாணவிகளாகவும் டென்சிகாவை விட உயர்ந்தவர்களாகவும், இவர்களை எப்படி டென்சிகா வெற்றி பெறுவார் என்ற எண்ணம் தனக்குத் தோன்றியதாகவும் ஒளி அரசி நேர்காணலில் கூறிய பயற்சியாளர் முகுந்தன், போட்டி தொடங்கியதும் டென்சிகாவின் மின்னல் வேக ஓட்டத்தினை கண்டு மெய்மறந்து நின்றதாகவும் கூறியுள்ளமை டென்சிகாவின் ஆளுமையை யும் தன்மேல் அவர் கொண்ட நம்பிக்கையை யும் காட்டுவதாக கூறியுள்ளார். அதே போல் டென்சிகாவால் நிச்சயம் சர்வதேச அளவிலும் சாதிக்க முடியும், அதற்கான பயிற்சி, உணவு வகைகளை சரியான முறையில் மேற்கொண்டு வந்தால் என்ற தன் நம்பிக்கையினையும் தெளிவாக கூறியுள்ளார்.

# இனவாத சிறை!

புலித்தோல் போர்த்திய
குள்ள நரிகள்
ஓநாய்கள்
வல்லூறுகளுக்கெல்லாம்
சுதந்திரமாய்
உல்லாசம்புரிந்திட
வில்பத்துவும்
வேடந்தாங்கலும்!

பாவப்பட்ட
எலிகளும்
பூனைகளும்
புறாக்களும்
பூசாவிலும்



வெலிக்கடையிலும்!

சித்திரவதை கூடங்களும்
அகதிமுகாம்களும்
ஈழத்தமிழனின்
நிரந்தர வாழ்விடமாச்சு!

தமிழர் உரிமையென்றால்
என்றுமே செல்லாக்காசுதான்.....
தமிழர் உரிமையும்
இனவாதமும்
நீதி தராசில்......
பெறுதி கூடும் பக்கம்
என்றுமே சாய்ந்துகொள்ளும்
அநீதி தராசு

கண்கள் பிடுங்கப்பட்ட
நீதி தேவதையின் கையில்!

தமிழரின் குருதியின் மேல்
அரங்கேற்றப்படும்
இனவெறியர்களின்
அரசியல் தொடர் நாடகங்கள்!

நடிப்பவர்கள் காலாகாலம்
மாறிக்கொள்வர்
இருந்தும்
கதையும்
கதாபாத்திரங்களும் ஒன்றுதான்!

தரணி ஆண்ட தமிழன்
வந்தோரையெல்லாம் வாழவைத்த தமிழன்
இன்று
தம் உரிமைகளுக்காய்
பிச்சை எடுக்கிறான்
உலகின் காலடியில்!

பாவம்
பிச்சை போடத்தான் யாருமில்லை!

ஈழத்தமிழனின்
விடிவு என்பது.......
விடையில்லாத விடுகதையோ......!

- ராஜ்

## சிறப்பு செய்தி

இலங்கையில் தேசிய அளவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உதைபந்தாட்ட போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் வி. கழகம் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது. பிரிவு 2 கான தகுதிகாண் உதைபந்தாட்டப்போட்டி தேசிய அளவில் நடைபெறுகின்றது. இதில் வெற்றிபெறும் கழகம் இலங்கையின் தாற்பிரிவில் இணையும் வாய்ப்பும் உள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து ஏராளமான விளையாட்டு கழகங்கள் பங்கு கொண்ட போதும் அவை யாவும் முதல் சுற்றுடன் வெளியேறியன. நாவாந்துறை சென். மேரிஸ் வி.கழகம் இரண்டாம் சுற்றுக்குள் சென்று அரை இறுதி ஆட்டத்தில் வெலி ஓயா யுனைடெட் விளையாட்டு கழகத்தினை வெற்றி கொண்டு இறுதி ஆட்டத்திற்கு வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் கழகமாக தமிழர் நமக்கு பெருமை சேர்த்துள்ளது.

இந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் யாவும் புள்ளி அடிப்படையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. முதலாவது அரை இறதியாட்டம் வெலி ஓயா யுனைடெட் கழகத்துடன் யாழ். நகரில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இரண்டு கழகங்களும் கோல் எதுவும் போடாமல் ஆட்டம் சம நிலையில முடிவுற்றது. இதனால் யார் இறுதிப்போட்டிக்கு போவது என்ற முடிவினை எடுப்பதற்கான இரண்டாவது அரை இறுதி ஆட்டம் கொழும்பில் 10 – 11 – 2015 நடைபெற்றது. இதில் 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சம நிலையில் முடிவுற்றபோதிலும் இரு கழகங்களும் விளையாடிய போட்டிகளில் பெற்ற வெற்றிகளின் போது எதிரணிக்கெதிராக போட்ட கோல்களின் அடிப்படையில் புள்ளிகள் கணிக்கப்பட்டு நாவாந்துறை சென். மேரிஸ் வி.கழகம் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று தமிழர் நமக்கு அகில இலங்கை அளவில் பெருமை சேர்க்க வாழ்த்துவோம்.

- ஆசீர் அன்ரனி -

நகைச்சுவைத் தொடர் 321

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



கந்தசஸ்டி விரதங்களை உலகர் குழாம் இதுவரையில் 20..30..தடவை கந்தசஸ்டி கவசம் சிடியில் கேட்டாகிவிட்டது. சீர்காழி கோவிந்தராஜன், சூலமங்கலம் சகோதரிகள் நித்தியசிறீ மகாதேவன் என ஒவ்வொரு குரலிலும் கேட்டாகி விட்டது.




இதற்கிடையில் தீபாவளி நாங்கள் கொண்டாடலாமா இல்லையா என்ற வாக்குவாதம் இன்னும் முடிந்தபாடில்லை.

செக்கண்ட்புளோா செல்லம்மா சேலில் வாங்கிய சாறியை கட்டலாமா இல்லையா என குழம்பியது மட்டுமில்லை தீபாவளி கொண்டாடக் கூடாது என மோலுக்குள் சந்தித்த பிறிம்லி மீனா சொன்னதும் செக்கண்ட்புளோர் செல்லம்மா குழம்பிவிட்டா.




அன்னம்மாக்கா இந்தச்சாறியை கொண்டுபோய் றீ.்.பண்ட் எடுக்கலாமே? எனக்கேட்டு முடிக்கமுன் அன்னம்மா ஆவேசத்துடன் சொன்னா... பாவம் ரூபனும் ரூபியும் எங்களை காரிலை ஏற்றி கடைகடையா அலைஞ்சு..



உனக்கு வேதாளம் சாறி, தூங்காவனம் சாறி, மாரி சாறி..என வந்த புதுப்படத்து சாறி எல்லாம் தெரிந்து களைத்துப்போய் ஒரு சாறி வாங்கி அதுவும் அந்த சாறி சின்னத்தம்பி படத்திலை குஸ்பு கட்டின சாறி மாதிரி எனக்கு நல்ல விருப்பம் என சொல்லும்போது ஓம் செல்லம்மா உங்கடை 65ஆவது பேர்த்டே பார்ட்டிக்கு கட்டலாம் என்று ஐ...பொட் அகிலாண்டேஸ்வரி சொல்ல செக்கண்ட்புளோர் செல்லம்மாவிற்கு காலையில் குளிசை போட்டு இறங்கிய பிறசர் உச்சத்துக்கு வந்தது.

உன்னை பிறிம்லி மீனா தீபாவளி கொண்டாட வேண்டாம். அது எங்கடை விழா இல்லையாமே.. என குமுறினா ஆட்டிலறி அன்னம்மா.



பிறிம்லி மீனாவின்ரை மாமன் யாழ்ப்பாணத்திலை புடவைக்கடை வைச்சிருக்கேக்கை தன்ரை சினேகிதியளை தீபாவளிக்கு உடுப்பு வாங்க கூட்டிக்கொண்டுபோறது பக்கத்து சனசமூக நிலையத்திலை கலை நிகழ்ச்சிகள் நடத்தி பரிசு கிடைச்சது. உலகண்ணை வீட்டை வரேக்கை படங்கள் எல்லாம் கொண்டுவந்து காட்டினவ.

தைப்பொங்கல் கொண்டாட வேண்டாம். சித்திரை வருசப்பிறப்பு கொண்டாட வேண்டாம். ஏன் இன்னும் கொஞ்ச நாள்ளை தகப்பனை நினைத்து விரதமிருக்கும் ஆடி அமாவாசை தாயின் நினைவாக விரதமிருக்கும் சித்திரா பௌர்ணமி கொண்டாட வேண்டாம் என்று சொல்லுவினம். உனக்குள்ள பகுத்தறிவை கொண்டு நட. ஏவல் பேய் கூரையை பிடங்கின தென்பார்கள். நீயும் குழம்பி எங்களையும் குழப்பாதை என்று கந்தசஸ்டி விரதக் களையுடன் பேசி முடித்தா ஆட்டிலறி அன்னம்மா.



உலகர் செய்திகளை அலசிக்கொண்டிருந்தார். உலகெங்கும் பரவிவாழும் தமிழர்களின் பார்வை எதுவித விசாரணையுமின்றி வருடக்கணக்காக சிறையில் வாடும் தமிழ்க் கைதிகளைப்பற்றித்தான். அந்த விடுதலை பற்றி அறிக்கை விடும் அரசியல்வாதிகள் அளக்கும் கதைகள் ஒரு தொடர் சீரியலை விட பெரிது.

ஜெயில் கொண்டிசனை விட பெயில் கொண்டிசன் பயங்கரமாக இருக்கு என முருகேசர் சொன்னது உலகருக்கு ஞாபகம் வந்தது. கொழும்பிலும் தமிழ்ப்பகுதிகளிலும் கைதிகளின் விடுதலைக்காக கடையடைப்பு ஆர்ப்பாட்டம் உண்ணாவிரதம் ஆலயங்களில் ஆராதனைகள் நடைபெறுகின்றன.

## விளையாட்டும் வினையும்



தைப்பொங்கல் தீபாவளி திருவிழாக்கள் மற்றும் குதூகலமாகக் கொண்டாடும் விழாக்களில் வான வேடிக்கை, வெடி மத்தாப்பு முக்கிய இடம் வகிக்கிறது.

வருடாவருடம் சர்வதேச நாடுகளில் வெடி செய்யும் தொழிற்சாலைகள் தீக்கிரையாவதும் சட்டவிரோதமாக அங்கு வேலை செய்த சிறுவர் உட்பட பலர் இறந்ததும் இறப்பதும் சகலரும் அறிந்ததே.



ஆனால் பிறாம்ரன் பகுதியில் தீபாவளி கொண்டாடியதில் ஒரு வீடு தீக்கிரையாகியிருக்கிறது.

கார்த்திகை விளக்கீடு தீபம் ஏற்றும்போது கவனமாக ஏற்றுங்கள்.


ஞாபகம் இருக்கிறதா நவம்பர் 15 .. 30




16. கந்தசஸ்டி சூரசம்ஹாரம்.

17. ஸ்ரீ சபரிமலை ஐயப்பன் மண்டல கால ஆரம்பம்.

17. சர்வதேச மாணவர் நாள்.



18. கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரப்பிள்ளை நினைவு தினம். (வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம். (கப்பல் விடுவோம்)



19. பிரபல நடிகர் எம். என். நம்பியார் நினைவு தினம்.

20. குழந்தைகள் நாள்.



21. உலக தொலைக்காட்சி நாள்.

25. பொ. கைலாசபதி நினைவுதினம்.



25. காத்திகை விளக்கீடு சர்வாலய தீபம்.

27. மாவீரர் நாள்.
வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார். மாபெரும் வீரர் மானம் காத்தோர் மக்கள் மனதில் நிற்கின்றார்.






# பிரிவு

இதம் தந்த தாயின் கருவில்
பதமாக அமர்ந்து
பத்து மாதத்தின் பின்
முதல் பிரிவு

பள்ளி வாழ்வின் குதூகலிப்பில்
பட்டாம் பூச்சிகளாய் நாம் ஆடித் திரிந்து
பட்டப்படிப்பு பெற வேண்டி நட்புகளின் பிரிவு



பருவம் வந்த பின்
பதின்ம வயது கோளாறில்
பார்த்தவுடன் பற்றிக்கொள்ளும்
பல காதலில் இருந்து பிரிவு

கல்யாணம் எனும் உறவிற்காய்
காலம் காலமாய் காத்து நின்று
கடவுளான பெற்றவரிடமிருந்து
விடைபெற்று செல்லும் துயரப் பிரிவு

நாட்டின் நிலைமை நாளும் வாட்ட
நன்னுயிர்தனை காக்கும் நோக்கில்
நாம் பிறந்த தேசத்தை விட்டு மீண்டும் பிரிவு

வேலை மாறி வேலை செய்து
வேண்டிய அனைத்தையும் பெற வேட்கை கொண்டு
வேஷம் போட்டு மாறும் தளங்களில்
வேதனைப் பிரிவு



மீரா குகன்
ஜேர்மனி

வயது வந்து நோய் முற்றிய பின்பு
வந்த நோக்கம் எதுவும் முடியாமல்
வருத்தத்தில் வாடி தேய்ந்து
வாழ்வை விட்டு இறுதியாக விடைபெறும்
நிரந்திரப் பிரிவு


நாளும் நாளும் பிரிவு
நம்மை வாட்டும் பிரிவு
நாளாந்தம் கண்டாலும்
நம்மையே தொலைப்பதும்
ஏன் இந்த பிரிவினாலோ?

# கவிதையில் வாழ்கின்றார் கவிஞர்

மின்னல்போல் திடீரென எம்மைவிட்டு மறைந்து விட்டார் கவிஞர் 'திருமாவளவன்' அவர்கள். தற்கால இருபத்தோராம் நூற்றாண்டில் அறுபது வயது என்பது இளமைக் காலமாகவே கணிக்கப்படுகிறது. எவருக்கும் வரக்கூடாத நோய் ஒன்று தாக்கி அவரைக் காவிச்சென்றுவிட்டது. இது மிகமிகத் துயரமான ஒரு சோக நிகழ்வு.

கவிஞரின் நினைவு மீட்டலும் அவரின் ஒட்டு மொத்தக் கவிதைத் தொகுதியின் வெளியீடும் கடந்த எட்டாம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை, ஸ்காபுறோ பிறிம்லி வீதி இராணிமாளிகை விருந்தோம்பல் மண்டபத்தில் இனிதே நிகழ்ந்து நிறைவேறியது. மண்டபம் நிறைந்த சனக்கூட்டம். எங்கு திரும்பிப் பார்த்தாலும் அறிஞர்கள் கலைஞர்கள் எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் முதலியோரின் முகங்களைத்தான் பெருந் தொகையாகக் காணக்கூடியதாக இருந்தது.

முன்னாள் ரொறன்ரோ தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் தலைமை தாங்கி நிகழ்ச்சியைத் திறம்பட நடத்தினார். முனைவர் – கவிஞர் – சேரன், முனைவர் வெங்கட்ரமணன், முனைவர் பொன்னையா விவேகானந்தன், அத்தோடு வேறு சிலரும் சிறப்புரை நிகழ்த்தினர். கவிஞர் திருமாவளவனின் கவிதைகள் சிலவற்றையும் வாசித்தனர்.



கவிஞர் சேரன் பேசும்போது: ஒருவர் தனது மரண காலத்தை, நாளை தெரிந்திருந்தால், தான் இறப்பதற்கு இடைப்பட்ட காலத்தில் எத்தகைய மனநிலையில் அவர் வாழ்ந்திருப்பார்? அவரின் மரணம்பற்றி அறிந்திருக்கும் உறவுகள் நண்பர்களின் மனமும் இதயமும் எத்தகைய 'அதிர்வலைகளுடன்' இயங்கியிருக்கும், என்று ஒருவித ஆழ்துயரத்துடன் கூறினார். மேலும், புலம்பெயர் தேசங்களின் சமூக பொருளாதார அமைப்பு, இயந்திர வாழ்க்கை முதலிய சில எதிர்வினைக் கூறுகள் பற்றி சிறிய ஒரு விளக்கமும் தந்தார்.

அப்போது மண்டபத்திலுள்ள மக்கள் எல்லாம் ஒருவித இறுகிய மனநிலையில் காணப்பட்டார்கள். அந்த இறுக்கநிலையை, தலைவர் இராசரத்தினம் அவர்கள் சில ஆறுதல் வார்த்தைகளால் கலைத்து தொடர்ந்தும் நிகழ்வை இனிதே நடத்தினார்.

நிகழ்வின் ஓர் அங்கமாக கவிஞர் திருமாவளவனின் கவிதைத்தொகை, காலச்சுவடு வெளியீடு: "சிறு புள் மனம்" வெளியிடப் பட்டது. வாசகர்கள் பலரும் புத்தகத்தைப் பெற்றுக்கொண்டனர். அந்நூலில், கவிதைகள் தொடங்குமுன், முன்பக்க வெற்றுத் தாளின் மத்தியில் காணப்படுகின்றது:

போர்
தவிர்த்து
நீள் பயணம் நடந்து
நெடு நாள் கழிந்தும்
காலடிக்கீழ்
பெரு நிழலாய்த் தொடர்கிறது
போர்.

இந்த ஏழு வரிகள் போதும் கவிஞரின் உள்ளடக்கம் கூறுவதற்கு. கவிதைத்தொகையின் பின்னட்டைக் குறிப்பு:


துயரமே மேலோங்கி
நிற்கின்ற கவிதைகள்.
இவற்றில் மரபுகளும்
சடங்குகளும் உறவுகளும்
தடம் புரண்டு கிடக்கின்றன.
எனினும்
வாழ்வின் முழுமையைப்
பிரதிபலிக்கின்ற
அற்புதமான கவிதைகள் இவை.

பேராசிரியர் செல்வா கனகநாயகம். இப்படியாகக் காணப்படுகிறது.

நிகழ்வில் கோப்பி சிற்றுண்டி, இறுதியில் சுவை மிக்க இரவுணவு வழங்கப்பட்டது. கவிஞர் கண்ணதாசனின் வரிகளில் கூறுவதானால்:

"நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் அவனுக்கு மரணமில்லை".

ஆம். உண்மைதான். உலகம் உள்ளவரை கவிதைகள் வாழும். கவிதைகள் வாழும்வரை கவிஞர் திருமாவளவனும் வாழ்ந்துகொண்டே இருப்பார். போய் வா அன்புக்குரிய கவிஞரே. வேளை வரும்போது நாமும் உங்கள் காலடியைத் தொடருவோம்.



முத்துராஜா



# ஈரான், சிலி, துருக்கி, பாலஸ்தீனியம், கனடா



**வானரன்**

## ரக்சி - ஈரான் (2015)

உலக சினிமா விமர்சகர்களால் அதிகமாக உச்சரிக்கப்படும் பெயர் ஜபர் பனஹி. ஈரானின் கடுமையான சட்டதிட்டங்களுக்குள் அகப்பட்டு பல தடவை சிறை சென்றவர். 2010ஆம் ஆண்டு பங்குனி மாதம் பனஹி, அவரது மனைவி, மகள் ஆகியோர் ஈரானிய அரசு எதிராக செயல்பட்டதாக கைது செய்யப்பட்டனர். அதே ஆண்டு மார்கழி மாதம் இவருக்கு ஆறு ஆண்டுகள் சிறையும் 20 ஆண்டுகள் திரைப்படத்துறைக்குள் நுழைவதற்கும் தடையும் விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து மேன்முறையீடு செய்தார். 2011இல் இவர் வீட்டுகாவலில் வைக்கப் பட்டார். ஈரானை விட்டு வெளியேற தடையும் விதிக்கப்பட்டது. திரைப்படத்துறை தடையை மீறி வீட்டுக் காவலில் இருந்த போது ஒரு ஒளிப்பதிவுக் கருவி மூலம் 'இது படமல்ல' (This is not a Film) என்ற படத்தை உருவாக்கினார். இதனை ஒரு பென் டிரைவினுள் பதிவு செய்து, அதனை ஒரு கேக்கினுள் வைத்து எல்லை கடந்து கான்ஸ் திரைப்படவிழாவிற்கு அனுப்பினார். இதனைத் தொடர்ந்து பல திரைப்படவிழ-ாக்களில் இப்படம் திரை யிடப்பட்டது. அதன் பின்னர் 'மூடிய திரைச் சீலை' (Closed Curtain) என்ற படத்தை இயக்கினார். இதன் பின்னர் இவர் இயக்கி பேர்லின் திரைப்பட விழாவில் சிறந்த பட விருதைப் பெற்ற படம் ரக்சி அல்லது தெஹ்ரான் ரக்சி.



வாடகை கார் ஓட்டுபவர்கள் பொதுவாக ஒரு நகரத்தின் பல முகங்களை அறிந்திருப்பார்கள். பொருளாதார வீழ்ச்சி, ஏற்றம் கூட இவர்களை கடந்துதான் செல்லும். அவ்வாறான ஒரு வாடகை கார் ஓட்டுபவராக பனஹி நடித்து இயக்கியுள்ள படமிது. தெஹ்ரான் நகரின் பல முகங்களை இப்படம் வெளிப்படுத்துகின்றது. சிறு ஒளிப்பதிவுக் கருவியுடன் ஏறும் சிறுமி தனது ஆசிரியை தனக்கு கூறியதாக கூறி கூறும் விடயம் ஒரு படத்தை விநியோகிப்பதற்கான விதிகள். இவ்விதி-களை ஈரானிய படங்களைப் பார்க்கும் பொழுது எளிதாக காணலாம். பெண்களும் ஆண்களும் ஒருவரையொருவர் தொடக் கூடாது. ஈரானிய சட்டதிட்டங்களுக்குட்பட வேண்டும். வன்முறைகள் தவிர்க்கப்பட வேண்டும் போன்றவற்றை சிறுமி கூறுகின்றார். படம் பயணிகளின் ஊடாக பயணிக்கின்றது. ஆண்கள் கைப்பந்து போட்டியை ஆண் உடை அணிந்து சென்று பார்த்தமைக்காக கைது செய்யப்பட்டு சிறை யில் உள்ள பெண் இப்பொழுது உண்ணாவிரதமிருக்கின்றார். இவரைக் காணச் செல்லும் மனித உரிமைக்காக போராடும் வழக்கறிஞரும் பனஹியுடனேயே பயணிக்கின்றார். பனஹிக்கும் அவருக்கு மான உரையாடல் இன்றைய ஈரானை தெளிவாக காட்டுகின்றது. 'நீங்கள் அனைவரும் கண்காணிக்கப்படுகின்றீர்கள். சிறையிலிருந்து வெளியே வந்த பின்னர் மிகப் பெரிய சிறைக்குள் தள்ளப்படு கின்றீர்கள். இது உங்களுக்கு ஒரு முடிவை எடுக்கத் தள்ளுகின்றது. ஒன்றில் நீங்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். இல்லையேல் நீங்கள் மீண்டும் சிறை செல்ல வேண்டும்'. பனஹியின் வாழ்வும் இதனில் வெளிப்படுகின்றது.

பேர்லின் திரையிடலின் பின்னர் ஈரானில் இவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார். 'நான் தடைகளை மீறியும் படமெடுப்பேன். அதனை எவராலும் தடுக்க முடியாது'. இவரது கடைசி மூன்று படங்களும் ஈரானிய அரச அனுமதியின்றியே எடுக்கப்பட்டன. ஈரானில் படமெடுப்பதற்கு கலாச்சார மற்றும் இஸ்லாமிய வழிகாட்டி அமைச்சிடம் அனுமதி பெறப்படவேண்டும் இப்படம் பேர்லின் திரைப்படவிழாவில் சிறந்த பட விருதைப் பெற்றது. Golden Bear for Best Film.

## த கிளப் - சிலி



பப்லோ லைறனின் முன்னைய மூன்று படங்களும் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டவை. ரொரன்ரோ விழாவில் திரையிடப்படும் இவரது நான்காவது படம் த கிளப். வண பிதா கார்சியா சிலியின் கரையோர கிராமத்திற்கு விசாரணைக்கு வருகின்றார். அக் கிராமத்தில் ஓய்வு பெற்ற வண பிதாக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுடன் மொனிக்கா என்ற பெண் துறவியும் இவர்கள் தங்கியிருந்த வீட்டிலேயே தங்கியுள்ளார். வண பிதாக்களில் ஒருவர் நாய்களை வளர்த்து போட்டிக்கு அனுப்பிவருகின்றார். ஒரு நாள் ஒரு மீனவர் வந்து இவர்கள் தங்கியிருந்த வீட்டின் வெளியே சத்தமிடுகின்றார். அங்கு தங்கியிருக்கும் வண.பிதா ஒருவர் இந்த மீனவர் சிறுவனாக இருக்கும் பொழுது தகாத உறவு கொண்டதாக குற்றஞ்சாட்டி கத்துகின்றான். அவமானம் பொறுக்க முடியாத வண.பிதா தன்னைத் தானே சுட்டுக் கொல்கின்றார். இதனை விசாரிக்கவே வண.பிதா கார்சியா அங்கு வருகின்றார். அவர் அங்கு வந்த பின்னர் அவ்வில்லத்தில் நடைபெறும் பல சட்ட மீறல்களை அறிந்து கொள்கின்றார். முன்னாள் வணக்கத்துக்குரிய பிதாக்கள் தங்கியிருக்கும் இல்லத்தை வண.பிதா கார்சியா மூடப்போவதாக தெரிவிக்கின்றார்.

தங்கள் இருப்பையும் அடையாளத்தையும் காப்பாற்றிக் கொள்ள வண.பிதாக்களும் பெண் துறவி மொனிக்காவும் செய்யும் மனிதாபிமானமற்ற வன்முறைகள் குரூரமானவை. இறுதியில் பாதிக்கப்பட்ட மீனவர் வண.பிதாக்களின் இல்லத்தில் ஒரு உறுப்பினராக தங்க வண.பிதாக்கள் சம்மதிப்பதுடன் படம் முடிவடைகின்றது.

படத்தில் கிறிஸ்தவ மதத்துக்கு எதிராக எந்தவித கருத்துக்களும் முன்வைக்கப்பட வில்லை. மாறாக மதத்தை கையில் எடுப்பவர்களையே விமர்சிக்கின்றது. தன்னை ஒரு அரசியல் இயக்குனர் என லறைன் குறிப்பிடாவிட்டாலும் அவர் ஒரு சமூக அரசியலை துணிச்சலாக விமர்சிப்பவர் என்பதற்கு இப்படம் சாட்சியம்.

இப்படம் பேர்லின் திரைப்பட விழாவில் நடுவர் சிறப்பு விருதைப் பெற்றது. Silver Bear Grand Jury Prize

தொடரும்....

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

**KOKUVIL NIGHT - 2015**

காலம்: *Saturday, November 21st, 2015*
நேரம்: *6:30 pm*
இடம்: *J & J Swagat Banquet Hall*
*415 Hood Road, Unit 22,*
*Markham, ON L3R 3W2*

கொ.இ.க. பழைய மாணவர்கள் அவர்கள் குடும்பத்தினர், நண்பர்கள், விருந்தினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வைபவத்தில் கொ.இ.கல்லூரி முன்னைநாள் ஆசிரியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொடர்புகளுக்கு: *416.414.3327 / 647.609.5392*
*416.283.1439*




# ஐந்து பிரதான...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

## மனநிலை ஒழுங்கீனங்கள் *(Mood disorders)*


மகிழ்ச்சியாகவும் சிலவேளைகளில் கவலையுடனும் இருப்பவர்களே இம்மனநிலை மாறுபாடு உள்ளவர்களாவர். அமெரிக்காவில் 7 வீதமானவர்கள் இப்பாதிப்புக்கு உட்பட்டுள்ளனர். காலநிலை மாற்றம் போல இப்பிரச்சினைக்கு உள்ளானவர்களும் அடிக்கடி மனம் மாறுவர். பொதுவாக நெருக்கடியான சூழ்நிலையில் வேலை செய்யும் உத்தியோகத்தினருக்கு இப்பிரச்சினைகள் அடிக்கடி எழலாம்.

மனநிலை ஒழுங்கீனமானவர்களில் உளச்சோர்வு (Depression) மூலம் பாதிப்புறுபவர்களே அதிகம். தினசரி வாழ்வில் தம் மகிழ்ச்சியை இழந்து பல்வேறு சிக்கலுக்கு உட்படுபவர்கள் இவர்களாவர். வயது வேறுபாடின்றி உளச்சோர்வு பலரை வாட்டி வதைக்கின்றது. தொடர்ச்சியான துக்கம், பதற்றம், வெறுமை உணர்வு, நம்பிக்கையின்மை, நித்திரைக்குழப்பம், தோல்வி எண்ணம் ஏற்படலாம். இதனால் தான் உளச்சோர்வுள்ளவர்கள் பலர் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றனர். இவர்களுக்கு உடலியல் ரீதியிலும் பாதிப்பு ஏற்படலாம். உலகெங்கிலும் உளச்சோர்வுள்ளவர்களின் தொகை கூடி வருகிறது.

மனநிலை ஒழுங்கீனமுள்ளவர்களில் இருமுனை ஒழுங்கீனம் (Bipolar disorder) ஒரு வகையாகும். இவர்களில் சிலர் மேனியா (Mania) என்னும் அதீத செயற்பாட்டினராவர். மனவெறி என்னும் மேனியா ஒழுங்கீனமுள்ளவர்கள் திடீர் திடீர் என உணர்ச்சி வசப்படுவார்கள். இவர்கள் அதீத செயல்பாடுகளில் ஈடுபடுவர். இவர்கள் தவறான நம்பிக்கையுடையவர்களாவர். சிடு சிடுப்பு நிறைந்தவர்களாகவும், கடுமையாக சிந்திப்பவர்களாகவும் இருப்பர். அதிதீவிரமாக பல நூல்களை எழுதியவர்களும், அதிதீவிரமான பாலியல் உணர்வு உள்ளவர்களாகவும் இருப்பர். சிலர் ஆளுமை



வேறுபாடுகள் (Personality Disorders) உள்ளவர்களாகவும் இருப்பர். இவர்களுக்கு Dysthymia என்னும் நோய் உண்டாகும். நம்பிக்கையின்மை, குறைந்த சுய கணிப்பு (Low self-esteem), நித்திரைக் குழப்பம், தீர்மானமின்மை இவர்களுக்கு ஏற்படலாம்.




## முரண்மூளை அல்லது யதார்த்த பிறழ்வு *(Schizophrenia)* ஒழுங்கீனம்

இது ஒரு கடுமையான மூளை ஒழுங்கீனமாகும். புத்தியிலும், மன எழுச்சியிலும் தடை ஏற்பட்டு பல சிக்கல்களை எதிர்கொள்ளும் நோய் இதுவாகும். மொழி, சிந்தனை, புலக்காட்சி, தன்னைப் பற்றிய எண்ணம் எல்லாமே மூளையால் பிளவுறும். இவர்கள் தமது மூளைக்குள் யாரோ குரல் கொடுக்கிறார்கள் என கூறுவர். அடிக்கடி தன்பாட்டில் சிரிப்பர், பேசுவர். இதனை மாயத்தோற்றம் (Hallucinatiion) எனலாம். சிலர் தமக்கு நிகழாத ஒரு செயலை இருப்பதாக உணர்வர். அதாவது தான் கடவுள், பணக்காரன், பிரசித்தமான மனிதன் என்றெல்லாம் தவறாக எண்ணுவதனை 'Delusion' எனலாம். பொதுவாக இந்நோய் பல குழப்பங்களின் கூட்டாகும். இளையோர்களை தாக்கும். இந்நோய் மிகவும் கடுமையான தொன்றாகும். பெண்களை விட ஆண்களுக்கு சராசரியாக 4 வருடங்களுக்கு முன்பே தோன்றிவிடுகிறது. இளவயதினர்களை கூடுதலாக பாதிக்கப்படுகின்றனர். மூளையில் ஏற்படும் இரசாயன ஒழுங்கீனங்கள், மரபணு மூலமான காரணிகள் இதற்கு உண்டு. உலகில் 1.3 வீதமான மக்களுக்கு இவ் ஒழுங்கீனம் உள்ளது. 100 பேரில் ஒருவருக்கு இந்நோய் ஏற்படுகிறது. உலக சுகாதார அறிக்கையின்படி 24 மில்லியன் மக்கள் இதனால் பாதிப்புற்றுள்ளனர். இவர்களது புலக்காட்சிகள் (Peresptions) எல்லாமே மாறுபாடாக தோற்றமளிக்கும்.

## முதுமை மறதி அல்லது அறளை பெயர்தல் *(Dementia)*

விழிப்புநிலை அறிவுநிலை என்பன மாற்றமுறுவதும் ஒரு மனநோயாகும். இதனால் அறிவும், உடலியல் செயற்பாடும் பாதிப்புறும். இதில் அல்சைமர், பாக்கின்சன் நோய், ஹன்ரிங்ரன் நோய் என்பன ஏற்படலாம். மருத்துவத்திற்கான ஓப்பிய (Opioids) மருந்துகளின் பாவனை, மது அருந்துதல், நுகர்வு மருந்துகள், பாதரசம் (Mecury), ஈயம் போன்ற பாவனைகளால் இந்நோய் ஏற்படலாம்.

## உணவு உண்ணும் ஒழுங்கீனம் *(Eating disorder)*

இது மிகக் கடுமையானதும், உயிராபத்தை விளைவிக்க கூடியதும் ஆகும். குறிப்பாக பெண்களே இவ்விதமான ஒழுங்கீனமுடையவர்களாவர். இவர்கள் சிறிய அளவு, பெரிய அளவு, ஒழுங்கீனமற்ற முறையில் உணவுகளை உண்டு தங்கள் உடல் நிறையை குறைக்க முயல்கின்றனர். இதில் 3 வகை உண்டு. வயிற்றுப்போக்கை அடுத்து உணவு உண்ணல் - பெரும்பசி உளநோய் (Bulimia Nervosa), பசியற்ற உளநோய் (Anorexia nervosa), தேவையற்ற உணவுகளை உண்ணுதல் (Eating disorder) என்பனவாகும். இவ்வகையினர் கட்டுக்கடங்காத உணவினை உண்டு பின்பு சத்தி எடுப்பார்கள். எல்லாருமே தமது உடல் எடையை குறைத்தல், உடல் மெலிதல் போன்றவற்றில் கண்ணாயிருப்பர். முன்னாள் பிரித்தானிய இளவரசி டயானாவுக்கு கூட இந்த Bulimia Nervosa பிரச்சினை இருந்துள்ளது. இளம் ஆண்களுக்கு கூட இந்த ஒழுங்கீனம் உள்ளது. அதேவேளை கண்ட கண்ட உணவுகளை உண்டு கஷ்ட முறுகின்றவர்கள் இவர்கள். உளச்சோர்வு, பதற்றம், ஆளுமை ஒழுங்கீனம், போதைப் பொருட் பாவனை என்பவற்றால் கஷ்டமுறுகின்றனர்.

மனநோய்கள் உள்ள இவர்களுக்கு உளச்சிகிச்சை, சத்து உணவுப்பாவனை, மருந்துப் பாவனை, சமூக நடவடிக்கை, அறிவுசார் சிகிச்சை போன்ற புதிய நடவடிக்கைகள் செய்தல் மூலம் இவர்களை காப்பாற்ற முடியும். இந்த மனநோயாளிகள் மீது அனுதாபம் கொள்வதும் உதவி செய்வதுமே இன்றுள்ள தேவையாகும்.


வாகன MOTOR VEHICLE
விபத்து ACCIDENT
SKT PARALEGAL SERVICE
CRIMINAL MATTERS
SUMMARY
416.803.5296
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SK THEESAN
TRAFFIC TICKETS
LICENSED PARALEGAL
sktheesan@gmail.com
MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY
TRAFFIC TICKETS
DON'T
MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS
CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE


வன்னியின் வரலாறு பேசும் இரு நூல்களின்
வெளியீடும் அறிமுகமும்.
போர்க்கால நாவல் "வன்னி"
"வன்னி வரலாறும் - பண்பாடும்" கட்டுரைத் தொகுதி
காலம்:
21.11. 2015 சனிக்கிழமை பி.ப. 4:30 -8.30 வரை
இடம்:
கனடா ஐயப்பன் இந்து ஆலயம், மிடில்பீல் றோட்டு
(Middlefield & Finch)
தலைமை:
பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்கள்
அமர்வு 1:
போர்க்கால நாவல் வன்னி
கருத்துரைகள்:
• திருமதி. ராஜ்மீரா இராசையா எம்.ஏ.
• திரு. புனிதவேல் (பொறியியலாளர்)
வெளியீட்டுரை:
•கவிநாயர் வி.கந்தவனம்
அமர்வு 2:
"வன்னி வரலாறும் பண்பாடும்"
கருத்துரைகள்:
• பேராசிரியர் சேரன் உருத்திரமூர்த்தி
• முனைவர் பார்வதி கந்தசாமி
வெளியீட்டுரை:
• முனைவர் பால சிவகடாட்சம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
விழாக் குழுவினர்


Ajax | Markham | Scarborough
நடன வகுப்புகள் ஆரம்பம்
Bharathanatyam
Bollywood
Gaana
irudaya
DANCE COMPANY
ஆசிரியர்கள்:- "நாட்டியகலாமணிகள்"
நிவேதா மூத்ததம்பி
கீர்த்தனா அருளானந்தராஜா
• அரங்கேற்றம் முடித்த மாணவிகள் (ஆசிரியர்: - வாசு சின்னராசா)
• அண்ணாமலைப் பல்கலைகழகப் பட்டதாரிகள் (Canada Campus)
• நடன அமைப்பாளர்கள் (8 வருட அனுபவம்)
• மேடை நிகழ்வுகளில் பல வருடங்களாக சிறந்த அனுபவம்
மேலதிக தொடர்பகளுக்கு:
(647)967-1994 (416)319-0164

# NK Movers (NK)

## We make moving easy!




***Proudly moving the local community for the last 20 years***

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

## WE SPECIALIZE IN:

- RESIDENTIAL MOVING
- COMMERCIAL MOVING
- LONG DISTANCE MOVING

மேலதிகமாக

**$50**

கழிவினை பெறுவதற்கு இக்கூப்பனைக் காட்டவும்

### QUESTIONS TO ASK

Choosing a moving company is a major decision. Making sure to learn about a company's cost and service is very important. Once you are comfortable then make your final selection.

- Are you an insured company?
- Is your staff trained?
- Do you offer free estimates?
- What payment option is available? Is a deposit required?
- Is there a contact number I can contact on move day if there are any questions or challenges?
- Are there additional charges for:
  Stairs?
  Travel time from your location to mine?
  Evenings and weekends?

**TEL: 416-566-4260**

**FAX: 1-888-614-9373**

**TEL: 1-800-895-8362**

WWW.NKMOVERS.CA

clientsupport@thenkmovers.com

**32 Howden Road - Unit 2. Toronto, M1R-3E4**



















**Free Real Estate Class** - Call: **416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

